egistered as a Newspaper in Sri Lanka

# அல்ஹஸனாத்

الحسنات اسلامية - شهرية تصدرها الجماعة الاسلامية السيلانية

றபீயுல் ஆகிர் - ஜமா. அவ். 1403 ★ பெப்ரவரி 1983

விரைவில் எதிர்பாருங்கள் !

இலங்கை ஜமாஅதே இஸ்லாமி

வெளியிடவுள்ள

1. செய்திப் பத்திரிகை
2. மாதமொரு இஸ்லாமிய வெளியீடு

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

Ceylon Jama' ath-e - Islami
204/1 Dematagoda Road, Colombo-9.

## அதிகார பலத்துடன்

# அரங்கேற்றப் பட்டுள்ள சூதாட்டம்

## மக்களின் உழைப்பை அரசு சுரண்டுகிறது!

நமது நாட்டு மக்கள் அனைவரும் இன, மத, மொழி வேறுபாடின்றி தேசிய ரீதியில் சூதாடிகளாக மாறுவதற்கு தற்சமயம் அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி சுவீப் டிக்கட் வழிவகுத்துள்ளது. இன்று இதன் கொடுமைக்கு இலக்காகி ஆண் - பெண், மேலதிகாரி - மூடைச் சுமப்பவன், ஆசிரியர் - மாணவன், முதலாளி - தொழிலாளி என்ற பாகுபாடின்றி பலரும் சிக்கிச் சீரழிகின்றனர். தமது அதிர்ஷ்டத்தை இச் சுவீப் டிக்கட்டுகளில் சுரண்டிப் பார்க்கச் சென்றவர்களுள் பலர் தமது மனநிம்மதியும், பணமும் சுரண்டப்பட்டவர்களாக வெறுங்கையுடன் வீடு செல்லும் பரிதாபம் தெருவெல்லாம் பார்க்க முடிகின்றது. இந்த நிலை தொடருமானால் இந்நாட்டு மக்களின் மனத்தூய்மை மேலும் கெட்டு வேறு பல அனர்த்தங்களுக்கு வழிவகுக்கலாம். எனவே, இதனை காலதாமதமின்றி உடனடியாக நிறுத்தி விடவேண்டும் என இந்நாட்டு மக்கள் சார்பில் அல்ஹஸனாத் அரசிடம் கேட்கின்றது.

நமது நாடு மிகச் சிறிய நாடு. இன, மத வேறுபாடுகளுக்கு அப்பாலிருந்து நோக்கினால் பல நல்ல பண்புகளைக் கொண்ட மக்கள் வாழும் நாடு. உலக மட்டத்திலே இதற்கொரு தனியிடம் இருக்கிறதென்றால், இதன் மக்களின் பண்புகளே காரணம். இத்தகைய நாடொன்றில் மிகவும் மோசமான சூதொன்றுக்கு வழிவகுக்கும் இந்த சுவீப்பை அறிமுகப்படுத்தியமைக்காக நல்லன விரும்பும் எவரும் திருப்தியுறமுடியாது.

### இது அபிவிருத்திக்கா?

நாட்டை அபிவிருத்தி செய்யும் பொருட்டு பணம் திரட்டவே இச்சுவீப் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. நாடு அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்பது மறுப்பதற்கில்லை. அதற்காக மக்களின் வாழ்வையே கெடுத்து குட்டிச் சுவராக்கும் ஒரு சூதை அறிமுகப்படுத்துவதா? இச் சுவீப் மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டு நாடு அபிவிருத்தி செய்யப்பட்டாலும், இறுதியில் இதே நாட்டுக்கு அவமானத்தைத் தேடித்தரும் அக்கிரமக்காரர்கள் இதே சுவீப்பினால் உருவாகுவார்களானால் நாடு அபிவிருத்தியடைந்துதான் என்ன பயன்? அபிவிருத்தியடைந்த நாட்டில் வாழ அருகதையற்றவர்கள் அல்லவா எங்கும் நிறைந்திருப்பர்?

சில கயவர்கள் கொலை, கொள்ளை, கசிப்பு தயாரித்தல், சூது விளையாடுதல், இலஞ்சம் வாங்குவது போன்றதீமைகளில் ஈடுபட்டு மக்களின் வாழ்வை சுரண்டிப் பிழைக்கிறார்கள். அதுவும் பயந்து, ஒதுங்கி, பதுங்கி, இரகசியமாகத்தான் செய்கிறார்கள். வேதனைமிக்க இக் கொடுஞ் செயல்களை வேரோடு பிடுங்கி எறிய வேண்டிய அரசு, அவற்றையெல்லாம் மிகைத்த வகையிலான நவீன சூதாட்டமொன்றை அறிமுகப்படுத்துவது ஆகுமா? குற்றங்களை தண்டிக்க வேண்டியவர்களே குற்றம் செய்தால்; வேலியே பயிரை மேய்ந்தால் யார் சட்டத்தை அமுல்படுத்துவது?

### எங்கும் சுவீப்!

இப்பொழுது எதற்கெடுத்தாலும் சுவீப் என்ற நிலை உருவாகியுள்ளது. அதற்கென லொத்தர் சபையே இருக்கின்றது. ஒருகாலத்தில் காலி ஜிம்கானா டிக்கட் எழுதவென பையும் பேனவுமாக

(2-ம் பக்கம் பார்க்க)

# அல்ஹஸனாத்
### ஆசிரியர் கருத்து

## கல்வி வெள்ளை அறிக்கை

இந்த அரசினால் முன்னர் வெளியிடப்பட்ட கல்வி வெள்ளை அறிக்கை மக்களின் பலத்த விமாசனத்துக்கு ஆளானது வாசகர்கள் அறிந்த விடயம். குறிப்பாக கொத்தணிப் பாடசாலை முறைபற்றி பலரும் கருத்துக் தெரிவித்திருந்தனர். அக் கருத்துக்களுள் அனேகமானவை உத்தேச கொத்தணிப் பாடசாலை முறையை ஏற்பதாக இருக்கவில்லை.

அதன் பின்னர் கல்வி வெள்ளை அறிக்கை சம்பந்தமான விடயங்கள் எவ்விதச் சலசலப்பும் இன்றி மறைந்த தொன்றாகவே இருந்தது. இப்பொழுது மார்ச்சு மாதம் முதல் அதன் சிபாரிசுகள் அமுலுக்கு வரும் எனக் கூறும் செய்திகள் சமயம், தொழிற் கல்வி என்ற பாடங்களைப் பற்றி பின்னர் முடிவுசெய்யப்படும் என்றும் குறிப்பிடுகின்றன.

இது விடயமாக மக்கள் எப்பொழுதும் விழிப்புடன் இருக்க வேண்டும். குறிப்பாக முஸ்லிம்கள் மிகுந்த அவதானமாக இருந்து காரியமாற்ற வேண்டும்.

எம்மைப் பொறுத்த வரையில் கல்வித் துறை எமது ஈமான், இஸ்லாமிய வாழ்க்கை முறை, ஒழுக்கத்துக்கு உத்தரவாதம் தரும் பாடசாலை அமைப்பு, என்பவற்றைக் கொண்டிருகக வேண்டும். ட்டுக் கல்வி முறையை எவ்வகையிலும் ஆதரிக்க முடியாது. அத்துடன் கலாசார, பண்பாட்டு முறைகளால் வேறுபட்ட சமூகங்கள் குறித்தொரு கொத்தணி அமைப்பில் வருவதும் சாத்தியமிராது. சாத்தியப்பட்டாலும் ஒன்றுக் கொன்று முரண்பட்ட சிந்தனையும், கோட்பாடும், நடைமுறையும் கொண்ட பல சமூக மாணவ மாணவிகளை ஒரே தலைமையின் கீழ் இயக்குவது பலவகையான நிர்வாகப் பிரச்சினைகளையும் உருவாக்கும்.

எனவே, மார்ச் மாதம் முதல் அமுலுக்கு வரும் இக் கல்வி வெள்ளை அறிக்கையின் அமுலாக்க சந்தர்ப்பத்தில் பிரச்சினைக்குரிய எதுவும் காணுவோமானல், உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்குரிய முறையில் முஸ்லிம்கள் செயல்பட வேண்டும். காலங் கடந்து விட்டால் தவருன - முஸ்லிம்களுக்குப் பாதகமான விடயங்களாயினும் அவைகளே ஆகுமானதாகி விடலாம். அதன் பின் அவற்றை நீக்க முயற்சிப்பது பெரும் பிரச்சனையாக மாறலாம்.

மேலும் எக்காரணத்தைக் கொண்டும் சமயக் கல்வியை பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என்று பின் தள்ளுவது சரியல்ல. இது அரசாங்கம் அவ்வப்போது கூறிவரும் ''சமய அடிப்படையில் தான் மக்களின் வாழ்வு அமைய வேண்டும்'' என்ற கருத்துக்கும் முரணானது.

எனவே, சமயத்தைத்தான் முதல் பாடமாகக் கொள்ள வேண்டும், அது முடியாவிடத்து, மற்றெல்லாப் பாடங்களையும் அமுலுக்குக் கொண்டு வரும் போதாவது சமயக் கல்வியையும் அமுலுச்குக் கொண்டு வருதல் வேண்டும்,

ஏனெனில் சமயம் என்பது மனித சிந்தனையை, ஆன்ம உணர்வுகளை ஒழுக்க ரீதியாக பண்படுத்திவிடும் தன்மை வாய்ந்தது. அதனை ஒதுக்கி விட்டால் வாழ்வில் எதுவும் இராது. மனிதன் ஒரு யந்திரமாகவே வாழ முற்படுவான். தீமைகள் சர்வ சாதாரணமாக எங்கும் பெருகி வரும்.

இன்று மனிதன் மத்தியில் சமய செல்வாக்குக் குறைந்து ''எப்படியும் வாழலாம்!'' என்ற பாதகமான சிந்தனை வளர்ந்து வரும்போது, பாடசாலை மட்டத்திலும் அதற்குத் துணையாவது போல் சமயக் கல்வியை பின் போடுவது அறவே கூடாது.

எனவே, அரசு இது பற்றி நன்கு சிந்தனை செய்ய வேண்டும். அரசின் செயற்பாடுகள் பற்றி மக்களும் அதிக அக்கறையுடன் இருந்து, தவறுகளைச் சுட்டிக்காட்டி நற்பணி புரிய முன் வருதல் வேண்டும்.

## அரங்கேற்றப் பட்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிலர் வீடு வீடாகத் திரிந்து சூதுக்கு ஆள் திரட்டினர். பிறகு தேசிய லொத்தர் சுவீப் செவண, மஹஜன சம்பத, சியவச கப் உதாவ சுவீப், மஹாப்பொல சுவீப் போன்ற கணக்கற்றவை தோன்றி இறுதியாக ராஜமகுடம் தாங்கியதுபோல் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப் பட்டுள்ளது அதிர்ஷ்டத்தைச் சுரண்டிப் பார்க்கும் அற்புதமான டிக்கட். அடுத்து என்னவோ!

இதனுல், மாதம் முழுக்க உழைத்த பணத்தை இழந்து வெறுங் கையும் வேதனையுமாக வீட்டுக்குப் போவோர் பலர்; சந்தைக்குப் பொருள் வாங்க வந்த இடத்தில் 'கொடுப்பது ஒரு டிக்கட்டுக்கு பத்து ரூபாய்தான், கிடைப்பதோ ஒரு லட்சம் ரூபாய்' என்ற ஒலிபெருக்கியின் நாதம் கேட்டு பணத்தையிழந்து விழி பிதுங்கி, பணமுமின்றி பொருளுமின்றி வீட்டுக்குப் போய் மனைவியிடம் ஏச்சு வாங்குவோர் பலர்; அம்மாவிடமும் அப்பாவிடமும் சண்டைப்பிடித்து காசு வாங்கிவந்து அதிர்ஷ்டம் கிட்டாது அடுத்த முறையும் அம்மா அப்பாவுக்குத் தொந்தரவு கொடுக்கும் மாணவர்கள் பலர். கடைசியில் பணத்துக்காக பஞ்சமா பாதகங்களைச் செய்வோர்தான் பெருகுவர்.

### அபிவிருத்தி என்ருல் என்ன?

அபிவிருத்தி என்பது வெறும் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்வது, நகரங்களை அழகுபடுத்துவது, பாரிய பொருளாதாரத் திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்துவது, கட்டிடங்களை ஒன்றுக்கொன்று உயரமாகவும், அழகாகவும் கட்டுவது, ஒவ்வொரு வீட்டிலும் காலையிலிருந்து மாலை வரை அலரும் கெசற்றுக்களையும், மாலையானல் மக்கள் எல்லாரும் பதிமயங்கி வசதியுள்ளோர் வீடுகளிலும் வசதியில்லாதோர் தெருவோரங்களிலும் பார்த்து ரசிக்க டெலிவிஷனை அறிமுகப்படுத்துவது என்பவற்றில் இல்லை.

இத்தனையும் பெற்றுக் கொண்டதொரு சமுதாயத்தில் நீதி, நேர்மை, நல்லொழுக்கம், நற்பண்பு, தியாக உணர்வு, மற்ருரின் உரிமைகளைமதித்தல், கிடைத்ததைக் கொண்டு திருப்தியுறுதல் போன்ற நற்குணங்கள்–பொதுவாக தூய மனம் இல்லாத மக்கள் நிறைந்து காணப்பட்டால் அந்த சமுதாயம் அபிவிருத்தியடைந்தது என எவ்வாறு கூறமுடியும்?

### தார்மிக அரசு

மற்றெந்த அரசையும் விட இந்த அரசிடம் இவைகளைப் பற்றி கேற்பதற்கு நிறைய நியாயங்கள் உண்டு?

(18ம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம் உலகம் எதிர்நோக்கும் சவால்கள்!

பேராசிரியர் ஜாபர் செய்க் இத்ரீஸ் அவர்கள் தற்போது ரியாத்திலுள்ள இமாம் முஹம்மத் இப்னு சுஊத் இஸ்லாமிய பல்கலைக் கழகத்தில் 'சமகால சிந்தனைகள்-ஒப்பீட்டாய்வு' விரிவுரைகள் நடத்தி வருகின்றார்கள். முன்பு இவர் சூடானின் கார்டூம் பல்கலைக் கழகத்தில் ''தத்துவவியல்'' விரிவுரையாளராகக் கடமைப் புரிந்துள்ளார். இவர் ஹொங்கொங்கிலிருந்து வெளிவரும் 'ஹொங்கொங் முஸ்லிம் ஹெரல்ட்'' பத்திரிகைக்கு அளித்த பேட்டியின் தழுவலே இக்கட்டுரை.

பேராசிரியர் **ஜாபர் செய்க் இத்ரீஸ்**

இன்றைய முஸ்லிம் உலகம் எண்ணற்ற சவால்களை எதிர்நோக்கி நிற்கின்றது, அந்த சவால்களின் ஊற்றுக் கண்களாக முதலாளித்துவம், கம்யூனிஸம், காலனித்துவம் என்பவற்றைக் குறிப்பிடலாம். இவை முஸ்லிம்களின் சிந்தனையிலும் செயற்பாட்டிலும் பெரும் சிதைவை ஏற்படுத்தியுள்ளன.

இன்று கம்யூனிஸ நாடுகள் கம்யூனிஸக் கருத்துக்களைக் கொண்ட ஏராளமான நூல்களைப் பல மொழிகளிலும் வெளியிட்டு, வினியோகித்து வருகின்றன. சிறிய செய்திப் பத்திரிகை விற்பனை நிலையங்கள் முதல் பாரிய புத்தக விற்பனை ஸ்தாபனங்கள் வரையிலான எல்லா இடங்களிலும் இந்நூல்கள் மிகவும் குறைந்த விலையில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. நாட்டுப் புறத்து சாதாரண பாடசாலை மாணவன் முதல் பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பு படிக்கும் மாணவன் வரையிலான சகலரும் இவற்றை இலகுவாக பெற்றுப் படிக்கும் வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும் கம்யூனிஸ நாடுகளில் மாணவர்கள் உயர் கல்வி கற்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அந்நாடுகளுக்கு போய் வருவதற்கான இலவச பிரயாண வசதிகளும் அளிக்கப்படுகின்றன.

இத்தகைய செயற்பாடுகள் மூலம் இன்றைய முஸ்லிம்கள் திசை திருப்பப் படுகின்றனர். அவர்கள் இஸ்லாமிய சிந்தனையிலிருந்தும் செயற்பாடுகளிலிருந்தும் விடுபட்டு கம்யூனிஸ- நாத்திகக் கருத்துகளை ஏற்கும் நிலைக்குத் தள்ளப் படுகின்றனர்.

மற்றொரு வகையில் சில வறிய முஸ்லிம் நாடுகள் கம்யூனிஸ அணிக்குள் தனது வறுமை காரணமாக சிக்கி விடுகின்றன. அந்த நாடுகளின் முஸ்லிம்கள் கம்யூனிஸத்தை விரும்பாதிருக்கலாம். ஆனால், அங்கு கம்யூனிஸத்துக்குச் சார்பான ஒரு சிறு குழுவினர் திட்டமிட்டு இயங்கி, நாட்டில் நிலவும் வறுமை நிலையைப் பயன்படுத்தி, நாட்டை கம்யூனிஸ வல்லரசுகளின் பிடிக்குள் கொண்டு சென்று விடுகின்றன.

உதாரணமாக, எதியோப்பியா, தென் யெமன் போன்ற நாடுகளைக் குறிப்பிடலாம், அந்நாடுகளில் வாழும் முஸ்லிம்கள் கம்யூனிஸத்தை விரும்பாவிடினும், அங்கு திட்டமிட்டு இயங்கிய சிறு கம்யூனிஸக் குழுக்கள் அந்நாடுகளை கம்யூனிஸ அமைப்பிற்குள் கொண்டு சென்றுவிட்டன. வல்லரசு நாடுகளும் அந்த சிறிய கம்யூனிஸக் குழுக்களுக்கு சகல வழிகளிலும் பக்கபலமாக நின்று உதவின.

உண்மையில். இவைதான் கம்யூனிஸ அணியிலிருந்து முஸ்லிம் உலகம் எதிர்நோக்கியுள்ள சவால்களாகும். மறு பக்கத்தில் மேற்கத்திய சிந்தனைகளைக் கொண்ட முதலாளித்துவம் மற்றொரு சவாலாக அமைந்துள்ளது என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

இன்று எமது கல்வித் துறையை எடுத்துக் கொண்டால் முதலாளித்துவ பொருளாதார முறையை ஊக்குவிக்கும் வட்டிக்கு, முதலிடம் அளிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்; மேற்கத்திய சிந்தனைகள். கலாசார பண்பாடுகளின் ஊடுருவலைக் காணலாம்; ஆண் பெண் சேர்ந்து படிக்கவும், இஸ்லாம் விரும்பாத கலை, இலக்கிய, விளையாட்டு நிகழ்ச்சிகளில் ஆணும் பெண்ணும் எந்தவித தடையுமின்றி சுதந்திரமாக ஈடுபடவும் அவசியமான சூழல் உருவாக்கப்பட்டுள்ளதைத் தெளிவாகக் காணலாம்.

கல்வித் துறையில் உள்ள இந்த சூழ்நிலை எம்மை அறியாமலே எம்மை மேற்கத்திய சிந்தனையின்-குறிப்பாக அமெரிக்க வல்லரசின் அடிமைகளாக்கி விடுகிறது. அதன் பின்னர் நாம் சிந்திப்பதும், செயல்படுவதும் அவர்களின் வழிகாட்டுதலுக்கேற்பவேயாகும்.

காலனித்துவ அமைப்பு இத்தகைய அநியாயங்களை எமது நாடுகளில் செய்வதற்கு நல்லதொரு வாய்ப்பை அவர்களுக்கு அளித்துவிட்டது எனலாம். முன்புதான் வல்லரசு நாடுகள் எமது முஸ்லிம் நாடுகளை இராணுவ கெடுபிடிகள் மூலம் அடிமைப் படுத்தி, ஆட்சி புரிந்து எமது வாழ்வைக் கெடுத்து, செல்வங்களையும் சுரண்டிக் கொண்டு போயின.

ஆனால், இன்று அந்த நிலை அனேகமாக இல்லையெனலாம். எனினும் அவர்களது ஆதிக்கம் மற்றொரு வகையில் நிலைபெற்றுள்ளது. முஸ்லிம் நாடுகளில் தமக்கு சாதகமான ஒரு குழுவைக் கண்டு பிடித்துக் கொள்வார்கள்; இல்லையேல் அப்படியானதொரு குழுவைத் தோற்றுவிப்பார்கள். அதன்பின் அத்தகைய குழுக்களுக்கு பணத்தை வாரியிறைத்து தமது சிந்தனைகளையும், கலாசார பண்பாடுகளையும் அவற்றின் மூலம் நாட்டில் பரப்புவார்கள். இஸ்லாமிய எழுச்சிக்காக உழைக்கும் இயக்கங்களை நசுக்கவும், அவற்றுக்குத் தவறான நாமங்களைச் சூட்டி அவைப் பற்றித் தப்பபிப்பிராயங்களை ஏற்படுத்தவும் முனைவார்கள்.

உதாரணத்துக்கு, ஈரானில் இயங்கிய படுபாதக, பயங்கரவாத 'முஜாஹிதீனே ஹல்க்' என்ற சிறு குழுவினரை எடுத்துக் கொள்ளுங்கள். அவர்கள் உண்மையில் கம்யூனிஸ்டுகளல்ல. ஆனால் இடது சாரிகள், இஸ்லாத்தின் எதிரிகள். எனவே, இவர்

(17-ம் பக்கம் பார்க்க)

# உலகச் செய்திகள்

திரட்டித் தருபவர் :

**— அல் முஜாஹித் —**

### ✱ மேற்கின் ஆதிக்கம் வேண்டாம்!

ஈரான்: 'உலகில் எத்தனையோ புரட்சிகளைக் கண்டும், கேட்டும் இருக்கிறோம். ஈரானில் நடைபெற்ற இஸ்லாமியப் புரட்சியைப் போன்று குறைந்த இழப்புகளுடன் கூடுதலான பலனை அளித்ததாகக் குறிப்பிடக்கூடிய அளவுக்கு அவற்றில் ஒன்றுகூட இல்லை.''

இமாம் குமைனி, தெஹ்ரானிலுள்ள மில்லி பல்கலைக் கழக ஆளுநர் சபையினர், பேராசிரியர்கள் ஆகியோர் மத்தியில் அண்மையில் உரையாற்றிய போது இதனைத் தெரிவித்தார்.

இமாம் தமது உரையில் மேலும் கூறியதாவது: ஒரு நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள் சீர்திருந்திவிட்டால் அந்நாடே திருந்திவிடும். ஏனெனில், நாட்டின் சட்ட, நிர்வாக, நீதித்துறைகளில் பொறுப்புவாய்ந்த பதவிகளை வகிப்போர் பல்கலைக்கழகப் பட்டதாரிகளும், உலமாப் (அறிஞர்) பெருமக்களுமேயாவர்.

''மேற்கு நாடுகளுக்கும், மேற்கத்திய 'எஜமானர்'களுக்கும் ஊழியம் புரிவதிலேயே பொதுவாக பல்கலைக் கழகங்கள் காலத்தைக் கழிக்கின்றன'' இந்நிலை மாற வேண்டும்.

''நமது இன்றைய நிலையைப் பற்றிக் கவலைப்படக் கூடாது. நாட்டின் நாளைய எதிர்காலத்திலும், இஸ்லாத்தின் வளர்ச்சியிலுமே நாம் கண்ணும் கருத்துமாய் இருக்க வேண்டும்'' — இவ்வாறு இமாம் குமைனி கூறினார்,

(கேஹன் இண்டர்நெஷனல், தெஹ்ரான்)

### ✱ ஹுஸ்னி முபாரக்கின் கபட நாடகம்!

எகிப்து: ஜனாதிபதி ஹுஸ்னி முபாறக், தமது அரசியல் ஞானாசிரியரான அன்வர் சாதாத் படுகொலை செய்யப்பட்டதனால் ஏற்பட்ட மனத்தாக்கத்திலிருந்து படிப்படியாக விடுபட்டு வருகிறார். ஆயினும் அவரது மாளிகையைச் சுற்றி பலத்த பாதுகாவல் போடப்பட்டிருக்கிறது! சிறையிடப்பட்டிருக்கும் உலகாயதவாதிகள், நாஸரின் அடிவருடிகள், இடதுசாரிகள் உட்பட 31 பேரை விடுதலை செய்ததன் மூலமும் பின்னர் அவர்களை வரவேற்றுபசரித்ததன் மூலமும், அவர்களில் சிலருக்கு தொழில் வாய்ப்புகள் வழங்கியதன் மூலமும் அத்தகையோரின் நல்லெண்ணத்தைப் பெற அவர் முயற்சித்துள்ளார். இஃது ஒரு கபட நாடகமாகும்.

முஸ்லிம் சிறைக் கைதிகளைப் பொறுத்தவரை விடுதலையான 31 பேரில் ஹஸ்னைன் ஹைகலும் ஒருவராவர். அவரிடம் ஜனாதிபதி முபாறக், ''எகிப்தில் இஸ்லாமியப் பயங்கரவாத இயக்கம் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டிருப்பதாகவும், ஆனால் முற்றாகத் துடைத்தெறியப்படவில்லையென்றும் ஆகையால் எல்லா முஸ்லிம்களும், அவர்கள் பயங்கரவாதிகளோ இல்லையோ தற்போது விதிக்கப்பட்டுள்ள காலக்கெடுவான 1982 ஏப்ரல் மாதம் வரை சிறையிலேயே இருந்தாக வேண்டும்'' என்றும் கூறியதாகத் தெரிவித்துள்ளார்.

இதே வேளையில், முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தின் தலைவர் 76 வயதான ஓமர் தில்மிசானி, கடுமையாகச் சுகவீனமுற்றதன் காரணமாக கஸ்ர்-அல்-ஐனி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

(இம்பெக்ட் இண்டர் நெஷனல் லண்டன்)

### ✱ இஸ்ரவேலிய அநியாயங்கள்

இஸ்ரவேல்: ஜாப்பா நகரிலுள்ள ஹஸன்பெக் மஸ்ஜிதை தீக்கிரையாக்க யூதர்கள் எத்தனித்தது இப்போது முஸ்லிம் நாடுகளின் பலத்த கண்டனத்திற்கு இலக்காகியுள்ளது.

இந்த நாசகாரச் செயலையிட்டு உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு இந்தோனேஷிய மஜ்லிஸே உலமா தலைவர் சுக்ரி கஸ்ஸாலி உட்பட முஸ்லிம் நாடுகளைச் சேர்ந்த அநேகர், ஐ. நா. பொதுச் செயலாளருக்கு அவசரத் தந்திகளையனுப்பியுள்ளனர்.

இப்பள்ளிவாசலின் காவல் அறையிலிருந்து கொழுந்து விட்டெரிந்த தீச்சுவாலைகளை, அவ்வழியாக நடந்து சென்ற ஒருவர் கண்டு, தீயணைப்புப் படையினருக்கு தகவல் கொடுத்ததனால் தீ மேலும் பரவி, மஸ்ஜித் முற்றாக எரிந்துவிடாது தப்பியது.

இந்த தீ வைத்தல் முயற்சியில் சம்பந்தப்பட்ட இஸ்ரவேல் இளைஞர்கள் நால்வரை பொலீசார் கைது செய்துள்ளனர். இவர்கள் பள்ளிவாசலுக்குள் அத்துமீறிப் பிரவேசித்தது சாட்சியங்களின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. சம்பவ தினத்திற்கு சில நாட்களுக்கு முன்பிருந்தே மேற்படி இஸ்ரவேல் இளைஞர்கள் தம்மை அச்சுறுத்திவந்ததாக பள்ளிவாசல் காவலாளி தெரிவித்துள்ளார்.

இஸ்லாமிய கலாசாரச் சின்னங்களான பள்ளிவாசல்கள் இஸ்ரவேலில் நாசப்படுத்தப்படுவது இது முதல் தடவையல்ல! இதற்கு முன்னரும் இவ்வாறான சதிவேலைகள் இடம் பெற்றுள்ளன.

ஜெரூஸலத்தில், முஸ்லிம்களின் முதல் கிப்லாவான பைத்துல் முகத்தஸ் எனப்படும் மஸ்ஜிதுல் அக்ஸாவுக்கு தீ வைக்கப்பட்டதைத் தொடர்ந்து அல் காலில் (ஹப்ரூன்) என்னுமிடத்திலும் தற்போது ஜாப்பாவிலும் இஸ்லாமியப் புனித ஸ்தலங்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கு முன்னர், பிரஸ்தாப ஹஸன்பெக் பள்ளிவாசலை உல்லாசப் பிரயாணிகளுக்குரிய பொழுது போக்கு விடுதியாகவும், வர்த்தக நிலையமாகவும் மாற்றியமைக்க இஸ்ரவேல் சூழ்ச்சி செய்தது.

இவ்வாறான திட்டமிட்ட நாசகாரியங்கள் சர்வதேச சட்டங்களையும், மத வழிபாட்டு விஷயத்தில் கடைப்பிடிக்கப்படும் அடிப்படை மனித உரிமைகளையும் மீறும் செயல்கள் என்றும் அவை உலக முஸ்லிம்களின் மனதைப் புண்படுத்துவதாகும் என்றும் ஐ. நா. பொதுச் செயலாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இம்பெக்ட் இண்டர்நெஷனல்) லண்டன்

### ✱ ஒரு பள்ளிவாசல் உருவாகப் போகின்றது

டென்மார்க்: இங்கு வசித்துவரும் சுமார் 30,000 முஸ்லிம்களுக்கென ஒரு பள்ளிவாசலும், கலாசார நிலையமும் கட்டப்படவுள்ளன. கலாசார நிலையம் மார்க்கக் கல்விக்கூடம், மாநாட்டு மண்டபம், இளைஞர் பயிற்சி நிலையம் என்பவற்றை உள்ளடக்கி இருக்கும்.

இப்பள்ளிவாசல் கட்டுவதற்கான பேச்சுவார்த்தைகள் கடந்த இரண்டு வருடங்களாக டென்மார்க் அரசுக்கும் முஸ்லிம் தூதரகங்களுக்குமிடையே நடைபெற்று வந்தன. இறுதியில் இதற்கு அனுமதி வழங்க அரசு இணக்கம் தெரிவித்துவிட்டது.

# பல அமைப்புக்கள் பிளவுக்கு வழிகோலும்.

மர்ஹூம் அல்ஹாஜ் மௌலவி யூ. எம். தாஸீன் எம். ஏ.

( நத்வி – அல் அஸ்ஹரி )

இறைவனுடைய சன்மார்க்கத்தை ஏற்றுக் கொண்டதொரு சமுதாயம் எவ்வாறு இயங்க வேண்டும் என்பதையும், அதற்கு மாறாகப் பிளவுபடும் இடத்து அதனால் ஏற்படும் விளைவு என்னவென்பதையும், இறைமறை வாயிலாக சென்ற இதழில் படித்தோம். இனி இன்றைய முஸ்லிம் சமுதாயத்தின் நிலைபற்றி ஆராய்வோம்.

இன்று இஸ்லாமும், அது விரும்பும் சமுதாயமும் (உம்மத்) தவறான விளக்கங்கட்கு ஆளாகிவருகின்றதைப் பார்க்கின்றோம். அகில உலகிலும் முஸ்லிம்களிடம் காணும் கருத்து வேறுபாடுகளும் பெருத்த பிளவுகளும் இதனாலேயே ஏற்பட்டுள்ளன. எனவேதான் நமக்கு நாமே சிறப்பை தேடிக்கொள்ள முடியாமலும் மற்றோருக்கு வழிகாட்ட முடியாமலும் திண்டாடித் தவிக்கிறோம். பொதுவாக, சிக்கல் நிறைந்ததொரு காலகட்டத்தில் இன்று நாம் இருக்கின்றோம் என்பதை இலகுவாக புரிந்து கொள்ள முடிகிறது. எனவே, எமது சிந்தனைகளை நாம் நிலைப்படுத்திக்கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் இறுதித் தூதரும் அவர்கள் வளர்த்த சமுதாயமும் வாழ்ந்து காட்டிய அடிப்படைகளை ஒரு நிலைப்படுத்தி எமது சிந்தனைக்குள் செலுத்த வேண்டும். ஏக இறைவன் அளித்த சன்மார்க்கத்தை நிலைக்கலனாகக்கொண்ட முஸ்லிம் சமுதாயமொன்றையே அவர்கள் உருவாக்கினார்கள்.

குலபாயே-ராஷிதீன்களின் மாபெரும் ஆட்சிக் காலத்தில் அல்லாஹ்வின் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் உருவாக்கிய அந்த சத்திய சமுதாயம் உன்னத நிலையில் இருந்தது. ''இஸ்லாத்தைப் பரிபூரணமாகப் பின்பற்றிய முஸ்லிம் சமுதாயமாகவே நாம் இருக்கின்றோம்'' என்று மார்தட்டிக் கூறும் அளவுக்கு மன உறுதியும், தூய வாழ்வும் அவர்களிடம் இருந்த காரணத்தினாலேயே அவர்கள் அன்று உயர்வு பெற்றுத் திகழ்ந்தார்கள். அன்று வாழ்ந்த அல்லாஹ்வின் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களது பெருமை மிகு சமுதாயத்திற்கும் பிரச்சினைகள் இல்லாமல் இருக்கவில்லை. பொருளாதாரப் பிரச்சினை இருந்தது; சமுதாயப் பிரச்சினை இருந்தது; கல்விப் பிரச்சினை இருந்தது; நாகரிகப் பிரச்சினை இருந்தது; அரசியல் பிரச்சினை இருந்தது: இன்று நாம் எந்தப் பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டுமோ, அவற்றைவிட ஒருபடி மேலான பிரச்சினைகட்கே அவர்கள் தீரத்தோடு முகம் கொடுத்தார்கள். பிரச்சினைக்குரிய பரிகாரத்தை அல்லாஹ்வின் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் விளக்கிய சன்மார்க்கத்திலிருந்தே சஹாபாக்கள் பெற்றுக் கொண்டார்.

''அல்லாஹ்வும், அவனது தூதரும் ஏதேனும் விடயத்தைப் பற்றிக் கட்டளையிட்டபின்னர் அவ்விடயத்தில் (அதனைவிட்டு) வேறு அபிப்பிராயம் கொள்வதற்கு விசுவாசியான எந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிமை இல்லை. (இவ்விடயத்தில்) அல்லாஹ்வுக்கும், அவனது தூதருக்கும் எவரேனும் மாறு செய்தால், நிச்சயமாக அவர்கள் பகிரங்க வழிகேட்டிலேயே இருக்கிறார்கள்.

(அல் குர்ஆன் 33; 36)

தொகுப்பு:
உவைஸிப்னு அப்துல் ஹமீத் ஆலீம்
(நாவல் நகர்)

அல்லாஹ்வின் இத்தகைய எச்சரிக்கைகட்கு மதிப்பளித்து அல்லாஹ்வுக்கும், அவனது இறுதித் தூதருக்கும் முழுமையாக அடி பணிந்து நடந்தார்கள் நபித் தோழர்கள். இவர்களே முன்மாதிரி உம்மத் (சமுதாயம்) தாக இமாம்களும், அவ்லியாக்களும் ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் இன்று நமது நிலை என்ன? அது தடம்புரண்டு விட்டது. இதற்குக் காரணம் என்ன? முஸ்லிம்கள் இஸ்லாத்தை சரியான முறையில் புரிந்து கொள்ளாததும், முஸ்லிம் சமுதாயத்தின் பொறுப்பை மறந்து விட்டதுமேயாகும். இது மட்டுமல்ல, சமூக, கல்வி, அரசியல், பொருளாதாரம், நாகரிகம் போன்ற நமது நானாவித விவகாரங்களையும் இஸ்லாத்திற்கு மாறான முறையில் தீர்த்துக் கொள்ள முயன்றதும் மற்றொரு காரணமாகும். சாதி, இனம், மொழி, தேசம், நிறம், வர்க்கம், தொழில் ஏற்றத்தாழ்வுகள் முதலியவைகளை அடிப்படையாகக் கொண்ட எத்தனையோ பிரிவுகளை இன்று எம்மில் கூட நாம் காண்கின்றோம். சங்கம், கழகம், இயக்கம், தாபனம், முன்னணி, கட்சி, சபை, மன்றம், நிலையம், லீக் போன்ற அமைப்பு முறைகளும் எம்மிடையே உள்ளன. போதாக்குறைக்கு அவ்வப்போது தோன்றும் பிரச்சினைகளுக்கு நிவாரணம் காண என்று திடீர் அமைப்புக்களும், அவைகளை அடிப்படையாகக் கொண்ட வேலைத் திட்டங்களும் போராட்டங்களும் உருவாகின்றன. இம்மட்டன்று. அல்லாஹ்வால் எச்சரிக்கப்பட்ட காபிரீன்களை இணைத்துக் கொண்டு, அதே வேளை முஸ்லிம்களை ஒதுக்கிவிட்டு செயல் படும் எத்தனையோ இயக்கங்களும் இன்று எம்மிலே உண்டு. இந்த ரீதியிலான இயக்கங்கள் சமுதாயத்தைப் பிளவு படுத்துவதை நாம் பார்க்கிறோம். சமுதாயத்தோடு அது நின்று விட்டது என்பது மட்டுமல்ல. மாறாக ஒரே சமூகத்தை ஒரே இனத்தை ஒரே ஊரைக் கூட அது பிரித்து வைத்து சின்னாபின்னப் படுத்துகிறது. எனவே ஒரு சமூகத்தில் நூற்றுக்கணக்கான அல்ல ஆயிரக்கணக்கான இயக்கங்களை

(6 ம் பக்கம் பார்க்க)

## பல அமைப்புக்கள்....

(5ம் பக்கத் தொடர்ச்சி)

வைத்துக்கொண்டு அச்சமூகப் பிரச்சினையை இவ்வியக்கங்கள் ஒரே முகத்தோடு தீர்த்து வைக்கும் என்பது பகற்கனவாகவே முடியும். முஸ்லிம் உலகிலும் முஸ்லிம் சமுதாயத்திலும் இன்று நாம் காணும் பரிதாப நிலை இதுவே.

இஸ்லாமிய அடிப்படையிலே இயங்க வேண்டும் என்று பேரார்வம் படைத்தவர்களும் கூட இஸ்லாத்தின் பெயரால் பல சங்கங்களை, இயக்கங்களை குறுகிய இலட்சிய வேட்கையோடு பல்வேறு நாமங்களைக் கொண்டு அமைத்து சமூகப் பிளவுகட்குக் காரணகர்த்தர்களாக இருக்கின்றனர். இந்த உண்மையை அகில உலக முஸ்லிம்களிடமும் நாம் காண்கின்றோம், இஸ்லாத்தை விளங்கிக் கொண்டதாகக் கூறும் அறிஞர்கள் பலரும் இதில் மாட்டிக் கொண்டனர் என்ற கசப்பான உண்மையை நாம் பகிரங்கமாக ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இவ்விடத்தில் திருக்குர்ஆனின் ''அல்-கஹ்பு'' எனும் சூரத்தில் உள்ள இரண்டொரு திருவசனங்களை இங்கு குறிப்பிட்டுக் கொள்வோம்.

''நபியே! (பாபமான) கருமத்தில் இவர்களைவிட நஷ்டமடைந்தவர்களை நான் உங்களுக்கு அறிவிக்கவா? என்று நீர் கேளும்.''

அவர்கள் (யாரென்றால்) இவ்வுலகில் தவறான வழியிலேயே முயற்சி செய்து கொண்டு தாங்கள் மெய்யாகவே நல்ல காரியங்களையே செய்வதாக எண்ணிக் கொள்கின்றனர்.''

''இத்தகையோர் தான் தங்கள் இரட்சகனின் வசனங்களையும், அவனை சந்திப்போம் என்பதையும், நிராகரித்து விட்டவர்கள். அவர்களுடைய நன்மைகள் யாவும் அழிந்துவிட்டன. அவர்களுக்காக மறுமைநாளில் எந்த எடை கோலையும் நிறுத்தப்படுவதில்லை.''

—(18: 103: 104: 105)

முஸ்லிம்களின் இன்றைய சீர்குலைந்த வாழ்வுக்கு இத்திருவசனங்கள் சிறந்ததொரு விளக்கமாகவும், எச்சரிக்கையாகவும் இருக்கின்றன. பல நாமங்கள் தாங்கி பல பிரிவுகளாகப் பிளவு பட்டு இருந்து கொண்டு நம்மில் ஒவ்வொருவரும் தானே நல்ல சேவை செய்வதாக வாதிட்டு வருவதை நாம் பார்க்கிறோம். இத்தகைய பாழ்பட்ட மனப்போக்கும், சீர்கெட்ட நிலையும் என்றுமே எமக்கு மோட்சம் தரப்போவதில்லை.

எனவே அல்லாஹ்வும் அவனது திருத் தூதரும் கண்ட சமுதாயமொன்றை நாம் உருவாக்குவதானால், இஸ்லாம் நமது வழியாகவும், அதன் அடிப்படையில் அமைந்த சமுதாயம் (உம்மத்) நமது இலட்சியமாகவும் அமையவேண்டும். இவ்விலட்சியத்தை அடைவதற்காக இஸ்லாம் முஸ்லிம் போன்ற பதங்களை தாங்கிய நூற்றுக் கணக்கான சங்கங்களையோ இயக்கங்களையோ அமைப்பதல்ல அதற்குரிய சரியான வழி, மாறாக ''இஸ்லாத்தை மையமாகக் கொண்ட கட்டுக்கோப்பான ஒரேயொருஅமைப்பாக நாம் செயலாற்ற வேண்டும். இவ்விடத்தில் ''நிச்சயமாக அல்லாஹ்விடம் அங்கீகரிக்கப்பட்ட மார்க்கம் இஸ்லாமேயாகும்'' (3 : 19) என்று நாம் ஆரம்பத்திலேயே குறிப்பிட்ட திருவசனத்தை மீண்டும் நினைவு படுத்திக் கொள்வோம். இதனையே இலட்சியமாக வைத்து முதலாவது முஸ்லிம்களையும் இரண்டாவது ஏனையோரையும் நாம் ஒன்று திரட்ட வேண்டும். பரிசுத்த தீனுல் இஸ்லாம் எமது மத்தியில் பரிபூரண எழிலுருவம் பெற்று வாழ்க்கையின் சகல கோணங்களிலும் இயங்கும் போது அது விரும்பும் முஸ்லிம் சமுதாயமாக நாம் மாற முடியும். இது ஒன்றினாலேயே நாளை மறுமையில் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

(தொடரும்)

## இச் செய்திகள் உங்களுக்கு வேதனையைத் தருமா?

ஆபிரிக்கா இருண்ட கண்டம் என அழைக்கப்படுகிறது. அங்கு அண்மையில் எடுக்கப்பட்ட ஆய்வொன்று நாளொன்றுக்கு சுமார் 20,000 பேர் வீதம் கிறிஸ்துவத்தைத் தழுவுவதாகக் கூறுகின்றது. இதனால் அங்கு பைபலுக்கு பெருங்கிராக்கி ஏற்பட்டுள்ளது எனக் கூறும் செய்திகள், இதுவரை 6% வீத ஆபிரிக்க மொழிகளில் மட்டுமே பைபள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதாம். எனினும் 442 மொழிபெயர்ப்புத் திட்டங்கள் துரிதமாகச் செயல்பட்டு வருவதாகவும் அவற்றில் 75 முடியும் தருவாயில் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

★

முஸ்லிம் இந்தோனேஷியாவில் சர்வதேச கிறிஸ்துவ கோயில்கள் சம்மேளனத்தின் அனுசரணையுடன் முடுக்கிவிடப்பட்ட கிறிஸ்தவ பிரசாரம் முஸ்லிம்களின் வாழ்வில் கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அவர்கள் வீடுகள், வைத்திய சாலைகள், வேலைத்தளங்கள் என்பவற்றிற்கு விஜயம் செய்து கிறிஸ்தவ போதனை செய்வதுடன், நேரத்தை எப்படி பயனுள்ளதாக கழிக்கலாம் என்றும் விளக்கமளித்து வருகின்றனர்.

இதனால் வட சுமத்ராவில் 7 குடும்பங்கள் கிறிஸ்தவத்தைத் தழுவியுள்ளன. மற்றொரு பகுதியில் 210 பேரும் இன்னுமொரு பகுதியில் 298 பேரும் கிறிஸ்தவத்தைத் தழுவியுள்ள அதேவேளையில் பிங்கை / ஸெகிடாக் பகுதியில் 27 குடும்பங்களும் கிறிஸ்தவத்தைத் தழுவியுள்ளன.

★

சூடானின் சிறியதொரு நகரமான வாத் மெதானியில் 7 குடும்பங்களைச் சேர்ந்த 72 முஸ்லிம்கள் கிறிஸ்தவத்தைத் தழுவியுள்ளதாக சூடானிய ஆர்ச் பிஷப் ஒகஸ்டின் பரோனி ஆபிரிக்க செய்திச் சேவை நிறுவனத்துக்கு அறிவித்துள்ளார்.

தகவல்: அல் கலம், தென்னாபிரிக்கா

(பிரசார ரீதியாக கிறிஸ்தவர்கள் எமது சகோதரர்கள் மத்தியில் இத்தகைய கேடுகளை விளைவித்து வரும்போது முஸ்லிம் உலகமே பிளவுபட்டு சிதறுண்டு இருப்பது ஈமான் உள்ள ஒவ்வொரு முஸ்லிமுக்கும் வேதனையைத் தரும்.

— ஆசிரியர்.

# நம்பிக்கையை விலைபேசும்

# நாதியற்றவர்களா ஹரிஜனர்?

(சென்ற இதழ் தொடர்ச்சி)

உண்மையானதொரு மதத்தின் உயிராக இருப்பது அந்த மதத்தின் கொள்கைகளேயாகும். மதத்தைக் கட்டிக் காப்பது என்றவுடன் அது ஏதோ வாளெடுத்துக் கொண்டு போர்புரியக் கூடிய விஷயமல்ல. மதத்தின் கொள்கைக்கேற்ப திசை பிரழாமல் வாழ்வதுதான் மதத்தைக் காப்பற்றக்கூடிய காரியமாக இருக்க முடியும்.

பயந்தோ, அல்லது பணத்துக்கு மயங்கியோ மதம் மாறுபவர்கள் அந்த மதத்தின் கொள்கைகளைப்பற்றி லட்சியப்படாமல் தங்களின் ஆசைகளை பட்டியல் போட்டுக் கொண்டிருப்பார்கள். ஆனால் இஸ்லாத்தின் கொள்கைகளுக்காக முஸ்லிம்கள் தங்களின் ஆவிகளையும் அர்ப்பணிக்க தயங்காதவர்களாயிற்றே. அப்படியிருக்க, இஸ்லாம் வாள்முனையில் பரப்பப்பட்டது என்று பைத்தியக்காரத்தனமாக உளறிய அதே பசப்பிகள்தான், இன்று இஸ்லாம் பணத்தால் பரப்பப்படுகிறது என்று நா கூசாமல் பொய்க் கதையை கட்டவிழ்த்துவிட்டு கலக விதையை தூவுவதற்கு முஸ்தீபு எடுக்கிறார்கள்.

**காழ்ப்புணர்ச்சி**

இதற்கு முன் அரிஜனங்கள் யாருமே மதம் மாறியது கிடையாதா?

மேற்கு நாடுகளின் ஒத்துழைப்போடும், பொருளுதவியோடும் இங்கு எந்தவிதமான மிஷன்களும், மிஷனரிகளும் இயங்கியதேஇல்லையா?

இதே அரிஜனங்கள் பலர் குடும்பம் குடும்பமாக கிறிஸ்துவர்களாக மதம் மாறினார்களே... அப்போது மடாதிபதிகளுக்கு உணர்வே தட்டவில்லையா?

அய்யாசாமி ஆல்பர்ட்டாகவும், அருக்காணி லூசி மேரியாகவும், சின்னப்பன் ஜேம்ஸாகவும் மாறியபோதெல்லாம் இல்லாத பரபரப்பு சுப்புராமன் சுலைமானாகவும், ஆறுமுகம் அலாவுத்தீனாகவும் மாறியவுடன் மாத்திரம் எப்படி விறுவிறுப்பாகிறது?

'ஹிப்பிகள்' கும்பல் கும்பலாக உருவாகி, இன்று 'ஹிப்பிசம்' என்ற புதியதொரு மதமே உருவாகின்றதே. அது மட்டும் இந்து மதத்திற்கு இழப்பானதல்லவோ?

உருவ வழிபாடும் எண்ணிக்கையற்ற கடவுள்களும் பகுத்தறிவுக்கு ஒவ்வாததாயிற்றே என்று எண்ணங்களை வெப்பப்படுத்திக் கொண்டு பல்லாயிரக்கணக்கானவர்கள் நாத்திகர்களாக மாறி, 'நாத்திகம்'கூட இன்றைக்கு தனியொரு மதமாக உருவாகிக் கொண்டிருக்கிறதே. அது மட்டும் மடாதிபதிகளுக்கு இழப்பாகத் தெரியவில்லையோ?

அதுவென்ன, அரிஜன இந்துக்கள் எப்படி வேண்டுமானாலும் மாறலாம், ஆனால் முஸ்லிம்களாக மட்டும் மாறக்கூடாது என்ற நியதி? அரிஜனங்கள் இஸ்லாத்திற்கு மாறிய உடனே அதற்கு மட்டும் எதற்காக இந்த விசேஷ அலட்டிப்பு?

'சமுதாயத்தில் எங்களுக்கும் சமஉரிமை வேண்டும் என்பதற்காகத் தீர்க்கமான சிந்தனைக்குப் பிறகு தெளிந்த மனோநிலையில், நாங்களாகவே தான் எங்களை இஸ்லாத்தில் இணைத்துக் கொண்டோம்' என்று மதம் மாறிய சகோதரர்கள் தெளிவுறுத்திய பிறகும் விசாரணைக் கமிஷன் என்றும், சலுகைகள் ரத்து என்றும் அரசு முதலாக அவர்களை எதற்காக அச்சுறுத்த வேண்டும்?

மனிதாபிமானமற்ற முறையில் காட்டுமிராண்டித்தனமாக, கண்மூடித்தனமாக அரிஜனங்கள் தாக்கப்பட்டபோதெல்லாம் இந்த மடாதிபதிகளும் மகா சேனைகளும் எந்த நிஷ்டையில் ஆழ்ந்து கிடந்தார்களாம்?

தஞ்சை மாவட்டத்தின் வெண்மணி கிராமமே வெந்து சாம்பலானபோது இவர்கள் எந்த வெளியூரிலே முகாமிட்டிருந்தார்களாம்?

விழுப்புரத்தில் நடைபெற்ற வேண்டத் தகாத கலவரத்தால் படுகாயமுற்ற அப்பாவி மக்கள் கண்ணீர் விட்டு கதறிக் கொண்டிருந்தபோது, பீகார் மாநிலம் பெல்சியிலும், விஸ்ராம்பூரிலும் தாழ்த்தப்பட்ட மக்கள் தாக்கப்பட்டபோதும், சாகடிக்கப்பட்டபோதும் மகான்கள் எந்தத் திருத்தலத்தில் பாதயாத்திரை நடாத்திக் கொண்டிந்தார்களாம்?

சக மனிதர்களை விலங்கிலும் கேவலமாக நடத்திக் கொண்டு அதே நேரத்தில் அவர்களின் உன்னதமான உழைப்பை மட்டும் வஞ்சகமாக உறிஞ்சிக் கொண்டு தாழ்த்தப்பட்டவர் என்றும், தீண்டத் தகாதவர்கள் என்றும் ஊருக்கு வெளியே ஒதுக்குப் புறத்தில் வைத்துவிட்ட நிலையில், அந்தத் தடைகளை உடைத்தெறிந்து விட்டு, தங்களை சகோதர பாசத்தோடு தழுவிக்கொண்ட இஸ்லாத்தில் இணைந்த பிறகு அவர்களின் மன வளர்ச்சியில் தோன்றும் பூரிப்பு எத்தனை மகோன்னதமானது!

மதம் மாறிவிட்டார்கள் என்ற உடனேயே மீனாட்சிபுரத்தில் மகாநாடு நடத்தப்படுகிறது, சமபந்தி போஜனம் நடத்தப்படுகிறது, சமாஜங்களின் பாதயாத்திரை தொடருகிறது. இதற்கு முன் இவர்கள் எல்லாம் எங்கே உறங்கிக்கொண்டிருந்தார்களாம்? பரவாயில்லையே.. உறங்கிக் கிடந்த உள்ளங்களை எழுப்புவதிலும் இஸ்லாம் மகத்துவம் வாய்ந்ததோர் மௌனப் புரட்சியைச் செய்து காட்டிவிட்டதே!

இஸ்லாத்தில் இணைந்த சகோதரர்களைத் திரும்பவும் இந்து மதத்திற்கு மாறிவிடும்படி அழைப்பு விடுத்த மடாதிபதிகளிடம் அந்த சகோதரர்கள்- இஸ்லாத்தை ஏற்ற புதியவர்கள், "நாங்கள் 'மதம் மாறுவது' கிடக்கட்டும். முதலில் மதம் மாறாத சகோதர அரிஜனங்களை நீங்கள் பிராமணர்களாக அவர்களை 'சாதி மாற்றம்' செய்து காட்டுங்களேன் பார்க்கலாம்!! என்று விடுத்த வினாவுக்கு இன்று வரையிலும் எந்த மடாதிபதியும், எந்த ஆச்சாரியாரும் வாயே திறக்கவில்லையே... அது ஏன்?

கத்தியை காட்டியோ அல்லது காசை காட்டியோ இஸ்லாம் தன்னை வளர்த்துக்

(8-ம் பக்கம் பார்க்க)

— **எம். ஜாபர் அலி எம். ஏ.** —

# நம்பிக்கையை விலைபேசும்..

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளவேண்டும் என்ற அவசியமேயில்லை. இதயங்களைக் கவர்ந்திழுக்கக்கூடிய கொள்கைகளைக் கொண்டிருப்பதன் காரணமாகவே இஸ்லாம் உலகமெங்கும் ஆழமாக வேரூன்றி நிற்கின்றது.

இஸ்லாத்தில் தங்களை இணைத்துக் கொள்ளும் மன வளர்ச்சியும் மறுமலர்ச்சியும் ஏதோ இந்தியாவில் மட்டுமே அல்லது தமிழக அரிஜனங்களிடம் மட்டுமே ஏற்பட்டு விட்ட நிகழ்ச்சியல்ல!

## உலகெங்கும் பரவுகிறது!

சமத்துவத்தை நேசிக்கும் எந்தவொரு ஜீவனுக்கும் அடைக்கலம் தரக்கூடிய அருகதை இஸ்லாத்துக்கு மட்டுமே இருக்கிறது என்ற காரணத்தினால் ஆபிரிக்காவிலும், ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் .. ஏன் உலகம் முழுவதுமே இஸ்லாத்தை நேசிப்பவர்களின் எண்ணிக்கை பரவலாக அதிகரித்துக் கொண்டே செல்கிறது!

அறிவியல் முன்னேற்றம் ஆகாயத்தையும் அளந்து பார்த்துக் கொண்டிருக்கும் இந்த நவீன யுகத்திலும், உலக சமாதானத்திற்காக 'நோபல் பரிசு' கொடுத்துக் கௌரவப்படுத்துகின்ற இந்தக் காலக் கட்டத்திலும் கூட இனவெறியும், நிறவெறியும் இன்னும்ஒழிந்தபாடில்லையென்றால்... பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் அவற்றின் கொடூரமான பேயாட்டம் எந்த அளவிற்கு இருந்திருக்கும் என்பதை நினைத்துப் பார்க்கும்போதே நெஞ்சம் துணுக்குறுகிறது!

ஆனால், அப்படிப்பட்ட காலகட்டத்திலேயே - இஸ்லாத்தின் ஆரம்ப நிலையிலேயே- அண்ணல் நபி (ஸல்) அவர்கள் சமத்துவத்தையும், சகோதரப் பாசத்தையும் மதக் கோட்பாடாக ஏற்படுத்திக் காட்டியுள்ளார்கள் என்றால் அந்த அளப்பரிய மகத்துவத்தைப் புகழ வார்த்தைகள் ஏது?

இஸ்லாத்தின் முதல் முஅத்தினே நீக்ரோ இனத்தைச் சேர்ந்த ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் தானே!

கறுப்பர்கள் பலர் இன்றைக்குக் கூட்டம் கூட்டமாக இஸ்லாத்தைத் தழுவி வருகின்றனரே அவர்களென்ன, அரபு நாட்டின் பணத்தை பங்கு போட்டுக் கொள்ளலாமென்று முஸ்லிமானார்கள்?

முப்பதே வயதில், பிரமிக்கத்தக்க வகையில் தமது குத்துச்சண்டை திறத்தால் கோடிக் கணக்கில் பெரும் பொருளீட்டியதோடு, கோடிக்கணக்கான இதயங்களையும் கவர்ந்த உலகக் குத்துச் சண்டை வீரர் முஹம்மது அலி, ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் மாட்சிமை தங்கிய அரசாங்கம் பலவிதமான ஆபத்துக்களைக் காட்டி அச்சுறுத்திய போதும், விருதுகளைப் பறித்துக் கொண்டு துன்புறுத்திய போதும், விடாப்பிடியாக தன்னை முஸ்லிமாகவே அறிவித்துக் கொண்டு, 'காஸியஸ் கிளே' என்ற அந்த அதிசயிக்கத்தக்க கறுப்பர் முஹம்மது அலியாக மாறியதுமல்லாமல் இஸ்லாமியப் பிரசாரச் சேவையிலும் ஈடுபட்டுக் கொண்டிருப்பது கூட பணத்தாசையினால் தானா?

அமெரிக்காவில் வாழ்ந்த யூதப் பெண்மணியான மார்கரட் மார்க்ஸ் யூத மதத்தையும், அமெரிக்க வாழ்க்கை முறையையும் உதறித்தள்ளிவிட்டு இஸ்லாத்தைத் தழுவி மர்யம் ஜமீலா என்ற பெயரில் பாகிஸ்தானில் வசித்துவருவதும், மேற்கத்திய நாகரிகத்திற்கு சவாலாக இஸ்லாத்தை அறிமுகப்படுத்திப் பெரும் பெரும் நூல்கள் எழுதி மார்க்கப் பணி புரிந்து வருவதும் பணப்பித்துப்பிடித்துத் தானா?

பொப்பிசை பாடல்கள் மூலம் லட்சோப லட்சம் உள்ளங்களைக் கவர்ந்த, இங்கிலாந்தின் பாடகர் கேட் ஸ்டீவன்ஸ் தனது இசைத் துறையையும், அதனால் கிடைத்துவந்த எல்லையில்லா வருமானத்தையும் தூர எறிந்துவிட்டு இஸ்லாத்தைத் தழுவியதும், தனது உழைப்புக்கும், பெருக்கும், புகழுக்கும் காரணமாயிருந்த இசைக் கருவிகளை ஏலத்தில் விடும்போதுகூட கவலையில்லாது இறை வணக்கத்தில் ஈடுபட்டிருந்ததும் பணத்தில் கொண்ட மோகத்தினால் தானா?

உலகின் முதல் பணக்கார நாடாக மதிப்பிடப்பட்டுள்ள ஜெர்மனியக் குடியரசிலும், தொழில் வளர்ச்சியில் அதிதீவிர முன்னேற்றம் கண்டுள்ள ஜப்பானிலும், உலகையே ஆட்டிப்படைத்த பிரிட்டனிலும்கூட பல்லாயிரக் கணக்கானவர்கள் முஸ்லிம்களாக மதம்மாறியுள்ளனரே .. அது கூடப் பணத்தாசையினால் தானா?

கட்டாய மத மாற்றம் கூடாது என்று பகுத்தறிவு ரீதியாகத் தடை போட்டிருக்கும் இஸ்லாத்தைக் களங்கப்படுத்திவிடலாம் என்ற எண்ணத்தில், இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகளை அறிந்திராத அப்பாவிகள் சிலர் இன்றைக்கு மிக ஆக்ரோசமாக முஸ்லிம்கள் மீது பழிசுமத்திப் பத்திரிகைகளில் கட்டுரை தீட்டுவது .. எதற்காக?

இந்தியாவில், திரும்பத் திரும்ப இனக் கலவரங்கள் ஏற்பட்டுக்கொண்டே இருக்க வேண்டுமென்று திட்டமிட்டு செய்யப்படும் சதி வேலைகளுக்கு சஞ்சிகைகளும் உடந்தையாகலாமா?

ஹரிஜனாக இருந்து கிறிஸ்தவராக மதம் மாறிய ஒருவருக்கு தாழ்த்தப்பட்டோருக்கான அரசு சலுகைகள் அனுமதிக்கப்படுமாம். ஆனால் ஹரிஜனாக இருந்து முஸ்லிமாக மதம் மாறிவிட்டாலோ அந்தச் சலுகைகள் ரத்து செய்யப்படுமாம். அரசுக்கே ஏனிந்த ஓரவஞ்சனை? அரசால் தரப்படும் அந்த சலுகையே தேவையில்லை, நாங்கள் முஸ்லிம்கள் என்றும் அந்தக் கண்ணியமே எங்களுக்குப் போதுமென்றும் மதம் மாறிய சகோதரர்கள் கூறிவிட்டனரே! இப்போது அது அரசாங்கத்துக்குத் தலைக் குனிவான விஷயமாகப் படவில்லையா?

## அடிப்படை உரிமை

விருப்பமுள்ள மதத்தைப் பின்பற்றுவது என்பது தனி மனிதனுக்கு சட்டபூர்வமாகத் தரப்பட்டுள்ள அடிப்படை உரிமை. அதை விசாரணைகளில் சங்கடப்படுத்தியோ, எச்சரிக்கை அறிக்கைகளை விடுத்தோ, மதமாற்றத் தடைச் சட்டம் போட்டோ பறிக்க நினைப்பது ஹரிஜனங்களை மேலும் மேலும் வதைக்கக்கூடிய காரியமே தவிர, அவர்களை வாழ வைக்கக்கூடிய காரியமல்ல.

தாங்களாகவே மனமுவந்து ஹரிஜனங்கள் முஸ்லிம்களாக மாறியிருக்கும்போது அவர்கள் அவ்வாறு மாறுவதற்காகக் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளார்கள் என்று முஸ்லிம்கள் மீது வீண் அபாண்டம் சுமத்துவது பெரும் அநீதியாகும்.

## வாழ்வோம்! வாழவைப்போம்!!

இஸ்லாம் என்னும் வலுவான அழகிய மாளிகையே நம்பிக்கை விசுவாசம் என்னும் அடித்தளத்தின் மீது தான் அமைக்கப்பட்டிருக்கின்றது. அதன் காரணமாகவே அது 'மாற்று மதத்தாரின் நம்பிக்கை விசுவாசங்களுக்கும் மதிப்புக் கொடுங்கள்' என்று முஸ்லிம்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

(18-ம் பக்கம் பார்க்க)

# ஜாஹிலிய்யத்தோடு உறவு கொண்டால்

## தலைநிமிர்ந்து வாழமுடியாது!

### அஷ்ஷஹீத் செய்யித் குதுப் (ரஹ்)

இஸ்லாம் முழுமையான வடிவில் அறிமுகப்படுத்தப் பட்டபோது அன்றைய தீமைகள் அனைத்தும் ஒருங்கிணைந்து அதனை எதிர்த்து நின்றன. ஏனெனில் இஸ்லாத்தின் எழுச்சி தமது நலன்கள் எல்லாவற்றுக்கும் சாவுமணி அடித்துவிடும் என தீமைகளின் காவலர்கள் கருதியதே காரணம்.

உண்மையில் அதுதான் நடந்தது. இஸ்லாத்தின் உறுதியான, அறிவு ரீதியான வளர்ச்சி தீமைகளை ஒழித்துக்கட்டி அவற்றின் உதவியால் வாழ்ந்து கொண்டிருந்தவர்களையும் அடிபணியச் செய்து தூய்மையின் ஆட்சியை நிறுவியது. தவறான மக்களின் கரங்களிலே அகப்பட்டு தவறுகளுக்கெல்லாம் தலையாட்டி அனுமதி வழங்கிய தலைமைத்துவத்தை இஸ்லாம் தனதாக்கிக்கொண்டு நேர்மைக்கு வழிகாட்டி நின்றது. ஒரு புதிய கருத்தில் சமூக அமைப்பை ஏற்படுத்தி மக்களுக்கு வழிகாட்டுவதில் இஸ்லாம் வெற்றி பெற்றது.

அன்று அரேபியா இருந்த சூழ்நிலை, தீமைகளின் ஆதிக்கம், மக்களின் அறிவுத்தரம், தவறான சிந்தனைகள் என்பவற்றை எண்ணிப் பார்க்கும் ஒருவர், ஒரு தனி மனிதரான முஹம்மத் (ஸல்)அவர்களால் இத்தகைய மாபெரும் சமுதாயப் புரட்சியொன்றை நடத்தி வெற்றி காண்பது எப்படி சாத்தியமாகும் என வியப்படைய முடியும்! அன்றைய சமூக சூழ்நிலைகள் அவரை அப்படியே விழுங்கியல்லவா இருக்க வேண்டும் என்றெண்ணுவார்.

எனினும், நபி (ஸல்) அவர்கள் அன்றைய அராஜகங்களையெல்லாம் வென்று இறையாட்சியை நிறுவினார்கள். அதற்கான பல்வேறு காரணங்கள் இருந்தபோதிலும் குறித்த ஒரு விடயத்தில் அவர்கள் நடந்து கொண்ட முறைதான் விசேஷமானது.

அவர்கள் அன்றைய சமூக மாற்றத்துக்கான அடிப்படைக் கருத்தொன்றை மக்கள் முன் வைத்தார்கள். அதனால் எதிரிகளிடமிருந்து எண்ணற்ற தொல்லைகள் வந்தன. துன்பமும் துயரும் தொடர்ந்தன. ஆனால் நபி (ஸல்) அவர்கள் தாம் கொண்ட கொள்கையிலிருந்து, ஏற்றுக் கொண்ட கருத்திலிருந்து இம்மியளவும் மாறவில்லை. தமது கருத்துக்கு மாறான கருத்துக்களையும் நம்பிக்கைகளையும் பாராட்டவில்லை; அடுத்தவர்களின் உணர்ச்சிகளுக்கும் ஆசை வார்த்தைகளுக்கும் பலியாகிவிடவில்லை, தவறான தலைமைக்கு விட்டுக்கொடுத்து இணக்கமாக செல்வதற்கு முற்படவில்லை; தனது அந்தஸ்தைப் பாதுகாத்துக்கொள்ள தீமைகளின் காவலர்களுக்கு பணிந்து செல்லவில்லை,

மாறாக, அன்று அணிதிரண்டிருந்த எல்லா எதிர் சக்திகளுக்கும் மத்தியில் தமது கருத்தை தைரியமாக எடுத்தியம்பினார்கள்,

''கூறும்! இறைவனை நிராகரிப்பவர்களே, நீங்கள் வணங்குபவற்றை நான் வணங்குவதில்லை. நான் வணங்குபவனை நீங்கள் வணங்குவதுமில்லை. அன்றி நீங்கள் வணங்குபவற்றை நான் வணங்குபவனுமல்லன். நான் வணங்குபவனை நீங்கள் வணங்குபவர்களுமல்லர். உங்கள் மார்க்கம் உங்களுக்கு; எனக்கு என்னுடையது.''

(அல்குர்ஆன் 109:1-6)

இவ்வாறு, நபி (ஸல்)அவர்களுடைய மார்க்கத்திற்கும் ஏனையவர்களுடைய மார்க்கங்களுக்கும் இடையிலான பிரிவினை இணைக்க முடியாதது என்று பிரகடனப்படுத்துவதுடன் அவர்கள் நின்றுவிடவில்லை. எதிர்காலத்திலாவது இத்தகைய இணக்க ஏற்பாட்டுக்கு இடமேயில்லை என்ற கருத்தை ஆணித்தரமாகப் பதிய வைத்தார்கள்,

நபி(ஸல்) அவர்கள் தமக்கு அற்புத சக்தி இருப்பதாகவோ, மறைவான விஷயங்களை அறியக்கூடிய மனித சக்திக்கு அப்பாற்பட்ட விசேடத் தன்மை தமக்கிருப்பதாகவோ கூறி மக்களை தம் மார்க்கத்தின்பால் அழைக்கவில்லை.

தம் எதிரிகளை வெற்றி கொண்டபோது, தம்மைப் பின்பற்றியோருக்கு உயர் பதவிகளையோ செல்வத்தையோ அளிப்பதாக வாக்குறுதிகள் வழங்கவும் இல்லை.

நபி (ஸல்) அவர்கள் ஒரு தனிமனிதராக எழுந்து நின்று அன்றைய மக்களின் நம்பிக்கைகள், செயல்கள், பண்புகள் அனைத்துக்கும் மாற்றமானதொரு கருத்தை முன்வைத்து வெற்றியீட்டினார்கள்.

இந்த வெற்றி ஏதோ அற்புதங்களினால் நிகழ்ந்ததல்ல. சாதாரண ஒரு மனிதன் ஒரு கொள்கையை முன்வைத்து எவருக்கும் பொருத்தம் எனக் காணும் நடைமுறைகளை அனுஷ்டித்து வெற்றி பெற்றானோ, அதுபோலவே நபி (ஸல்) அவர்களும் முயன்று வெற்றி பெற்றார்கள்.

இஸ்லாமானது மனித மனங்களில் மறைந்துகிடக்கும் சக்திகளுடன் இணைந்து செயற்படும்படி நபி (ஸல்) அவர்கள் அதனை, அதன் மகத்துவத்தை, அதனைத் தந்த அல்லாஹ்வின் ஆதிக்க உரிமையை எடுத்துரைத்தார்கள்.

இதன் காரணமாக மனித மனங்களை . ஆக்கிரமித்துக் கொண்டிருந்த தீமையான சிந்தனைகள், கோட்பாடுகள் அனைத்தும் வெருண்டோடின. அத்துடன் இறை ஆதிக்கத்தை முழுமையாக ஏற்றுக் கொண்டன,

இவ்வாறு மக்கள் ஓரிறைவனை ஏற்று அவனுக்குக் கீழ்ப்படிந்து செயற்பட முனைந்தபோது, மக்களை மக்கள் வழிபடும் மடமை மறைந்து மண்ணோடு மண்ணாகியது. எல்லாம்வல்ல அல்லாஹ்வின் முன்னே எல்லா மனிதர்களின் தலைகளும் வளைந்து கொடுத்த போது, பேதமைகள் மறைந்தன; ஏற்றத் தாழ்வுகள் நீங்கின. எல்லோரும் சம நிலையைப்

(24-ம் பக்கம் பார்க்க)

# புகைக்காதீர்; அதனால் நன்மையில்லை!

புகைத்தல் பற்றி சவூதியில் வெளியான 'பத்வா' ஒன்றை அக்டோபர் மாத அல்-ஹஸனாத் இதழ் பிரசுரித்ததை படித்த வாசக சகோதரர்கள் நன்கு பயனடைந்திருப்பார்கள். அத்துடன் இந்தியாவைச் சேர்ந்த திரு. து. ரங்காச்சாரி என்பவர் எழுதிய 'புகை அகராதி' என்ற நூலை வாசிக்க எனக்கொரு சந்தர்ப்பம் கிடைத்தது. அதிலுள்ள பயன்மிகு அம்சங்களை அல்-ஹசனாத் வாசகர்களுக்குத் தொகுத்துத் தருகிறேன்—படித்துப் பயன் பெற்றால் உடலுக்குக் கேடில்லை.

— அக்கரைப்பற்று அப்துல் மஜீத்

★ அமோனியா, ஆர்செனிக், கரியமிலவாயு, காபன் ஓரொட்சைட்டு, கிரிஸ்டில், கோலிடைன், நிகோடின், பர்பரால், பார்வோலின், பிரிடின், பென்லோ, பைரின், பைரிடின், ப்ரஸ்ஸிக் அமிலம், மார்ஷ்வாயு, மெதிலாமைன், ருபிடைன், விரிடைன், லெண்டிடைன், லூட்டிடைன் இத்தனையும் சிகரட் புகையிலுள்ள நஞ்சுகள்.

★ இளங்குற்றவாளிகளில் 100க்கு 93 பேர்கள் புகை பிடிப்பவர்களே. இளைஞர்களின் முழு வளர்ச்சி அடையாத மூளை, சிகரெட்டிலுள்ள 'பர்பரால்' என்ற நஞ்சினால் நலிவடைகிறது. இதனால் நியாய உணர்வு குன்றி குற்றம்புரியக்கூடிய நிலை உருவாகிறது.

★ புகைப் பழக்கத்துக்கும் காக்கைவலிப்பு வியாதிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என ஆங்கில வைத்திய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

★ ஒன்றன் பின் ஒன்றாக தொடர்ந்து இடைவெளியின்றி ஒருவர் எத்தனை சிகரெட்டுக்கள் புகைக்க முடியும் என்று காண நூதனமான போட்டி ஒன்று மேல்நாட்டில் நடந்தது. 17 சிகரெட் பிடித்தவர் 2ம் பரிசும் 18 சிகரெட் பிடித்தவர் 1ம் பரிசும் பெற தகுதி பெற்றனர். ஆனால் அவ்விருவரும் பரிசு பெற்றுக்கொள்ள முன்னர் போட்டி நடந்த இடத்திலேயே மயங்கிவிழுந்து மரணமானார்கள்.

★ சிங்கப்பூரில் பேரூந்துகளில் ஓட்டுனரோ, நடத்துனரோ, பயணிகளோ எவர் புகைத்தாலும் 500 டாலர்கள்வரை அபராதம் செலுத்த வேண்டும். நோயாளிகள் முன்னிலையில் வைத்தியர்களும் மாணவர்கள் எதிரில் ஆசிரியர்களும் புகை பிடிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. பள்ளிகளில் மாணவர்கள் புகைபிடித்தால் கடுமையாக தண்டிக்கப்படுவார்கள், டாக்சி டிரைவர்கள் பிரயாணிகளை ஏற்றிச்செல்லும்போது புகைத்தால் 400 டாலர்கள்வரை அபராதம். அரச ஊழியர்கள் பொது மக்களுடன் தொடர்பு கொள்ளும்போது புகைபிடிக்கக்கூடாது. சினிமா, நாடக அரங்குகளில் புகைப்பவர்களுக்கு 500 டாலர்கள் அபராதம்.

★ 'இங்கே புகைபிடிக்கக் கூடாது' என்ற எச்சரிக்கைகளை மீறி புகைபிடித்ததன் விளைவாக பெரிய சுரங்க வெடிவிபத்துகள் நிகழ்ந்துள்ளன. எண்ணெய்வயல்களில் இது போன்று மூண்ட தீ ஒரு வாரகால இடைவிடாப் போராட்டத்தின் பின்பே அணைக்கப்பட்டது. ஓடும் ரயிலில் ஏற்பட்ட சில தீ விபத்துக்களுக்குக்கூட அணைக்காது போடப்பட்ட சிகரெட்துண்டுகள்தான் காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

★ ''விஞ்ஞான விந்தை மனிதர்'' என்ற விருதுடன் விளங்கிய தோமஸ் அல்வா எடிசன் தந்தி சாதனம், மின் ஒளிவிளக்கு, மின் ஒலி பெருக்கி, பேசாத சினிமா, பேசும் இயந்திரம் (போனோகிராப்) உட்பட நூற்றுக்கணக்கான நவீன சாதனங்களை கண்டுபிடித்தார். அவை இயங்கத் தேவையான 2500 கருவிகளை புதிதாக செய்து அவற்றின் தயாரிப்பு உரிமையையும் பெற்றுசாதனை செய்துள்ளார். இவர் புகைப்பிடிப்பதில்லை.

எவ்வித பொறுப்பான பணியையும் புகைபிடிப்பவர்களால் கருத்தூன்றி கவனமாக செய்ய இயலாது என்பது தோமஸ் அல்வா எடிசனின் கருத்து. எனவே இவர் தனது ஆய்வுக்கூடங்களிலும், தொழிற்சாலைகளிலும் புகைப்பவர்களை வேலைக்கு அமர்த்தவில்லை. மோட்டார் மன்னன் என புகழ் பெற்ற ஹென்றி போர்ட் அவர்களும் தனது தொழிற்கூடங்களில் புகைப்பிடிப்போரை வேலைக்கு எடுத்துக் கொள்ளவில்லை.

★ சீக்கியரின் பத்தாவது குருவான கோவிந்தசிங் மதவாதிகளாயிருந்த சீக்கியர்களை 'கால்சா' என்ற வலிமை மிக்க அரசியல் இயக்கத்தினராக மாற்றி அவர்களுக்கான சட்டதிட்டங்களை தொகுத்தும் வழங்கினார். புகைபிடிக்கக் கூடாது என்பது அவருடைய கண்டிப்பான கட்டளைகளுள் ஒன்று. இப்போதும் சீக்கியர்கள் தங்கள் குருவின் ஆணைக்கு அடிபணிந்து புகைபிடிப்பதில்லை. இக்காரணத்தினாலேயே அவர்கள் மற்ற மாநிலத்தவர்களைவிட ஆரோக்கிய பொலிவுடனும் கட்டுறுதியான உடலுடனும் காணப்படுகிறார்கள். புற்றுநோய் அவர்களை பற்றுவது இல்லை.

★ அமெரிக்க நாட்டில் ஏற்படும் தீ விபத்துக்களில் 25 சதவீதம் புகைப்பவர்களின் அசட்டை காரணமாய் ஏற்படுவதாயும் இதன் மூலம் ஆண்டுதோறும் 2000 மக்கள் மாள்வதாயும், 1, 07, 200 கட்டிடங்கள் தீ பற்றிக் கொள்வதாயும், 9, 60, 00, 000 டாலர்கள் மதிப்புள்ள சொத்துக்கள் நாசமடைவதாயும் உலக சுகாதார நிறுவனம் தெரிவிக்கிறது.

★ பாரிஸ் நகரில் உயர்ரக நாய்க்குட்டிகள் விற்பனை செய்பவர்களில் சிலர், சாதாரண நாய்க்குட்டிகளுக்கு உணவுடன் சிறிது புகையிலையையும் கலந்து கொடுக்கிறார்கள். இதனால் அவை முழுவளர்ச்சியின்றி சித்திரக் குள்ளவடிவில் நூதன ஜாதி நாய்போல் தோற்றமளிக்

( 20 ம் பக்கம் பார்க்க )

### இஸ்லாமிய பணி: அன்றும், இன்றும்—1

# இஸ்லாத்தின் தூதை எத்திவைப்பது எங்ஙனம்?

— கலாநிதி முஹம்மத் நாஸிம் —

> கென்யா நாட்டு ''அல் இஸ்லாம்'' பத்திரிகையில் ஆங்கிலத்தில் வெளியான இக்கட்டுரையை சிங்கப்பூர் சஞ்சிகையான ''ஸுவாரா இஸ்லாம்'' அதே மொழியில் மறுபிரசுரம் செய்தது. ''அல் ஹஸனத்'' வாசகர்களின் நன்மை கருதி அதனைத் தமிழில் தருகிறோம்.
>
> தமிழாக்கம்: —டாக்டர் ஏ. ஆர். ஏ. ஹபீஸ்

இன்றைய உலகில் இஸ்லாத்தின் தூதை மக்களுக்கு எத்தி வைப்பது ஒரு மார்க்கக் கடமை மட்டுமல்ல, சமூக கடமைப்பாடுமாகும், அல்லாஹ்வின் சன்மார்க்கத்தை உரிய முறையில் மனித குலத்திற்கு எடுத்துச் செ(ா)ல்லும் விஷயத்தில் அவனுக்குப் பதிலளிக்க வேண்டிய பாரிய பொறுப்பும் நமக்குண்டு.

இஸ்லாமியப் பிரசாரப் பணியில் ஈடுபடுபவர்கள் ஒன்றை மனதிலிருத்திக் கொள்ளுங்கள். அதாவது, ஒரு கொள்கையைப்போதிக்க முன்வருபவர், அதன் நோக்கம், வரையறை, மனிதனது தேவைக்கும் அதற்குமுள்ள தொடர்பு ஆகியவற்றைப் போதியளவு அறிந்திருத்தல் அவசியமாகும். மக்களது ஆர்வத்தையும், அச்சத்தையும் அனுசரித்து அவர்களது மனதில் ஒரு தனிப்பட்ட விருப்பத்தைத் தோற்றுவிக்கத் தவறும் எந்த ஒரு கருத்தும் ஒருபோதும் ஓர் உலக சக்தியாக உருப்பெற முடியாது.

ஆகையால் முழு மனிதகுலத்திற்கும் பொதுவான ஒரு கொள்கையானது மனித மனங்களை ஆட்கொண்டிருக்கும் சிக்கல்களோடும், பிரச்சினைகளோடும் பின்னிப் பிணைந்திருக்க வேண்டும். 'தான்', 'தனக்கு' என்ற (சுய) நல உணர்வின் காரணமாக மனிதன் ஆதாயத்தைக் கண்டு அக மகிழ்வதும், நஷ்டத்தைக் கண்டு நடுநடுங்குவதும் நாமறிந்தவையே.

இனி, எங்களது அணுகுமுறையைப் பொறுத்தவரை அறிவு, அறிமுகம் என்பன அறிந்தவரிலிருந்து அறியாதவருக்கு, தெரிந்தவரிலிருந்து தெரியாதவருக்கு, அருகிலுள்ளவரிலிருந்து அப்பாலுள்ளவருக்கு என்றவாறாக வளர்ச்சியுறுவதை நாம் கவனத்திற் கொள்வோமாக.

உடனடித் தேவையை உதறித் தள்ளிவிட்டு, எதிர்காலத் தேவைக்கு முதன்மை அளிக்கும் அணுகுமுறையை மக்கள் ஏற்றுக் கொள்வதாய் இல்லை.

சுருங்கச் சொன்னால், மனித குலத்திற்குப் பொதுவான கொள்கையானது, ஒவ்வொரு தனிநபரினதும் எதிர்பார்ப்புகளுக்கும் சஞ்சலங்களுக்கும் தீர்வுக [illegible]ாயிருக்க வேண்டும். அது அறிந்தஒருவரிலிருந்து ஆரம்பித்து, அதனைப் பற்றி அவ்வளவாக அறியாத சராசரி அவதானிவரை கொண்டு செல்லப்பட வேண்டும்.

''வாழ்க்கை நெறி (தீன்) உளப்பூர்வமான உபதேசம்'' என நபி மணி நவின்றனர். மானிட உளவியல் பற்றிய எங்களது அறிவு, அனுபவம் என்பவற்றிலிருந்து நாம் தெரிந்துகொள்வது என்னவென்றால், உரைப்பவரின் உண்மையான உளப்பாண்மையில் கேட்பவருக்கு நம்பிக்கை பிறக்க வேண்டும். இது பொதுவாக தனிநபர் தொடர்பு மூலமாகவும் அனுபவம் வாயிலாகவுமே கைக்கூடும். ஒரு மனிதனைப் பற்றி நாம் எந்த அளவு அறிந்து கொள்கிறோமோ அந்த அளவு அவரைப் பற்றிப் புரிந்துகொள்கிறோம். அத்துடன், அவர் ஆளுமையும், நன்னடத்தையும் உள்ளவராயின் அவரை நாம் உவந்தேற்றுக் கொள்கிறோம். மனிதன் இயல்பிலேயே நன்மையை நாடுபவன் அல்லவா?

இஸ்லாத்தை மக்களுக்கு எத்திவைக்கும் விஷயத்தில் எமது வெற்றியானது பின்வரும் காரணிகளில் தங்கியுள்ளது:-

(அ) எங்களது நடத்தையின் மூலமாக நாம் ஏற்படுத்தும் நல்லமனப்பதிவு. இஸ்லாம் கூறும் நற்பண்புகள் நமது நடத்தையில் பிரதிபலிக்குமானால், நாம் கூறுபவற்றை மக்கள் ஏற்றுக் கொள்வதற்குச் சாதகமான நிலைமை உருவாகும்.

(ஆ) பொருத்தமான விஷயங்களை அறிவுடைமையாகவும், விவேகபூர்வமாகவும் தெரிவு செய்தல்.

ஆரம்பத்தில் குறிப்பிட்டபடி ஒரு சராசரி மனிதனுக்கு இறைவன் தூரத்திலும், அவனது உடனடித் தேவைகள் அருகிலும் இருப்பதாகத் தோற்றும். அவனுக்கு இறைவனை ஏற்றுக்கொள்வது ஆழமான விஷயமாகத் தென்படும். ஆனால், அவனது பார்வையோ மேலோட்டமாகத் தெரிபவற்றுக்கே மட்டுப்பட்டிருக்கும், இந்நிலையில் அவனது தேவைகளையும், ஆசைகளையும் புரிந்து கொள்வது அவனை நாம் அணுகுவதற்கு அனுகூலமாயிருக்கலாம். அவ்வாறாக அவனது உள்ளத்தில் அலைமோதும் பிரச்சினைகளின் ஊடாக இறையுணர்வை அவனுக்கு ஊட்ட முடியுமானால், அவன் எதிர்நோக்கும் சிக்கல்களுக்கு இறைவனின் புறத்திலிருந்து பேருதவி கிட்டுவதை அவனுக்குத் தெளிவுபடுத்த முடியு

(6-ம் பக்கம் பார்க்க)

# இஸ்லாத்தின் தூதை.....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மானல், அதன் பயனுக அவனுக்கு அச்சம் அகன்று நிம்மதி ஏற்படுமானுல், இறைவனின் திருப்பெயரைக் கொண்டு எவை யெவை சொல்லப்படுகின்றனவோ அவை அனைத்தையும் சிரமேற்கொண்டு செயல்பட அவன் துணிந்து விடுவான்.

எல்லா நபிமார்களும் இத்தகைய அணுகுமுறைகளைக் கையாண்டனர்.

''நாம் தூதர்களை நற்செய்தி கூறுவோராயும், எச்சரிப் போராயும் அன்றி அனுப்பவில்லை! ஆகவே, எவர்கள் நம்பிக்கை கொண்டு, நற்கருமங்களைப் புரிகின்றனரோ அவர்கள் அச்சப்படவும் மாட்டார்கள்! துக்கிக்கவும் மாட்டார்கள்'' என்ற பொருள்பட இறைவன் மறை வசனங்களை அருளியுள்ளான்.

இறை தூதர்கள் இஸ்லாமியப் பணியில் ஈடுபட்ட போது ஏற்படுத்திய மனப்பதிவு, அவர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள், அவற்றிற்கு அவர்கள் எடுத்த பரிகாரங்கள் ஆகியவற்றை வரலாற்று ஏடுகளில் படித்துணர்ந்து, அதே வழிமுறைகளை இக்கால நிலைமைக்குத் தக்கவாறு பிரயோகிக்க வேண்டும்.

ஆரம்பகால நபிமார்கள் ஏற்படுத்திய தனிப்பட்ட மனப்பதிவுகள், தோற்றப்பாடுகள் பற்றி வரலாறு போதிய விளக்கங்களைத் தராத போதிலும், திருக்குர்ஆனில் பல்வேறு இடங்களில் விரவிக்காணப்படும் குறிப்புக்களிலிருந்து அந் நபிமார்களின் ஒழுக்க மேம்பாடு, அவர்களின் தனிப்பட்ட வாழ்கையில் சொல்லுக்கும் செயலுக்கும் இடையிலான ஒருங்கிணைப்பு, மனவிசாலம் ஆகியவை எதிரிகளைக் கூட ஈர்க்கும் அளவுக்கு ஏற்றம் பெற்றுத் திகழ்ந்ததைக் காண்கிறோம்.

சிறையிலடைபட்டிருந்த நபி யூசுப் (அலை) அவர்களின் சரிதையிலிருந்து ஒரு சான்று வருமாறு;-

நிரபராதியான யூசுப் (அலை) சிறையில் வாட நேர்ந்ததல்லவா? சிறைவாசம் எப்படிப்பட்டது என்பது சொல்லித் தெரிய வேண்டியதல்ல, அங்கு ஒருவன் அனுபவிக்கும் துன்பமும், தீயோர் சகவாசமுமே அவன் கெட்டழியப் போதுமானவை. ஆனுல் யூசுப் (அலை) அவர்களைப் பொறுத்தவரை அவர்களின் நன்னடத்தை காரணமாக ஏனைய சிறைக்கைதிகள் அவர்களிடத்தில் மிக்க மரியாதையாக நடந்து கொண்டனர்! அறிவுரைகளைப் பெற அவர்களை நாடினர்! தம்மைவிடச்சிறந்தவருக்கன்றி வேறெவருக்குமே பயன்படுத்தாத கண்ணியமான வார்த்தைகளைக் கொண்டே அவர்களுடன் உரையாடினர்.

ஒரு சமயம் சிறைக்கைதிகள் இருவர் கனவுகளுக்கு விளக்கம் பெற யூசுப் (அலை) அவர்களை நெருங்கினர், அவர்களில் ஒருவன்,

''நிச்சயமாக நாங்கள் உம்மை மிக்கநல்ல மனிதராகவே காண்கிறோம். இக்கனவுகளின் விளக்கங்களை நீர் எங்களுக்குஅறிவிப்பீராக''

(திருக்குர்ஆன்; 12; 36)

என்று கூறினன்.

ஒருவர் மனிதப் பண்புகள் அனைத்திலும் சிறந்து விளங்குவதோடு, மக்களின் நல்வாழ்வுக்காக உழைக்கும்போது தான் அவர் ஒரு தேசத்தின், சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக மிளிர முடியும்.

இறையோனின் இறுதித் தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் வாழ்க்கையில் இதற்கு

(26-ம் பக்கம் பார்க்க)

# இன்னெரு மீலாதுக்காக...

--ஒட்டமாவடி அஷ்ரப்—

**அன்று** -

அறியாமைக் கொடு இருளில்
அமிழ்ந்திருந்த யுகத்தின்...
ஞானச் சூரியனின்றி
நாறிப்போன
பாலை மனங்களின்
சூனிய யாத்திரை
தொடர்ந்த போது...

கற்பு
காற்பந்தாடப்பட்ட
கோரத்தனமான
சூரங்குத்தனம்
கோலோச்சிய வேளை...

குலத்துக்கும்
கோத்திரத்திற்கும்
கழுத்துகளை அறுத்து
ரத்தாபிஷேகம்
நடாத்திய காலை...

பச்சிளங் குழந்தைகளால்
பாலைக் குழிகள்
நிரப்பப் பட்டு
பொறுமை கொண்டநேரம்...

மடத்தனத்தை
மகுடமாகச் சூடிக் கொண்டு
ஷைத்தானியத்தை
'ஷரீஅத்' ஆக்கிய
தலைவர்களின் பாதங்களில்
மானிடத் தலைகள்
மண்டியிட்ட நேரம்...

ஒரு நாள் விடிந்தது!
உலகே மலர்ந்தது!

நாயகமே!
உங்கள் பிறப்பு
உலகில் நிகழ்கிறது!

உலகத்தின் மீலாதே
அன்றுதான் நடக்கிறது!

**இன்று**—

குடும்பச் சண்டைகளால்
உறவை
அறுத்துக் கொண்டவர்கள்
வெள்ளி விழா
பொன் விழாவெல்லாம்
நடத்தி முடித்திருக்கிருர்கள்!
கற்பு
கடைத் தெருவெல்லாம்
காசுக்கு விற்கிறது!
நிலையங்கள் கூட
நிறைய இருக்கின்றன!
பத்திரிகைகள், சஞ்சிகைகள்
பரவலாக
பெண்களை விற்கின்றன!

ஷைத்தானியத்தை
'ஷரீஅத்' ஆக்கியவர்களின்
புறங்கால்களை
நம்மவர்கள்
நக்கித் திரிகிருர்கள்!

கோடிக் கணக்கான
உயிரணுக்களை
கருத்தடை யென்று
கொல்லுகிருர்கள்!

இதிலெல்லாம்
முஸ்லிம்கள் என்பவர்களே
முன்னணியில் நிற்கிருர்கள்!

இது
இருபதாம் நூற்ருண்டாம்!
நாகரிக யுகமாம்!

அன்று
நாகரிகமற்ற ஜாஹிலிய்யா!
இன்று
நா(ய்) கரிக ஜாஹிலிய்யா!

சில
இஸ்லாமிய கீதங்களும்
இல்லாமல் போயிருந்தால்
சமுதாயம்
பெயரை மறந்த
ஈயின் நிலையில்
இருந்திருக்கும்!

வருடமொரு முறை
மீலாது கூட வராவிட்டால்
நாயகமே...
உங்கள் ஞாபகமே
இந்த சமூகத்துக்கு வராது!

இப்போது உலகம்
இன்னெரு மீலாதுக்காக
ஏங்கித் தவிக்கிறது!
அந்த மீலாது
நமக்குள்ளே இருக்கிறது
என்பதை
சமூகம் மறந்துபோய்விட்டது!

இப்போது உலகம்
இன்னெரு மீலாதை
எதிர்பார்த்துக்
காத்துக் கொண்டிருக்கிறது!

# மாநபி தந்த மறுமலர்ச்சிக் கொள்கை

மக்கள் சமுதாயத்துக்கோர் அருட்கொடையாக வந்துதித்த முஹம்மது முஸ்தபா(ஸல்)அவர்களின்பிறந்த நாளை நாம் வருடாவருடம் கொண்டாடுகிறோம். ஆனால் அவர்களின் போதனைகளை எடுத்து நடக்கத் தவறிவிடுகிறோம். அதனால் உலகம் இன்று சொல்லொணுத் துன்பத்திற் சிக்கித் தவிக்கிறது. எனவே மானிலத்தின் மணிவிளக்காம் அண்ணலது போதனைகள் அல்லற்படும் அகிலத்துக்கு இன்று மிக மிக முக்கியமாகத் தேவைப்படுகின்றன.

### அகில உலக இயக்கம்

பதினுன்கு நூற்ருண்டுகளுக்கு முன் நபியவர்கள் இறைவனின் திருத்தூதராக அரேபியப் பாலைவனத்திலே தோன்றியபோது அவர்கள் பிறந்த நாடோ ஒழுக்கக் கேட்டின் எல்லையை அடைந்திருந்தது. அரேபிய மக்களின் அஞ்சார நிலை கண்டு அவர்களது இதயம் துடித்தது! மிருக வாழ்க்கை நடத்திய மக்களை மக்களாகவே வாழச் செய்ய அவர்கள் உறுதி பூண்டார்கள். இறைவனருளோடு அவர்களது அயரா முயற்சியும் தளரா உறுதியும், அந்தகார இருளில் மூழ்கியிருந்த அரேபியாவில் உலகம் என்றும் காணுத ஒரு நிகரற்ற மறுமலர்ச்சியையே ஏற்படுத்தி விட்டன.

அவர்கள் உருவாக்கிய இலட்சிய இயக்கம் அரேபியாவை மட்டும் மலரச் செய்யவில்லை. உலகுக்கே வழிகாட்டியது. ஆத்மீகம், ஒழுக்கம், பொருளாதாரம், அரசியல்,கலாசாரம்போன்ற மனித வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் அது ஓர் உன்னத புரட்சியை ஏற்படுத்தி விட்டது! இருபத்தி மூன்றே வருடங்களில் ஏற்பட்ட இவ்வற்புதப் புரட்சியைக் கண்டு இன்றும் சரித்திராசிரியர்கள் அதிசயிக்கின்றனர்.

### புரட்சிக் குரல்

எந்த முறையைக் கையாண்டு முஹம்மத் (ஸல்) அவர்கள் தம் சீர் திருத்தப் புரட்சியில் வெற்றி கண்டார்கள் என்பதை ஆராய்வது நம் கடமை.

ஒரே இறைவனையே தம் எஜமானனுகவும் சட்டமியற்றுவோனுகவும் இரட்சகனுகவும் மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். வணக்கத்துக்குரியவன் அவன் ஒருவனே என ஒப்புக்கொள்ள வேண்டும்: அவனைத் தவிர வேறு எவரையும்-எதையும் வணங்கவோ, வேறு எந்த அதிகாரச் சக்திக்கும் தலைசாய்க்கவோ கூடாது. மதத்தின் எல்லைகட்குள் மாத்திரமன்றி வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் அந்த ஒரே இறைவனையே இணையற்ற அதிகாரியாய் ஏற்று அவனுக்கே சிரம்சாய்க்க வேண்டும். இதுதான் அவர் முதன் முதலாக எழுப்பிய புரட்சிக் குரல்!

### அல்லாஹ்வைப்பற்றிய அச்சம்

அதைத்தொடர்ந்து ''மனிதனின் பொறுப்புணர்ச்சியற்ற தான்தோன்றித் தனமான வாழ்க்கை ஒழிய வேண்டும். தனது ஒவ்வொரு செயலுக்கும் இறைவனிடம் தானே பதில் சொல்ல வேண்டும். இறை சந்நிதானத்தில் அவற்றுக்குத் தானே பொறுப்பாளியென ஒவ்வொரு மனிதனும் தனியாகவும், கூட்டாகவும், நம்ப வேண்டும்'' என்ற இறை தூதரின் அறிவுரை, மனிதனின் நெஞ்சத்திலே நஞ்சாகப் பதிந்திருந்த உயர்ந்தவன், தாழ்ந்தவன், ஏழை, பணக்காரன், வெள்ளையன், கறுப்பன் என்ற எல்லாப் பேதங்களையும் போக்கி மனிதசமுதாயத்திடையே சமத்துவ உணர்ச்சியைப் பெருக்கியது. சுயநலம் வழிந்தோடிய மனித உள்ளங்களிலேஇறை வழியில் உழைக்க வேண்டும் என்ற உயர்ந்த உணர்ச்சி பெருக்கெடுத்தோடியது.

### ஒழுக்கமே பிரதானம்

அடுத்தபடியாக வந்தது வள்ளல் நபியின அறநெறி. உயர் பதவி வகிப்போருக்கும் பாட்டாளிகளுக்கும் ஒன்றுகவே அமைந்த அவ்வொழுக்க விதிகளின் எதிரே நிற்க முடியாது வஞ்சக நெஞ்சம் படைத்தோர் அஞ்சியோட்டம் பிடித்தனர். கலை, கலாசாரம், சர்வதேசத் தொடர்புகள், பேச்சுவார்த்தைகள், யுத்தம், சமாதானம் போன்ற மனிதனின் தனி, கூட்டுவாழ்க்கை சம்பந்தமான அத்தனை விஷயங்களும் ஒழுக்கத்தின்—அறநெறியின் — அடிப்படையிலேயே அமைய வேண்டும் என அண்ணலார் வற்புறுத்திஞர்கள். மனித வாழ்க்கையில் ஒழுக்கக் கட்டுப்பாட்டுக்குப் புறம்பான எந்தச் செயலும் நிகழ்வதை அவர்கள் ஏற்கத் திட்டவட்டமாக மறுத்துவிட்டார்கள். இவை வழிகாட்டும் ஒளிவிளக்காம் வள்ளல் நபியவர்கள் உருவாக்கிய புரட்சி இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளிற் சிலவாகும்.

### எப்படிச் செயல்படுத்திஞர்கள்?

இனி முஹம்மது முஸ்தபா ஸல்.) அவர்கள் தம் திட்டத்தைச் செயற்படுத்த என்ன முறைகளைக்கையாண்டார்கள் என்பதைக் கவனிப்போம்.

முதன் முதலில் அவர்கள் தனி மனிதனைச் சீர்திருத்த முற்பட்டார்கள். ஒரு சமுதாயத்தைச் சீர்திருத்துவதற்கான எந்தத் திட்டத்தின் வெற்றியும் இறுதியாக தனி மனிதரின் கைகளிலேயே தங்கியிருக்கிறது என்ற பேருண்மையை இறை தூதரவர்கள் முற்றிலும் உணர்ந்திருந்தார்கள்.

ஒரு திட்டம், நிகரற்ற சிறப்புடையதாய் இருக்கலாம். ஆனுல், ஒழுக்கந் தவறுவோரையும் நாணயமற்றவர்களையும் அதன் சேவையில் ஈடுபடுத்தினுல் அத்திட்டம் ஒருபோதும் வெற்றி பெறமுடியாது. தம் சொந்த ஆசைகளுக்கும், நலன்களுக்கும், தப்பபிப்பிராயங்களுக்கும் இரையாவோரைக் கொண்டுஎந்தத் திட்டத்தையும் வெற்றிகரமாக அமுல் நடத்தலரிது.

திட்டத்தை அமுல் நடத்துவோர் அற நெறிக்கும் சத்தியத்துக்கும் கட்டுப்பட்ட உண்மை விசுவாசிகளாய் இல்லாதவரை முன்னெச்சரிக்கையாக எத்துணை நடவடிக்கைகள் எடுப்பினும் திட்டத்தில் எதிர்பாராத ஓட்டைகள் ஏற்படவே செய்யும்.

திட்டத்தில் குற்றங் குறைகள், ஓட்டைகள் இருந்தாலும், அதனைச் செயல்படுத்துவோர் நம்பத்தகுந்தவர்களாக, நாணயமிக்கவர்களாக இருப்பின் அவர்களின் பிழையற்ற நேர்மையான நடவடிக்கைகள் அக்குற்றங் குறைகளைப் போக்கிவிடும் என்பதில் ஐயமில்லையல்லவா? இன்றைய பாரிய திட்டங்கள்

(22-ம் பக்கம் பாக்க)

எனது மதம் இஸ்லாம்—2

# கீழ்த்தர உணர்வுகளைத் திருப்திப்படுத்துவனவற்றிற்கு மனிதன் அடிமையாகியுள்ளான்!

## கெட் ஸ்டீவன்ஸ் (யூசுப் இஸ்லாம்)

> நாம் ஒரு செயலை 'அல்லாஹ்வுக்காக' என்ற உறுதியான மன நிலையுடன் செய்யும்போது அல்லாஹ் அதனை எமக்கு இலகுவாக்கித் தருகின்றான்.
>
> (சகோதரர் யூசுப் இஸ்லாம்)

தமிழில்!

**ஏ. எம். எம். மன்சூர்**

**கேள்வி:** நீங்கள் ஈடுபாடுகொண்டிருந்த பலவற்றைத் திடீரென்றுநிறுத்துவதும்விட்டுக் கொடுப்பதும்எவ்வளவுதூரம் சிரமமாக இருந்தது என்பதை விளவிக்குர்களா?

**பதில்;** உண்மையில் அது எனக்கு அவ்வளவு சிரமமாக இருக்க வில்லை. என்னை அழித்துக் கொண்டிருந்த குடி, புகை,வட்டி போன்றவைகளை விட்டுத் தள்ளுவதுதான் சரி என்பதை நெஞ்சார ஆழமாக அறிந்திருந்தேன். எனினும், என்னோடு பழகிய நீண்டகால நண்பர்களை விட்டுப் பிரிவதுதான் எனக்கு மிகவும் சிரமமாகத் தோன்றியது. ஏன் தான் அவர்கள் இஸ்லாத்தின் இனிய செய்தியை உணரத்தவறுகிறார்கள் என்பதுஎனக்கு விளங்கவில்லை. என்றாலும்இயன்றவரை அவர்கள்தொடர்பை முற்றும் அறுத்துக் கொள்ளாதிருக்க முயற்சித்தேன். ஆனால், எனது மார்க்கத்தின் (இஸ்லாதின்)சார்பாக எனது கடந்த காலத்திற்கும் இஸ்லாத்திற்குமிடையே ஒரு கோடு கீற வேண்டிய கட்டம் வந்து விட்டது.

இது விடயத்தில் எனக்கு எத்தனையோ பரீட்சைகள் ஏற்பட்டன. உதாரணமாக முஸ்லிமல்லாதவர்களுடன் இருக்கும் போது தொழுகை நேரம் வந்தால் 'மன்னித்துக் கொள்ளுங்கள்' என்று கூறிவிட்டு அமைதியாகத் தொழுகைக்குப் போவதை வழக்கமாக்கிக் கொண்டிருக்தேன். நான் எங்கு, எதற்காகப் போகிறேன் என்பதை சொல்லவில்லை. (அதை மறைத்துவந்திருக்கின்றேன்.)இது எனக்கு ஒரு வகையான மனச்சங்கடத்தைத் தந்தது.

பின்னர் 'நான் தொழுகைக்குத் தான் போகிறேன்', என்பதை அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும் என ஒரு நாள் முடிவு செய்தேன். அதன்படி நான் அவர்களுக்கு அதனை அறிவித்தபோது அவர்கள் மிகவும் கௌரவத்தோடு அச்செயலை அங்கீகரித்தார்கள். இதிலிருந்து நான் புரிந்து கொண்டது என்ன வென்றால் நாம் ஒரு செயலை அல்லாஹ்வுக்கென்று உறுதியாக நின்று செய்யும் போது அல்லாஹ் அதனை இலகுவாக்குகின்றான் என்பதே. இதன் பின்னர் எனக்கு அதிகமான பிரச்சினைகள் ஏற்படுவதில்லை.

**கேள்வி:** உங்கள் கடந்தகாலத் தொழில் பற்றி சிறிது சொல்வீர்களா?

**பதில்:** நான் பதினைந்து வயதினனாயிருந்த போது இசைத் துறையில்அதிகஆர்வம்காட்ட ஆரம்பித்தேன்.எனதுதந்தை எனக்கு ஒரு கித்தார் வாங்கித் தந்தார். நான் சொந்தமாக பாடல்கள் இயற்றலானேன். எனது பெயரை 'கெட் ஸ்டீவன்ஸ்' எனத் தெரிவு செய்தேன். எனது பதினெட்டாவது வயதில் என் முதல் பாடல் இசைத்தட்டில் பதிவாகியது. எனது முயற்சி பெரிதும் வெற்றியளித்தது. ஐரோப்பா முழுதும் என் பாடல்கள் விற்பனையாகின, எனினும் என் மேடைக் காட்சிகள் எனக்குப் பொருத்தமாக அமையவில்லை. நான் அதிகம் குடிக்கவும் புகைக்கவும் ஆரம்பித்தேன், அதனால் வெகு விரைவிலேயே நான் நோய்வாய்ப்பட்டேன். காசநோய் என்னைத் தொற்றிக் கொண்டது. இது எனது தொழிலைத் தடைப் படுத்தியது. சில மாதங்களை வைத்திய சாலையில் கழித்தேன். இக்காலக் கட்டத்தில் நான் கிழக்குத் தத்துவம் பற்றிப் படிக்கலானேன். 'இரகசியப் பாதை' என்ற பெயருடைய நூலொன்று என்னிடம் இருந்தது. 'ஆன்மா'வின் மதம் பற்றிய முதல் அறிமுக நூலாக அது அமைந்தது. அது சாந்தியையும் ஒளிமிக்க பாதையையும் தேடும் பயணத்தில் என்னைத் தூண்டிவிடப்போதுமானதாக அமைந்திருந்தது. அது இறுதியில் என்னை இஸ்லாத்தின் தலைவாயில் வரை கொண்டு சென்றது.

இதன் பின்னர் எனது ஆன்மீக விழிப்பை வெளிப்படுத்தும் பாடல்கள் எழுதலானேன். எனவே, அப் பாடல்கள் எனது சுய வரலாருக அமைந்தன. எனது இருபத்தி ஒரு வயதில் உலகளாவிய ரீதியில் எனக்கு வெற்றியைத் தேடித்தந்த அந்தப் பாடல் வெளியானது. 'Tea for the Tillerman' என்ற தலைப்பிலான அப்பாடல் என்னை ஒரு பிரசித்தமான நட்சத்திரமாக (Super Star)மாற்றி விட்டது. ஒரு வகையில் எனது இந்த நிலைகள் இறைவனை நோக்கிய எனதுபயணத்தின்வெவ்வேறு கட்டங்கள் என நான் கருதுகிறேன்.

**கேள்வி:** பொப் இசையுலகம் இன்றைய காலகட்டத்தில் நிறைந்த அபிமானிகளைக்கொண்டிருக்கிறது, முஸ்லிம்களும் இதற்கு விதிவிலக்கல்ல. இது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

**பதில்:** துரதிருஷ்டவசமாக. இன்று மக்கள் தமது கீழ்த்தரமான உணர்வுகளைத் திருப்திப்படுத்துவனவற்றிற்கு அடிமையாகியுள்ளார்கள். இசைத் தட்டுகள், சினிமாப் படங்கள், ஒலிப்பதிவு நாடாக்கள், சஞ்சிகைகள் என்பன போன்றவை இன்று பணம் கறப்பதற்கென்றே பயன்படுத்தப்படுகின்றன, பொப் இசையை ரசிப்பது கனவு காண்பது போன்றிருக்கும். அது ஆன்மாவுக்கும் ஒரு தற்காலிகதிருப்தியை,விடுதலையைக் கொடுக்கிறது, இத்தகைய இசையை ரசிக்கும் மக்கள், பொதுவாக மெய்ஞ்ஞான நிலையை அவாவுகின்றனர், அத்தகைய

(22-ம் பக்கம் பார்க்க]

# திருமறையும் திருத்தூதர் வாழ்வும்

## இஸ்லாத்தின் மூலாதாரங்கள்

திருக்குர்ஆன் வாழ்க்கைத் துறைகள் அனைத்துக்கும் வழி காட்டும் விரிவான நீதிநூல் என்று பொதுவாகவே கூறப்படுகிறது. ஆனால் ஒருவர் இதைப் படிக்கும் போது சமூகவியல், ஒழுக்கவியல், அரசியல், பொருளியல் போன்ற அனைத்து வாழ்க்கைத் துறைகள் பற்றிய விரிவான கட்டளைகளும் விதிமுறைகளும் அவருக்குத் தென்படுவதில்லை. திருக்குர்ஆன் திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கூறும் கட்டாயக் கடமைகளான தொழுகை, ஜகாத் போன்றவை பற்றிக்கூட விரிவான விதிகளையும் விலக்குகளையும் அது தரவில்லை என்பதை அவர் காண்கிறார். அப்படியாயின் என்ன பொருளில்தான் இது ஒரு விரிவான வழிகாட்டியாக அமைந்திருக்கிறது என்பது பற்றி அவர் உள்ளத்தில் சந்தேகம் எழுகிறது.

திருமறையை மட்டும் இறைவன் வழங்கவில்லை. அத்தோடு இவ்வுலகுக்கு ஒரு தூதரையும் அவன் அனுப்பியிருந்தான் என்கிற உண்மையின் அடிப்படையான அம்சம் வாசகரின் சிந்தனையிலிருந்து மறைந்திருப்பதால் அவர் மேற்சொன்ன குழப்பங்களுக்கு ஆளாகிறார்.

இங்கு ஒரு சான்றினைப் பார்ப்போம்.

ஒரு கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு நமக்கு ஒரு வரை படம் கொடுக்கப்பட்டு, அதன்படி நாமே அக்கட்டிடத்தைக் கட்டிக் கொள்ள வேண்டும் என்றால் கட்டிடத்திற்குரிய சின்னஞ்சிறு விஷயங்களும் அந்த வரைபடத்தில் இடம் பெற்றிருக்கவேண்டும். ஆனால், அந்த வரைபடத்துடன் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்குரிய குறிப்புகளுடன் ஒரு பொறியியலாளரும் அரசாங்கத்தின் தரப்பிலிருந்து அனுப்பப்பட்டு, அவர் அக்கட்டிடத்தை நிர்மாணித்த பின்னர், அவரையும் அவர் நிர்மாணித்துள்ள கட்டிடத்தையும் புறக்கணித்துவிட்டு, அந்த வரைபடத்திலேயே கட்டிடத்திற்குரிய ஒவ்வொரு சிறு தகவலையும் தேடமுற்பட்டு அதில் அந்த விபரங்கள் கிடைக்கவில்லையே என்று குறை கூறுவது அறிவுடைமையாகாது.

**மௌலானா செய்யித் அபுல் அஃலா மௌதூதி (ரஹ்)**

திருக்குர்ஆன் சட்டவிதிகளின் பிரிவுகளையும், துணைச் சட்டங்களையும் விவரிக்கும் ஒரு நூல் அல்ல; மாறாக, அது மூலாதார அடிப்படை விதிகளுடன் கோட்பாடுகளும் வழங்கும் ஒரு நூலாகும்.

இஸ்லாமிய வாழ்க்கை அமைப்பின் அடிப்படைகளை அறிவார்ந்த ரீதியில் தெளிவாக்கி, அதனுடைய ஒழுக்க அடிப்படைகளை எடுத்துரைத்து, அதற்காக இதயங்களைக் கவர்ந்திழுக்கும் வகையில் அறிவார்ந்த ஆதாரங்கள் அனைத்தையும் தந்து, அந்த அடிப்படைகளை நன்றாக உறுதிப்படுத்தி விடுவதே குர்ஆனின் தலையாய பணியாகும்.

எனவே, அது மனிதனுக்கு வழிகாட்டுகின்றது என்பதின் பொருள், இஸ்லாமிய வாழ்க்கை முறையை செயல்படுத்துவதற்காக வாழ்வின் ஒவ்வொரு சின்னஞ்சிறு அம்சம் குறித்தும் விரிவான சட்டதிட்டங்களையும் விதிமுறைகளையும் வகுத்துத் தருகிறது என்பதல்ல. மாறாக, வாழ்க்கையின் ஒவ்வொரு துறை குறித்தும் அதற்குள்ள எல்லைகளையும், வரம்புகளையும் நிர்ணயித்து, இறைவனின் விருப்பத்துக்கு இசைவாக அத்துறைகளை எவ்வாறு அமைக்கவேண்டும்: எவ்வாறு நிர்மாணிக்க வேண்டும் என்று அறிவிக்கக்கூடிய கைகாட்டிகளை ஆங்காங்கே அது ஊன்றி வைக்கிறது.

இந்தப் போதனைகளுக்கும் வழிகாட்டுதலுக்கும் இசைவாக இஸ்லாமிய வாழ்க்கை முறையைச் செயற்படுத்திக் காட்டும் பொறுப்பும் பணியும் நபி (ஸல்) அவர்களைச் சார்ந்திருந்தது. திருக்குர்ஆன் அருளிய நியதிகளுக்கு ஏற்ப உருவாகும் தனிமனிதனுடைய ஒழுக்கம் சார்ந்த வாழ்வு, சமூக அமைப்பு, நீதி மிக்க அரசு ஆகியவற்றின் நடைமுறை முன்மாதிரியாகத் திகழவே அன்னாரவர்கள் அல்லாஹ்வின் தூதராக அனுப்பப்பட்டார்கள்.

அந்த மாநபி (ஸல்] அவர்கள் ஒழுக்கவியல், சமூகவியல், வாழ்வியல், அரசியல் போன்ற மனித வாழ்வு சம்பந்தமான எல்லா விவகாரங்களைப் பற்றியும் உயர்ந்த நுட்பமான சட்டங்களை வழங்கினார். இருபத்துமூன்று ஆண்டுக்காலத்தில் தம்முடைய ஒழுக்கம், நற்செயல், கண்ணியம் மற்றும் உயர் போதனை ஆகியவற்றின் வன்மையால் தம்முடைய பகைவர்களைக்கூட நண்பர்களாக ஆக்கினார். காட்டுமிராண்டித்தனமும் அறியாமையும் குடிகொண்டிருந்த மக்களை உயர்தரமான நாகரீகமிக்கவர்களாக மாற்றியமைத்தார். எந்த அரபியர் எத்தகைய சட்டத்துக்கும் கட்டுப்படத் தயாராக இருக்கவில்லையோ, அவர்களை மாபெரும் சட்டங்களுக்குக் கட்டுப்படும்படிச் செய்து விட்டார். எந்த அரபியர் எவருக்கும் கீழ்ப்படியச் சித்தமாயிருக்கவில்லையோ அவர்களை ஒரு மகத்தான ஆட்சிக்குக் கீழ்ப்படிந்திருக்கும்படிசெய்து விட்டார். எந்த மக்கள் மீது ஒழுக்கத்தின் வாசனையே படாமல் இருந்ததோ, அந்த மக்களின் ஒழுக்கத்தை எவ்வாறு பரிசுத்தமாக்கிவிட்டார் எனில், இன்று அந்த மக்களின் வரலாறுகளைப் படித்து உலகமே பிரமிப்படைகிறது.

அந்த நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடமிருந்து பெற்று மக்களுக்கு சமர்ப்பித்த ஒப்பற்ற வேதமே அல்குர்ஆன் ஆகும். அதற்கேற்பவே அவர்களது வாழ்வும் அமைந்தது.

## மாநபி தந்த...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பல தோல்வியடைவதற்கு இதுவன்றி வேறெதுவும் காரணமாக இருக்க முடியுமா?

எனவே 'அல் அமீன்,அவர்கள் தம் திட்டத்திற்கேற்ப உலக மாந்தரை நல்வழிப் படுத்துவதற்கு அவசியமான திறமை படைத்த தனிமனிதர்களைப் பயிற்றுவிப்பதிலும் பண்படுத்துவதிலும் முதலில் தம்சக்தியைச் செலவிட்டார்கள்.

இதன் மூலம் தமது வாழ்வு முழுக்க இறைகட்டுப்பாட்டை ஏற்றுநடக்கும் பண்புகள் நிறைந்ததொரு சமூகம் உருவாகியது, அவர்களைக் கொண்டுதன்னிகரற்றதொரு மக்கள் சமுதாயம் அன்றைய உலகில் தோன்றியது.

**சிந்திப்போம்!**

ரசூல் (ஸல்) அவர்கள் புகழ்பற்றி மேடை, மேடையாக ஏறிப் பேசும் நாம், பந்திபந்தியாக கைவலிக்கும் வரை எழுதித் தள்ளும் நாம் அவர்களின் போதனைகள், அவர்கள் அமைத்த உன்னத சமுதாயம் என்பன பற்றி சிந்தித்ததுண்டா? பல நூற்றுண்டுகளாக ஆழ்ந்த உறக்கத்தில் இருந்துவிட்டோம். இனியாவது உறக்கத்திலிருந்து மீண்டு உணர்ச்சி பெற்று சிந்திக்க வேண்டாமா? மானிலத்தின் மாநபியவர்காட்டித் தந்த பண்புகள் நம் மிடமுண்டா? இல்லையென்றால் நாம் இன்று அடைந்துள்ள இழிநிலைக்கு வேறேதும் காரணம் வேண்டுமா? இன்று இஸ்லாத்துக்கு முற்றிலும் புறம்பான திட்டங்களையல்லவா நம் வாழ்க்கை முறையாகக் கொண்டுள்ளோம்?

**செயலாற்றுவோம்!**

இனிமேலும் நாம் உறங்கிக் கொண்டிருக்கமுடியாது: விழித்தெழவேண்டும். இஸ்லாம் கட்டியெழுப்பிய இலட்சியக் குழுவைச் சேர்ந்தவர்களே நாம் என்பதை உணர வேண்டும். பிச்சா பாத்திரத்தை ஏந்தி என்றும் நாம் உதவி தேடிக்கொண்டிருக்க முடியாது. எனவே,நம்மிடையேயுள்ள அபிப்பிராய பேதங்களை மறப்போம்; இஸ்லாத்தின் இணையற்ற கொடியின் கீழ் ஒன்று திரள்வோம். இறைவனையே நம்பி சோர்வு மறந்து உறுதியோடு செயலாற்றுவோம். இஸ்லாமிய சன்மார்க்கமே மானிட சமுதாயத்தின் சுபிட்சத்துக்கும் சாந்திக்கும் வழிகாட்டும் வாழ்க்கைத் திட்டம் என்பதை வையகத்துக்கு நிரூபித்துக்காட்டுவோம், வாருங்கள்!

ஜமாஅதே இஸ்லாமி
பயிற்சி மன்றம்
மாவனல்லை.

## எனது மதம்...:

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்களுக்கு இசையானது குறுகிய கால ஆறுதலையே வழங்குகிறது, இது 'நவீன மயப்படுத்தப்பட்ட வாழ்க்கை முறை' என நாம் அழைக்கும் காருண்ய தன்மையற்றஅமைப்பிலிருந்து விடுபட்டுக்கொள்வதற்கான முயற்சியேயாகும்.

கேள்வி; ஆகவே, நீங்கள் இசைத்துறை ஈடுபாட்டை நிறுத்திவிட்டீர்கள் அல்லவா?

பதில்: உண்மையான,நேரிய பாதையிலிருந்து இசை என்னைத் திசைதிருப்பிவிடும்என்ற பயத்தில், அது சார்பான நடவடிக்கைகளை இடை நிறுத்தியுள்ளேன் எனினும், இசைத் துறையுடன் இனி என்றுமே ஈடுபாடு கொள்ள மாட்டேன் என்று திட்டவட்டமாகக் கூற முடியாது.'இன்ஷாஅல்லாஹ்' என்று கூறுது அது சாத்திய மாகாது.

(வளரும்)

# தாரணியில் ஒரு தனி மனிதர்!

அல்லாஹ் அல்குர்ஆனில் தனது திருத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களைப் பல்வேறு திருவசனங்கள் மூலம் நமக்கு அறிமுகப் படுத்துகின்றான். அவர்கள் இவ்வுலகுக்கு அனுப்பப்பட்ட நோக்கம், அவர்களது சிறப்பியல்புகள், பண்பு நலன்கள் ஆகியவைகளை அவை விவரிக்கின்றன. இந்த அனைத்து வசனங்களின் சாரமாக விளங்குகிறது.

''லகத்கான லகும் ஃபீரசூலில்லாஹி உஸ்வத்துன் ஹஸனு ''(உங்களுக்காக அல்லாஹ்வின் தூதரிடம்ஓர் அழகிய முன்மாதிரி இருக்கின்றது.) (33;21) என்ற அல்குர்ஆன் வசனம்.

ஒருவரை முன்மாதிரியாகக் கொள்ள அவர் பல சிறப்புக்களை பெற்றிருக்க வேண்டும்.

அவரது கொள்கைகள்:

★ வாழ்கையின் எல்லாத் துறைகளுக்கும் வழி காட்டுதல் வேண்டும்.

★ எல்லாக் காலங்களுக்கும், உலகம் முடிகிற வரை வாழப் போகின்ற அனைத்து மக்களுக்கும், வழி காட்ட வேண்டும்.

★ நாடு, இனம், சமூகம் என்ற வரையறைகளுக்கு அப்பாற்பட்டு எல்லா மக்களுக்கும் வழிகாட்ட வேண்டும்.

உலகில் தோன்றிய பல்வேறு தலைவர்களுள் இத்தனை சிறப்பம்சங்களையும் கொண்ட ஒருவர், முஹம்மத் மூஸ்தபா (ஸல்) அவர்களே என்பதனை எவரும் மறுக்க முடியாது.

தன்னுடைய வாழ்நாளிலேயே தனது கொள்கைகளுக்கு செயல் வடிவம்கண்டு, இஸ்லாம் நடைமுறைக்கு ஏற்றகொள்கையே என்று நிரூபித்தவர்கள் நபி(ஸல்) அவர்கள். அவர்கள் மரணிக்கும் தருவாயில் பத்து லட்சம் சதுர மைல்கள் அவர்களது ஆட்சிப் பரப்பிற்குள் இருந்தது.

ஒருலட்சத்து இருபத்தையாயிரம் நபித்தோழர்கள் அடங்கிய இஸ்லாமிய அணியொன்றையும் அவர்கள் உருவாக்கினார்கள். உலக வரலாற்றில் எந்தத் தலைவரும் இத்தகைய சாதனையை நிகழ்த்தியதுஇல்லை. தனது எதிரிகளின் நம்பிக்கைக்கும், பாராட்டுக்கும், போற்றுதலுக்கும் கூட உரியவராக உத்தம நபி (ஸல்) அவர்கள், விளங்கினார்கள்.

முஹம்மத் (ஸல்)அவர்கள், ஓர் இறை தூதராக, படைத்தளபதியாக, அரசராக, போர்வீரராக, வியாபாரியாக போதகராக, வேதாந்தியாக, இராஜ தந்திரியாக, பேச்சாளராக, சீர்திருத்தவாதியாக,நீதிபதியாக, எளியோரின்,பலமற்றோரின் பாதுகாவலராக, அன்பு, கருணை என்பனவற்றின் மொத்த இருப்பிடமாக திகழ்ந்தார்கள் என்பது சர்ச்சைக்கிடமின்றி சகலரும் ஏற்றுக் கொண்டுள்ள உண்மையாகும்.

எனவே, எந்தக் கோணத்திலிருந்து நோக்கினாலும் ரசூல் (ஸல்) அவர்கள் ஒருவரைத்தான் நாம் இவ்வுலகின் சிறந்த முன்மாதிரியாகக் கொள்ள முடியும்.

இதனைத்தான் அல்லாஹ்வும் அழகுற''நம்முடைய தூதரிடத்தில் உங்களுக்கு ஓர்அழகிய முன்மாதிரி இருக்கிறது'' என அல்குர்ஆன் மூலம் உலகறியச் செய்தான்.

ஏற்போம்! பின்பற்றுவோம்!!

—டாக்டர் கே. வீ. எஸ். ஹபீப் முஹம்மத், சென்னை

### இலங்கை அரசியல் கட்சிகளும் முஸ்லிம்களும்-5

# சலுகைகளால் சமூகம் வளராது!

"முஸ்லிம்கள் வியாபாரிகள். வியாபார நோக்கமாகவே இங்கு வந்தார்கள் அதனை அபிவிருத்தி செய்து வாழ வழிசெய்து கொண்டால் போதுமானது'' என பலரும் அவ்வப்போது கூறக் கேட்கின்றோம்! இது முற்றிலும் சரியான வாதமல்ல.

இலங்கைக்கு வருகை தந்த ஆரம்ப கால முஸ்லிம்கள் வெறும் வியாபாரத்தைத் தனது நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. மாறாக, தாம் ஏற்றுக்கொண்ட இஸ்லாத்தின் பிரதிநிதிகளாகவும், பிரசாரகர்களாகவும் வந்தார்கள் என்பதற்கு அவர்கள் இங்கு வாழ்ந்த முறையே சான்று பகரும்.

அவர்கள் இங்கு வந்து குடியேறி, அப்போது இங்கு வாழ்ந்த மக்களுடன் மிகவும் அன்யோன்யமாகவும், ஒற்றுமையுடனும் வாழ்ந்தனர். தமது வியாபாரத்திலும் மக்களுடனான ஏனைய தொடர்புகளிலும் நேர்மை, ஒழுக்கம், நற்பண்பு என்பவற்றைக் கடைப்பிடித்தனர். தமது செயல்களில்இறைசிந்தனைக்கு அதிக முக்கியத்துவம் அளித்தனர்.

இவற்றின் காரணமாக, அன்று வாழ்ந்த சிங்கள மக்கள் முஸ்லிம்களை மிகவும் மரியாதையாக நடத்தினர். எந்த ஒரு விடயத்திலும் முஸ்லிம்களுக்கு தனியிடம் அளித்து கௌரவித்தனர். அப்போது அனுராதபுரியில் ஆட்சி புரிந்த மன்னன் அக்ரபோதியும் வேறு பல சிங்கள மன்னர்களும்முஸ்லிம்களுக்கு அளித்த கண்ணியத்தையும், முஸ்லிம்களுடன் நடந்து கொண்ட முறைகளையும் ஆராயும் ஒருவர் இந்த உண்மையைத் தெரிந்து கொள்ள முடியும் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறு, முஸ்லிம்களின் உயரிய பண்பினால் கவரப்பட்ட சிங்கள மக்கள் கணிசமானோர் காலக் கிரமத்தில் இஸ்லாத்தில் இணைந்து கொண்டனர். இல்லாவிட்டால் ஆரம்பத்தில் வந்த விரல் விட்டெண்ணக்கூடிய முஸ்லிம்களின் பிறப்புவிகிதம் பெருகித்தான் இன்றிருக்கும் சுமார் பத்து இலட்சத்துக்கும் அதிகமான தொகை முஸ்லிம்களைக் கொண்ட சமூகம் உருவானது எனக் கூறுவது பொருத்தமானதன்று.

இந்த வளர்ச்சியை மற்றொரு வகையிலும் கணக்கிட்டுப் பார்க்கலாம்.

போர்த்துகீஸர், ஒல்லாந்தர், பிரித்தானியர் முதலியோர் இந்த நாட்டை சுமார் ஐந்து நூற்றாண்டுகள் அடிமைப்படுத்தி ஆட்சி புரிந்தனர். அக்காலை இந்த நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் துறைகளில் மட்டுமல்லாது சிந்தனையை சீர்படுத்தும் கல்வித் துறையிலும் தமக்குச் சாதகமான பல மாற்றங்களைச் செய்தனர். பெரும் வர்த்தகக் கம்பெனிகள், கல்விக்கூடங்கள் என்பவற்றுடன் மலைநாட்டுத் தோட்டங்கள் அனைத்தையுமே தமதுடைமையாக்கிக் கொண்டிருந்தனர். அந்த வகையில் அவர்கள் எஜமானர் தரத்திலும் இந்நாட்டு மக்கள் அடிமைகள் தரத்திலுமே இருந்தனர்.

இதே வேளையில் முஸ்லிம்களை நோக்கினால் இதற்கு நேர் எதிரான நிலையிலேயே இருந்ததைக் காணலாம். அவர்கள் மேற் கூறியவர்கள் போன்று இந்த நாட்டை ஆளவில்லை. அவர்கள் அரசியல் அதிகாரம் கொண்டவர்களாகவோ, பெரும் கல்விமான்களாகவோ இருக்கவில்லை. அவர்களுக்கு நவீன கல்விக் கூடங்கள் இருக்கவும் இல்லை. பதிலாக சாதாரணவியாபாரிகள்தரத்திலோயே இருந்தனர். அதுமட்டுமின்றி ஆங்கிலேயரின் பிரித்தாளும் தந்திரத்துக்கு இலக்கானவர்களாகவும் இருந்தனர்.

எனினும் சமுதாய வளர்ச்சியை நோக்கும் போது, சகல வல்லமையுடனும் ஐந்து நூற்றாண்டுகள் இந்த நாட்டை ஆண்ட சமூகத்தின் கிரிஸ்தவ சமய வளர்ச்சிக்கும் இலங்கையை ஆண்ட அந்நியர்களைப் போல, ஆட்சி புரியாத சாதாரண முஸ்லிம் சமூகத்தின் வளர்ச்சிக்கும் இடையே பாரிய வித்தியாசத்தைக் காண முடிகிறது.

வியாபார நோக்கங்கொண்டு மட்டும் முஸ்லிம்கள் இந்நாட்டுக்கு வந்திருந்தால் இத்தனைப் பெரிய வளர்ச்சி ஏற்பட்டிருக்க முடியாது. உண்மையான காரணம் என்னவெனில் அவர்கள் இஸ்லாத்தை மையமாகக் கொண்டு நற்பண்புகள் நிரம்பியவர்களாக வாழ்ந்தனர். அவை இந்நாட்டு மக்களை ஈர்த்தன. முஸ்லிம் சமூகம் பெருகிற்று. எனவே, முஸ்லிம் சமூகத்தின் வளர்ச்சி இரகசியமானதல்ல என்பதை யாவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

முஸ்லிம்கள் சமாதானப் பிரியர்களாகவும் எவருக்கும் தொந்தரவு இன்றியும் வாழ்ந்த போதும் இந்நாட்டில் 18 ஆம் 19ஆம் நூற்றாண்டுகளில் தோன்றிய அதிகார வர்க்கம் முஸ்லிம்களின் சமூக, பொருளாதார, நிர்வாக விவகாரங்களை அச்சுறுத்தும் வகையில் அமைந்தது. அது முஸ்லிம்களின் தனித்துவத்துக்கு ஊறு விளைவிக்கும் அளவுக்கு இடைஞ்சலாக அமையவே, அதிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டு அயராதுபோராட வேண்டிய நிர்ப்பந்தம் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டது.

இதே வேளையில், முஸ்லிம்களின் வளர்ச்சியை சீரணிக்க முடியாத சில தீய சக்திகளும் முஸ்லிம்களுக்கு எதிராக செயற்பட ஆரம்பித்தன. அவற்றின் படிமுறையான வளர்ச்சியின் எதிரொலியாக 1915- மே மாதம் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே பயங்கர கலவரம் மூண்டது. கம்பளையில் மூண்ட இக்கலவரம் காட்டுத் தீ போல் நாடெங்கும்பரவியது. முஸ்லிம்கள் கண்ட கண்ட இடங்களில் கடுமையாகத் தாக்கப்பட்டனர்; அவர்களது உடைமைகள் படுபாதகமான முறையில் சேதப்படுத்தப்பட்டன. உண்மையில் இக்கலவரத்திலிருந்து இனி என்றுமே எழுந்திருக்க முடியாது எனும் அளவுக்கு முஸ்லிம்களின் நிலை பாதிப்புக்குள்ளாகியது.

இவ்வாறு, அன்று பல முனைத்தாக்குதல்களுக்கு உள்ளான முஸ்லிம் சமூகம், பயங்கர எதிர்காலம் ஒன்றுக்குள் அடியெடுத்து வைத்தது எனலாம். இன்றுவரை இந்த ஆபத்தான நிலை சீர்பெறவில்லை என்பதை இக்கட்டுரைத் தொடரை முடியும் வரைபடிப்பவர்கள் உணர்ந்து கொள்வர்.

முஸ்லிம் சமூகத்தின் அவல நிலை இப்படியிருந்த போதிலும் 1924 அக்டோபர் 15 ஆம் திகதி உருவாக்கப்பட்ட

( 26-ம் பக்கம் பார்க்க )

'அபூரம்ஸி'

# ஐயமும் தெளிவும்

மௌலானா செய்யித் அபுல் அஃலா மௌதூதி (ரஹ்)

ஐயம்; இந்த இருபதாம் நூற்றாண்டில் இஸ்லாமிய அமைப்பை நடைமுறைப் படுத்திட முடியும் என்றால், அந்த அமைப்பு தற்போதைய சிந்தனைப் போக்குகள், கொள்கைகள் ஆகியவற்றின் இடத்தைப்பெற முனையும் போது குறுக்கிடக் கூடிய தடைக் கற்களையும் நடைமுறைச் சிரமங்களையும் எப்படி அகற்றுவீர்கள்?

தெளிவு: தற்காலத்தில் இஸ்லாமிய ஆட்சியமைப்பை நடைமுறைப் படுத்த விடாமல் முட்டுக்கட்டை போட முயலும் போக்குகளையும் கொள்கைகளையும் ஆராய்ந்து பார்த்தால் அவையனைத்தும் முஸ்லிம் நாடுகளின் மீதுமேலை நாட்டினர். நீண்ட காலம் செலுத்திய அரசியல் ஆதிக்கத்தினால் உருவானவையே என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

மேற்கத்திய சமூகத்தினர் நம் நாடுகளில் ஆட்சி செலுத்தத் துவங்கியதுடன் அவர்கள் நம் கல்வியமைப்பை செயலற்றதாக்கி விட்டுத் தம்முடைய கல்வியமைப்பை அமுல்படுத்தினர். சிறிய, பெரிய அரசுஉத்தியோகங்கள் அனைத்திலிருந்தும் நம் கல்வியமைப்பின் மூலம் உருவாக்கப்பட்டவர்களை பதவி நீக்கம் செய்துவிட்டனர். தாம் ஏற்படுத்திய கல்வி திட்டத்தின் படி படித்துப் பட்டம் பெற்றவர்களுக்கே எல்லா உத்தியோகங்களையும் அளித்தனர், பொருளாதாரத் துறைகளிலும் தம் நிறுவனங்களை ஏற்படுத்தித் தங்கள் நெறிமுறைகளையும், மரபுகளையும் செயல் படுத்தினர். பின்னர் மெல்ல மெல்ல பொருளாதார வளர்ச்சியும் கூட மேற்கத்திய நாகரிகத்தையும், கல்வியையும் ஏற்றுக் கொண்டவர்களுக்கே உரித்தனதாக மாறி விட்டது.

இவ்விதம்மேலைநாட்டினர், நம் பண்பாட்டையும், நம் நெறிகளையும், கொள்கைகளையும் விட்டுப் பிறழ்ந்து செல்லும் தலைமுறை ஒன்றை நமக்குள்ளேயே உருவாக்கி விட்டனர். அத் தலைமுறை முற்றிலும் இஸ்லாத்திற்கு அந்நியமானதாகி விட்டிருக்கிறது. செயலளவில் மட்டுமின்றி, சிந்தனை போக்கிலும், வேட்கைகளிலும் கூட அது இவ்வாறு ஆக்கப்பட்டிருக்கிறது. இதுவே உண்மையில் நாம் இஸ்லாத்தின்பால் திரும்பிட தடையாக உள்ளது.

இஸ்லாத்திற்கு இணக்கமில்லாத முறைகளில் கல்வியும் பயிற்சியும் கொடுக்கப்பட்ட இவர்கள் இஸ்லாம் பின்பற்றவும் செயல் படுத்தவும் தகுந்ததன்று என நினைப்பதைத் தவிர வேறு என்ன தான் கூறமுடியும்? ஏனெனில் அவர்களுக்கு இஸ்லாம் என்றால் என்னவென்றும் தெரியாது. அதன்படிச் செயல்படுத்துவதற்காகவும் அவர்கள் உருவாக்கப்படவில்லை. எந்த வாழ்க்கை அமைப்பிற்காக அவர்கள் தயார் செய்யப்பட்டிருக்கிறார்களோ அந்த வாழ்கை முறையைத் தானே அவர்கள் செயல்படுத்தத் தகுந்ததாய் நினைக்கமுடியும்?

இப்போது நமக்கு இரண்டே வழிகள்தான் உள்ளன. தேவையின்றி இஸ்லாத்தின் பெயரைச்சொல்லிக்கொண்டு உலகை ஏமாற்றுவதை விட்டு விடவேண்டும். அடுத்து தூய உள்ளத்துடன், விசுவாச உணர்வுடன் (நயவஞ்சகமின்றி) இன்றைய கல்வியமைப்பை ஆராயவேண்டும். அதனை முழுமையாக ஆய்ந்து இஸ்லாத்தை விட்டு நம்மைப் பிறழச் செய்யும் விஷயங்கள் என்னென்ன உள்ளன, அதில் இஸ்லாமிய அமைப்பை வெற்றிகரமாய்ச் செயல் படுத்தும் வல்லமை படைத்தவர்களைத் தயார் செய்யும் வகையில் என்னென்ன மாற்றங்களைச் செய்யலாம் என்று பார்க்க வேண்டும். இந்தப் பிரச்சனை மிக அமைதியாக சிந்திக்கபட வேண்டிய ஒன்று, இதற்குத் தீர்வு காணுதவரை நாம் இஸ்லாமிய அமைப்பைச் செயல் படுத்திடப் பாதை வகுக்க முடியாது.

## ஜாஹிலிய்யத்......

(9ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுத் திகழ்ந்தார்கள். வாழ்வின்சகலஅம்சங்களிலும் ஒன்றுபோல் சீர்பெற்று நல்லறம் எங்கும் ஆட்சி புரிந்தது.

ஒருமுறை நிகழ்ந்த இந்த சமுதாயப் புரட்சி மறுமுறையும் நிகழ முடியும். இது அசாதாரணமான அற்புதத்தால் விளைந்ததன்று. என்றுமே மாற்றமுறாத இறை நியதிக்கு ஏற்பவே நிகழ்ந்தது. அந்த ஈடிணையற்ற அமைப்பு மனித இயல்பின் உள்ளாற்றலிலிருந்து எழுந்ததாகும்.

இவ்வாற்றல் இன்றும் மனித மனங்களில் மறைந்து கிடக்கிறது. அதை கவனமாக ஒருமுகப் படுத்தி, பயிற்சியளித்து, இறைவழியில் செலுத்தப்படுமானால் இன்றும் அது சரியாக இயங்கி மாபெரும் மாற்றங்களை நிகழ்த்த முடியும்.

மனித சமுதாயம் இன்று, முன்னைவிட தெளிவாக அந்தப் பாதையை உணர்ந்து பின்பற்ற முடியும்.

ஏனெனில் இஸ்லாம் கடுமையான எதிர்ப்புக்களைச் சந்தித்த போதும், தனது பாதையில் முன்னேறிச்சென்று, தான்வந்த பாதையில் மிகத் தெளிவான சான்றுகளை விட்டுச் சென்றுள்ளது. பின்னைய சந்ததியினர் இந்தப் பாதையில் சென்று இறைவன் விரும்பும் சமூக அமைப்பை கட்டி எழுப்புவதற்கு இது பல வழிகளிலும்துணையாக அமையும்.

தொகுப்பு:

எஸ்ஸெம்மெம்'.

# இறைதூதர்மீது அன்பு கொள்வது எப்படி?

''தனது தனயன், தந்தை ஆகியோரை விடவும் மற்றெல்லா மனிதர்களை விடவும் உங்களில் ஒருவருக்கு நான் அதிகம் உவப்பானவனும் ஆகாதவரையில் அவர் ஈமான் கொண்டவராகார்'' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். இந்த ஹதீஸ் புகாரி, முஸ்லிம் கிரந்தங்களில் பதியப் பட்டுள்ளது.

ரஸூல் (ஸல்) அவர்கள் மீது மற்றெல்லாப் படைப்புகள், குழந்தைகள், தாய், தந்தை, மனித்குலம் ஆகிய அனைத்தையும் விட அதிகமான அன்பு கொண்டவனுய்த் திகழாத வரையில் ஒருவன் உண்மையில் முஃமினுக, இறை நம்பிக்கை உடையவனுய்த் திகழ மாட்டான் என்பது திருக்குர் ஆனின் திருவசனங்கள் சில வற்றிலிருந்தும், ஹதீதுகளில் இருந்தும் தெரிய வருகிறது.

இறைத் தூதர் மீது எல்லாவற்றையும்விட அன்பு செலுத்தவேண்டும் என்பதன் கருத்து, இறைத் தூதர் (ஸல்) அவர்களின் வாய்மொழிகள், கட்டளைகள் ஆகியவற்றின் மீது முஃமீனுக்கு தாய், தந்தை மற்றும் மனிதர்களுடைய நலன்கள், அவர்களின் விருப்பு வெறுப்பு ஆகியவற்றைப் பற்றியெல்லாம் சிந்திக்காமல் அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்குக் கீழ்ப் படிவதிலேயே முழுக்க முழுக்க ஆர்வமும் ஆசையும் கொண்டு விடவேண்டும். முழுமையாக அண்ணலவர்களையே பின்பற்றுவோராய் மாறிவிடவேண்டும் என்பது தான்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மீது அன்பு செலுத்தவேண்டும் என்பதன் மற்றொரு கருத்து; அவர்களின் வாழ்வு, நடத்தை, பண்பு, வழிமுறை ஆகியவை உலகிலுள்ள மற்றெல்லா மனிதர்களின் வழிமுறைகளைக் காட்டிலும் நமக்கு அதிக விருப்பமுள்ளவையாக இருக்க வேண்டும். அவர்களின் நடத்தையை முன் வைத்து நமது வாழ்க்கைப் பாதையைச் செப்பனிட முயல வேண்டும். அண்ணலவர்களின் அடிச் சுவட்டைப் பின்பற்றி நடக்கப் பாடுபடவேண்டும்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மீது அன்பு செலுத்த வேண்டும் என்பதன் மூன்றுவது கருத்து; எந்த தீனை அவர்கள் உலகின் முன் சமர்ப்பித்தார்களோ, எதனை அவர்கள் தமது உயிரினும் மேலாக மதித்தார்களோ, எதைச் செயலாற்றவும், பரப்பவும், உயர்த்தவும், ஓங்கச் செய்யவும் தம்மை முழுமையாக அர்ப்பணித்தார்களோ, எதற்காக வேண்டி பெரும் கொடுமைகளையும் இன்னல்களையும் சகித்தார்களோ, பசி பட்டினியால் வாடி வதங்கினார்களோ, வீடு, நாடு, முதலியவற்றைத் துறந்தார்களோ, கொலை பாதகச் சூழ்ச்சிகளுக்கு இலக்கானார்களோ, எதிரிகளின் தாக்குதலுக்குள்ளாகிக் காயம்பட்டு இரத்தம் சிந்தினார்களோ, அந்ததீனை நாமும் உயிரினும் மேலாக மதிக்க வேண்டும். அதன் வழியில் செயலாற்றவும், அதனைப் பரப்பவும், நானிலம்கமல அதனை ஓங்கச் செய்யவும் நம் இறுதி மூச்சு வரை நம்மை முழுமையாக அர்ப்பணித்து விடவேண்டும். அதற்காக எல்லாவிதமான தொல்லைகளையும் ஏற்று, உயிர், உடைமை, குழந்தைகள், பூமி, எதிர்காலம், சுகபோகம் ஆகியவற்றைத் தியாகம் செய்யவும் தயாராகி விடவேண்டும்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மீது அன்பு செலுத்த வேண்டும் என்பதன் நான்காம் கருத்து இது. நாம் நபி (ஸல்) அவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தார். தோழர்கள், அவர்கள் வழியைப் பின்பற்றி நடந்த அவர்களின் தீனைப் பாரெங்கும் பரப்பி உயர்வடையச் செய்யப்பாடுபடுவர் ஆகிய எல்லாருக்கும் இறைவனிடம் துஆச் செய்தலாகும். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நமக்குச் செய்த உபகாரங்கள் எண்ணற்றவை, அவற்றுக்கெல்லாம் நாம்பிரதி செய்ய வேண்டுமாயின் ''அல்லாஹ் அவர்களுக்கு மகத்தான நற்கூலி வழங்குவானக!'' என்று துஆச் செய்வதைத் தவிர வேறு ஒன்று மேயில்லை. இதனுல் தான் ஒவ்வொரு தொழுகையின் இறுதியிலும் அவர்கள் மீது ஸலவாத்து ஓதுவது சுன்னத்தாக்கப்பட்டிருக்கிறது. தொழுகையைத் தவிர உள்ள சந்தர்ப்பங்களில் நேரம் கிடைக்கும் போதெல்லாம் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீதும் அவர்களைச் சார்ந்தோர் அனைவர் மீதும் ஸலவாத்துச் சொல்ல வேண்டும். இது அண்ணலவர்கள் மீது கொண்டிருக்கும் அன்புக்கு அறிகுறியாகவும் அந்த அன்பை மேலும்மேலும் வளர்ந்தோங்கச் செய்வதற்கு ஒரு செயலாகவும் திகழ்கின்றது.

தொகுப்பு;

முஹம்மது ரசூல் இஸ்லாம்,
கபூரிய்யா அரபிக் கல்லூரி.

## தவறுக்கு உடனடிப் பரிகாரம்!

அபூதர் அல் கிபாரி (ரலி) அவர்கள், ரசூல் (ஸல்) அவர்கள் முன்னிலையில் ஓர் அடிமையுடன் தர்க்கித்துக் கொண்டிருந்தார், பேச்சு முற்றவே அந்த சஹாபி கோப முற்று '' ஒரு கறுத்த பெண்ணின் மகனே'' என அந்த அடிமையை அதட்டி விட்டார்.

இவ்வாறு சொல்லக் கேட்ட நபி (ஸல்) அவர்கள் அவரை விறைத்துப் பார்த்தார்கள்.

''நீர் அந்த அடிமையைக் குறித்துச் சொன்னவார்த்தைகள் மிகவும் கடினமானவை! நற்கருமங்களால் அல்லாமல் ஒரு சிவப்புப் பெண்ணின் மகன் ஒரு கறுத்த பெண்ணின் மகனை விடச் சிறந்தவனுக மாட்டான்'' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நபிகளார் இப்படிக் கூறக் கேட்டதும் அபூதர் (ரலி) அவர்கள் நிலத்தில் குப்புற விழுந்தார்கள், அந்த நீக்ரோஅடிமையை நோக்கி''நீர் எழுந்து நில்லும். என் கழுத்தில்உமது காலை வைத்து மிதியும், இதுதான் நான் உமக்கு பேசியபேச்சுக்குத் தண்டனை''என்று கூறினர்.

சஹாபாக்கள் தாம் ஒரு தவறை செய்து விட்டால் உடனடியாக இப்படிதான் பரிகாரம் செய்து கொண்டார்கள். அவர்களது உயர்வுக்கு இப்பண்பும் ஒரு காரணமாகும். — அல் ஹதீஸ்

# நோ ஈஸ்ட்! நோ வெஸ்ட்!

தம்பி எங்கே நீ
செல்கின்றாய்?
அப்துல்லாஹ்
அஹமதின்
பரம்பரையில்
முஸ்லிமாய்
உதித்த - நீ
மாநபிகள் காட்டிய
வழி மறந்து
எங்கே செல்கின்றாய்?

காலந்தான்
மாறுகின்றது
ஆனால்
உன் - கோலத்தை
மாற்றிடாதே!
காலத்துக்குக் காலம்
உன்
கோலம் மாறினால்
இஸ்லாத்தில்
நாகரீகமற்ற
பச்சோந்தி
வர்க்கமொன்று
தோன்றிடும் என்பதை
மறந்துவிடாதே!

தம்பி 'முஸ்லிமாய்
பிறந்த - நீ
ஏன் - மாற்றான்
வேஷத்தை நாடுகின்றாய்?
இறைவன் காட்டிய
பாதையொன்றிருக்க
வெஸ்டன்
ஈஸ்டன்
என்றே - புதிய
பாதைகளில் சென்றால்
உன் இலக்கு
தவறிவிடும்!

தம்பி - நீ
காரிருளில்
திசை மாறிச்
செல்கின்றாய்!
உன்
பாதையை மாற்றிவிடு!

தூரத்தே தெரியும்
மின் மினிப் பூச்சியை நாடி
ஏன் செல்கின்றாய்?
உன் கையில் இருக்கும்
தீன் ஒளி(ச்) சுடரை(ப்)பார்?
அது
கறை படிந்து(க்)கிடக்கின்றது
அக் கறையை அகற்றி
அதன் பிரகாசத்தை
உலகுக்கு உணர்த்து!
அப்போ
அந்த மின் மினி(ப்)
பூச்சியை நம்பியிருக்கும்
இந்த உலகமே
உன்னை நாடி வரும்!

தம்பி மீண்டும்
சொல்கின்றேன்
உலகம் நகைக்கும்
விளக்கேந்திய
குருடனாய் மாறிவிடாதே!

— **நூராணியா ஹஸன்**

# ஏற்றி விடுகின்றது . . .

( 18ஆம் பக்கத் தொடர்ச்சி )

காட்டி இஸ்லாம் எவ்வாறு தொழிலாளர் பிரச்சினைகளைத் தீர்க்கின்றது என எடுத்துக் கூறினேன். இக்கருத்து பலரது கவனத்தை ஈர்த்தது என்பது குறிப்பிடத்தக்கது.

கேள்வி;- முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழும் இலங்கையிலுள்ள முஸ்லிம்களுக்கு உங்கள் ஆலோசனை என்ன?

பதில்:- நீங்கள் இஸ்லாமல்லாத எந்தக் கொள்கையில் அல்லது எந்த இயக்கத்தின் பக்கமும் செல்லக்கூடாது. அவ்வாறே முஸ்லிம்களுடைய பிரச்சினைகளை மட்டும் நோக்குகின்ற இனவாதம் கொண்டவர்களாகவும் இருக்கக்கூடாது. இஸ்லாத்தின் அடிப்படையில் முழு மனித சமூகத்தின் பிரச்சினைகளையும் தீர்க்கத் துணிந்து எழுந்து நில்லுங்கள். அல்லாஹ் அருளால் நீங்கள் வெற்றிபெற முடியும். உங்கள் கடமை மகத்தானது. உங்களிடம் சத்தியம் இருக்கிறது. மக்கள் அதனைத் தேடி அலைகிறார்கள். நீங்கள் கடமையை நிறைவேற்றாவிட்டால் அல்லாஹுத்தஆலா உங்களை மறுமையில் தண்டிப்பான். அல்லாஹுத்தஆலா உங்கள் இஸ்லாமியப் பணிக்கு அருள் புரிய நான் பிரார்த்திக்கிறேன்.

# புகைக்காதீர் . . .

( 10ம் பக்கத் தொடர்ச்சி )

கின்றன. இம் முயற்சியில் அநேக குட்டிகள் இறந்த போதிலும் எஞ்சிய சில குட்டிகளின் விற்பனைமூலம் அதிக லாபம் பெறுகிறார்கள்.

★ புகைப்பழக்கத்தால் வாலிபர்களுக்கு ஏற்படும் விபரீத விளைவுகளை கேட்டறிந்த பிரான்ஸ் நாட்டு மன்னன் லூயி நெப்போலியன் ஒரே நாளில் பாரிஸ் நகரில் மட்டும் முப்பதாயிரத்துக்கு மேற்பட்ட இளைஞர்களின் புகைக்கும் குழாய்களை உடைத்தெறிந்தார். பள்ளியிலிருந்து புகைத்தவர்களை வெளியேற்றினார்.

★ ''ரீடர்ஸ் டைஜெஸ்ட்'' போன்ற அதிக அளவில் விற்பனையாகும் ஆங்கில முன்னணி மாத இதழ்கள் தங்கள் பத்திரிகைகளில் சிகரெட் விளம்பரங்களை வெளியிட்டு மக்களின் ஆரோக்கியத்தை கெடுப்பதில்லை என்று முடிவுசெய்துள்ளது. தமிழில் ஆனந்தவிகடனும் இதை கடைப்பிடிக்கிறது.

இத்தனை தீமைகளுக்கும் வழி வகுக்கும் புகைத்தலை இன்றே விட்டு விடுங்கள். அதனால் நன்மைகள் பலவுண்டு.

# இப்படித்தான் வாழ . . .

( 17ஆம் பக்கத் தொடர்ச்சி )

முனையவில்லை. மன்னித்து விட்டார்கள். மக்காவை வென்றபின் தாயிஃப் நகர மக்களின் குழுவொன்று வந்தபோது அவர்களை மிகவும் கௌரவித்தார்கள்.

நபி (ஸல்) அவர்கள் பிராணிகளிடமும் மிகவும் அன்பு காட்டுவார்கள். ஒருமுறை பிரயாணம் செய்து கொண்டிருந்தார்கள். வழியில் ஓரிடத்தில் ஒரு பறவை முட்டையிட்டு வைத்திருந்தது. ஒரு மனிதன் அந்த முட்டையை எடுத்துக் கொண்டான். இதைக் கண்டபறவை நிம்மதியிழந்து தவிக்கலாயிற்று. நபி (ஸல்) அவர்களுக்கு விபரம் தெரியவந்தது. அந்த முட்டையை அதே இடத்தில் வைக்கச்செய்தார்கள்.

ஒருமுறை ஒரு நபித்தோழர் குருவிக் குஞ்சுகள் சிலவற்றை நபி (ஸல்) அவர்களிடம் கொண்டு வந்தார். அந்தத் தோழரிடம், ''குருவிக் குஞ்சுகளை அதன் தாயிடமே விட்டு விட்டு வாருங்கள்'' என்று கூறினார்கள்.

(ரசூல் (ஸல்) அவர்களின் வாழ்க்கைச் சிறப்பை இவ்வாறு கூறிக்கொண்டே போகலாம். அவர்கள் மனிதருள் மாணிக்கம். குணக்குன்று. ஒழுக்க சீலர். முழு மனித சமுதாயத்திற்கும் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டிய மாமனிதர். அவர்களது வாழ்வை அறிந்துணர்ந்து பின்பற்றுவது மக்கள் கடமை.)

# மேற்குலகின் அழிவுக்குக் கருத்தடை காரணமாகலாம்

இலங்கை வானொலி-செய்தி மஞ்சரியில் சென்ற 15-11-81ல் ஒலிபரப்பப்பட்ட விடயமொன்றிலிருந்து தொகுக்கப்பட்டது.

வரலாற்று ஏட்டினைப் புரட்டும் போது, அல்லாஹ்வின் சட்டங்களுக்கு சவால் விடுத்தமனிதஇனங்கள்காலாகாலத்தில் அழிந்துபட்ட நிகழ்ச்சிகள் அங்கொன்று இங்கொன்றாக காணக்கிடைக்கின்றன. இவ்வாறு மனித இனத்துக்கு பாடங்கள் புகட்டிய வரலாற்றையும் மறந்து, மனிதனின் சலன புத்தி மீண்டும் அவனை அலைக்கழித்துவருவதை இன்று கண்கூடாகக் கண்டு வருகிறோம். தன் குறையறிவுக்குப் பட்டதை தான் நினைத்தவாறு ஒரு சமூகத்தில் விதைத்ததன் பயனாக நச்சுக் கனிகளை உண்டு உமிழ்ந்துகொண்டிருக்கும் பரிதாப நிலையை இன்றைய மேற்குலகு எமக்கெல்லாம் படம்பிடித்துக் காட்டுகின்றது. எனினும் வேடிக்கை என்னவென்றால், இத்தனையையும் பார்த்து பாடம்படிக்க வேண்டிய கீழைத்தேயம், எதையுமே அறியாததைப்போன்று மேற்குலகின் சட்டங்களிலேயே தஞ்சம் புகுந்திருக்கின்றது. இதற்கு நமது நாடும் விதிவிலக்கல்ல.

## மேற்குலகின் நயவஞ்சகம்

பெருகிவரும் உலக சனத்தொகையைக் கட்டுப்படுத்த மேற்குலகு கங்கணங்கட்டி வருவது புதிதான செய்தியொன்றல்ல. குடும்பக்கட்டுப்பாடு என்ற போர்வையில், முழு உலகையும் வஞ்சித்து ஏமாற்ற நினைக்கும் முயற்சியில் வெற்றி காண அயராது உழைத்துவரும் மேற்குலகின் உண்மை நிலையைப் புரிந்துகொள்வது இத்தருணத்தில் அவசியம் தேவையானதாகும்.

ஐரோப்பாவின் பிரபல சமூகவியலாளரான 'கரல் குருப்ஸ் பேகர்' என்பவரும், ஏனைய சமூக முன்னேற்றச் சங்கங்களில் அங்கம் வகிக்கும் அறிஞர்களும் தற்போது குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தை வெளிப்படையாகவே எதிர்த்து வருகின்றனர். மேற்குலகு எதிர்காலத்தில் மிகப் பயங்கரமான வெறுமை நிலைக்குத் தள்ளப்படலாம் என அவர்கள் கூறிவருகின்றனர். இன்னும் சில வருடங்களில் பிரிட்டன், அமெரிக்கா, ஜர்மன் போன்ற நாடுகளில் சனத்தொகை அரைவாசியாகக் குறைந்துவிடும் என திட்டவட்டமாகக்குறிப்பிட்டு வரும் மேற்படி அறிஞர்கள், அருகிவரும் சனத்தொகையை உடனடியாக ஈடுசெய்ய நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தை வற்புறுத்தி வருகின்றார்கள். இந்நிலையில் செய்வதறியாது அரசாங்கங்கள் திண்டாடி வருவதையும், இதற்கு மாற்றுமருந்து இல்லாத நிலையில், தமது வஞ்சக வலையை கீழைத்தேயங்களில் விரித்துவருவதையும் சென்ற 'அல்ஹஸனாத்' இதழொன்றில் கலாநிதி குர்ஷித் அஹ்மத் அவர்களது கட்டுரை நன்கு விளக்குகிறது.

மேற்கு நாட்டினரின் தற்போதைய குடும்ப நிலை இதுதான். பிரிட்டன், அமெரிக்கா, ஜர்மன் போன்ற நாடுகளில் ஒரு குடும்பத்தில் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை சராசரியாக 1·5க்கு சற்று கூடுதலாகவே காணப்படுகிறது. இந்நாடுகளிலுள்ள ஆண்களும் பெண்களும் திருமணம் செய்து கொண்டாலும் ஒரு பெண்ணைப் பொறுத்தவரை 42 வயதிற்குப் பின்னரே ஒரு குழந்தைக்குத் தாயாக நினைக்கிறாள். இதேநிலையில்ஓர் ஆண் 45வயதைக் கடந்த பின்னரே குழந்தைக்குத் தகப்பனாகும் அருகதையைப் பெறுகின்றான். இதுகால வரையிலும் குடும்பக்கட்டுப்பாட்டை ஆணும், பெண்ணும் வெற்றிகரமாக நடாத்தி வருகின்றார்கள். மேலும் அவர்களின் மன நிலையும் பாதிப்படைந்திருப்பதை அந்நாடுகளில் நன்கு உணர முடிகின்றது.

## குழந்தைப் பாசம் இல்லை.

பெண்களைப் பொறுத்தவரை குழந்தைப் பாசமென்பது அவர்களைவிட்டே மறைந்துவிட்டது எனலாம். ஒரு குழந்தையைப் பெற்று வளர்ப்பதை பெரும் சுமையாகக்கருதுகின்றனர். தமக்கொரு வாரிசு என்பதை பெற்றார் முற்றாகவே மறந்துவிட்டனர். தமது முதுமைப் பருவத்தில் ஒரு குழந்தைக்கு பெற்றோராய் இருக்கும் அபாக்கிய நிலையில் குழந்தையை வளர்க்கும் பொறுப்பையும் வேறு இடங்களில் ஒப்படைத்து வருகின்றனர். எங்கும் குழந்தைப் பண்ணைகள் உருவாக்கப்பட்டு பெற்றாரின் பாசத்தை அறியாத குழந்தைகள் மந்தைகளைப் போன்று வளர்க்கப்படுகின்றனர். பிள்ளைகள் பெற்றோருக்கு ஆற்ற வேண்டிய சடமைகளை அறியாத நிலையில், ஒரு சில பரிசுப் பொருட்களுடன் தம் பெற்றாரைக் கண்டு வருவதுடன் கடமை முடிந்துவிட்டது எனக் கருதுகின்றனர். இந்தப் பழக்கங்களை வழக்கப்படுத்திக் கொண்டதன் விளைவாக பழைய நிலைக்கு மீண்டு வருவதென்பது அந்நாடுகளைப் பொறுத்தவரை அசாத்தியமாகத் தோன்றுகிறது.

இந்நிலையில் இவர்களை மீட்டெடுக்க ஓரே ஒரு வழிதான் உண்டு. இஸ்லாமிய சட்டங்களைப் பின்பற்றுவதுதான் அந்த ஓரே வழி. மேற்குலக அறிஞர்கள் இதனை உணர்ந்து செயற்படுவார்களா?

தொகுப்பு: எம். ஏ. ஹிபதுர் ரஹ்மான்

## தர்க்கம் வேண்டாம்

எங்களை முஸ்லிம்களில் ஒரு பிரிவினராக மாற்றிவிடும் சகல வழிகளிலிருந்தும் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

முஸ்லிம் பொது மக்களைவிட்டுப் பிரிந்து தனியாகத் தொழாதீர்கள்! தொழும்போது நீங்கள் வேறொரு ஜமாஅத்தை உண்டு பண்ணாதீர்கள்!

தர்க்கங்களும் வாதங்களும் புரியாதீர்கள்! உண்மையை ஆராயும் நோக்கமில்லாது, வெறும் எதிர்ப்புக்கென்றே இயக்கத்தை இலக்காகக் கொள்ளப்படும் இடங்களில் பொறுமையோடும் கட்டுப்பாடோடும்செயலாற்றுங்கள்.

ஒரு வேளை எவரேனுமொருவர் நல்லெண்ணத்தோடு உண்மையை அறிய விரும்புவாராயின், அவருக்கு ஆதாரத்தோடு விஷயத்தை விலக்கி வைக்கலாம்.

ஆனால் விளக்கத்தில் கோபத்துக்கு வழியேற்படுமாயின், உடனே அதை நிறுத்திவிடுங்கள்!

ஏனெனில், தர்க்கவாதம் ஒரு மாபெரும் பீடையாகும், அதனாலேயே ஆயிரக்கணக்கான குழப்பங்கள் ஏற்படுகின்றன. அதனால் ஏற்படும் ஒரு குழப்பங்கூட ஒழுங்கு நிலைக்கு வராது.

(ரூதாத்— ஜமாஅதே இஸ்லாமி, 1-ம் பாகம்)

# ஐயமும் தெளிவும்

**மௌலானா செய்யித் அபுல் அஃலா மௌதூதி (ரஹ்)**

(1) ஏழ்மை நம்மிடையே அதிகமாக பரவியுள்ளது. ஆகவே, இறைவணக்கத்தை விட, சமூக சேவைக்கு அதிக முக்கியத்துவம் கிடைக்க வேண்டுமல்லவா?

இறை வணக்கம் ஒரு சமூகத்தாரால் கடைப்பிடிக்கப்படும்போது, அங்கே சமூக சேவை நிறைவேறுமல் இருக்க முடியாது. இஸ்லாத்திலே சமூக சேவையையும் இறை வணக்கம் என்று வர்ணிக்க முடியும். ஏனெனில் அவற்றையும் இறைவன் தானே நிர்ணயித்துள்ளான்.

இறைவணக்க நிறைவேற்றத்தைப் பொறுத்து, இறைவனுக்கு ஏதோ தேவைகள் (அல்லாஹ் காப்பாற்ற) இருப்பதாக நாம் எண்ணிவிடலாகாது. இறை வணக்கத்தை நிறைவேற்றுவதால், சமூக சேவை செய்யவல்ல மனோபாவம் நம்முள் பக்குவமடைகிறது. இறைவணக்கம் நம்முள் இறை அச்சத்தை ஏற்படுத்தி, நம்முடைய ஒரு தேவையை பூர்த்தி செய்கிறது. இறைவணக்கத்தை நிறைவேற்றுவதில் சோம்பல் காண்பிப்பவன், பிறருடைய தேவைகளை பூர்த்தி செய்வதிலும் தயக்கம் காண்பிப்பதை நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம்.

சமூகத்தில் 'தேவைகள்' கொண்ட ஒவ்வொரு நபருக்கும் சேவை வேண்டியுள்ளது. குடும்பத்தாரின் தேவைகளோடு இது தொடங்குகிறது. சிறுகச் சிறுக இந்த வட்டம் விரிவடைந்து சமூகத்தில் உள்ள அனைவரையும் அணைத்துக் கொள்கிறது. குர்ஆன் நீதியைப் பற்றியும், சகாயம் அளிப்பதைப் பற்றியும், பெற்றோருக்குரிய கடமைகள் பற்றியும், அனாதைகளுக்கு ஆதரவு அளிப்பது பற்றியும் ஒவ்வொருவரின் தேவையைப் பொறுத்து கவனம் செலுத்தும்படி கூறுவது போல் செயல்கள் நடந்தேறினால் சமூகம் செழித்தும் தழைத்தும் ஓங்குமே தவிர பற்றுக் குறையால் வாடாது.

(2) மக்கள் மனதில் இதனை படியவைக்க இஸ்லாம் எம்முறைகளை கையாளுகிறது?

அல்லாஹ்வின் ஆணைப்படியும் அவன் எடுத்துரைக்கும் வழிப்படியும் இச்செயல்கள் புரியப்பட்டால் அது வணக்கமே ஆகும். ஜகாத் இஸ்லாத்தின் ஒரு மாபெரும் கடமையாகும். நீதி, இரக்கம், சகாயம் போன்ற நற்செயல்களையும் குர்அன் எடுத்துரைக்கிறது. இதே போல் ஹதீஸுகளில் உறவினர், அண்டை அயலார், பெற்றோருடன் நடந்துகொள்ள வேண்டிய விதிமுறைகளும் விளக்கப்பட்டுள்ளன.

உதாரணத்திற்கு அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் கூறும் ஹதீஸைப் பார்ப்போம்!

''ஏழைக்கும் விதவைக்கும் உதவி செய்திட பாடுபடுபவன், அல்லாஹ்வின் வழியில் ஜிஹாத் செய்பவனுக்கு சமமாகிறான்.''

இதிலிருந்து சமூக சேவைக்கும், இறை வணக்கத்திற்கும் உள்ள பிணைப்பையும் உன்னதத்தையும் நாம் உணர்ந்து கொள்ளலாம்.

(3) நீங்கள் எந்த முறையைப் பின்பற்றி நூல்கள் படிக்கின்றீர்கள்?

நான் கல்வி அறிவு பெறுவதற்காக மட்டுமே நூல்களைப் படிக்கின்றேன். பொழுது போக்குவதற்காக நான் எதையும் படிப்பதில்லை. படிக்கும் போது ஒரு பென்சிலையும் பக்கத்தில் வைத்துக்கொள்வேன். நல்ல பயன்தரக்கூடிய வாக்கியங்கள் வரும்போது அடிக்கோடுகள் போட்டு, பக்கத்திலேயே என் குறிப்பையும் சுருக்கமாக எழுதி வைப்பேன். நூலில் சில முக்கியமான இடங்களை நினைவில் வைக்க வேண்டுமானால், அந்தக் குறிப்பிட்ட இடங்களை நிதானமாக, நன்கு ஆழ்ந்து படிப்பேன். ஆழ்ந்த சிந்தனையுடன் படித்தால், விஷயங்களை நினைவில் வைத்துக் கொள்வது கடினமல்ல என்பதே என் கருத்து.

நீங்களும் படிக்கும்போது இம்முறையைப் பின்பற்றினால் சிறந்த பயனை அடையலாம். படிக்கும்போது ஓர் ஒழுங்கு முறையை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அதாவது எந்தப் பொருளைப் பற்றி நீங்கள் தெறிந்து கொள்ள விரும்புகிறீர்களோ, அந்தப் பொருளைப் பற்றிய நூல்களையே தொடர்ந்து படித்துவாருங்கள். இடையில் வேறு பொருள் பற்றிய நூல்களுக்குத் தாவிவிடக்கூடாது. இவ்வாறு செயற்பட்டால் நீங்கள் விரும்பிய பொருளில் சிறந்த புலமையும் அறிவும் பெறலாம்.


காலத்தை வென்று நிற்கும் கவின் மிகு வாழ்க்கை முறை இஸ்லாம். இதுவொன்றே இவ்வுலகை சீர்படுத்தும்; மனிதனுக்கு ஈருலக நலன்களை வழங்கும்.

எனவே, இதனை அறிந்து, உணர்ந்து, வாழ்வில் அமுல் நடத்தப் படியுங்கள்;

| | | |
|---|---|---|
| ஐயமும் தெளிவும் | ரூபா; | 17.50 |
| இறை நீதியும் மனித நீதியும் | ரூபா: | 10.00 |
| ஏன் தொழவேண்டும் | ரூபா: | 3.50 |
| மறை நிழலில் மனிதன் | ரூபா: | 3.00 |
| சமூகங்களின் எழுச்சியும் வீழ்ச்சியும் | ரூபா: | 4.25 |
| நலிவுற்ற நவீன சமுதாயங்கள் | ரூபா: | 1.00 |
| ஜமாஅதே இஸ்லாமி-ஓர் அறிமுகம் | ரூபா: | 3.75 |
| பல்கலைக்கழகங்களா பலிபீடங்களா | ரூபா; | 2.00 |

இன்னும் பல தமிழ், ஆங்கில, சிங்கள மொழியிலான இஸ்லாமிய நூல்களும் உண்டு. இன்றே வாங்கிப் படித்து, பயன் பெறுங்கள்.

தபால் செலவு தனி.

CEYLON JAMA'ATH E-ISLAMI,
204/1 DEMATAGODA ROAD,
COLOMBO 9

# நீல் ஆம்ஸ்ட்ரோங் இஸ்லாத்தை தழுவவில்லை?

சந்திரனில் முதன் முதல் இறங்கிய திரு. நீல் ஆம்ஸ்ட்ரோங் இஸ்லாத்தைத் தழுவிவிட்டார் என்ற செய்தியை மலேசிய பத்திரிகையான 'த ஸ்டார்' (The Star) வெளியிட்டது. இதனையடுத்து இச்செய்தி மேலும் பல பத்திரிகைகளிலும் வெளிவந்தன. பலரது உரைகளிலும்கூட இச் செய்தி முக்கிய இடத்தைப் பெற்றது.

ஆனால், இச் செய்தி தவறானது என தற்போது தெரிய வந்துள்ளது.

பாக்கிஸ்தானைச் சேர்ந்த எஸ். எம். மன்சூர் இலாஹி, என்ற மாணவர் 'ஆம்ஸ்ட்ரோங் இஸ்லாத்தைத் தழுவினார்' என்ற செய்தியை பத்திரிகைகளில் படித்தபின் இதன் உண்மையை அறியும் பொருட்டு நீல் ஆம்ஸ்ட்ரோங்குக்கே கடிதம் எழுதியுள்ளார். அக் கடிதத்திற்கு அவரது நிர்வாகச் செயலாளர் அளித்துள்ள பதிலில்தான் ''நீல் ஆம்ஸ்ட்ரோங் இஸ்லாத்தைத் தழுவியதாகக் கூறும் கருத்துத் தவறானது'' எனக் கூறியுள்ளார்.

அக்கடிதத்தின் தமிழாக்கம் வருமாறு:

நீல் ஏ. ஆம்ஸ்ட்ரோங்,
31 எண். புரோட்வே,
லெபனோன், ஒஹியோ - 45036
தொலைபேசி எண்: 513. 932. 6833
மார்ச் 21, 1983

எஸ். எம். மன்சூர் இலாஹி,
7/119 A - ஹாஸிம்-ரஷா ரோட்.
மொடல் கொலனி,
கராச்சி - 27
பாகிஸ்தான்.

அன்புள்ள Mr. இலாஹி,

ஆம்ஸ்ட்ரோங் பற்றி நீங்கள் எழுதிய கடிதத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன், எப்படியாயினும் உங்களுக்குக் கிடைத்த செய்தி நம்பத் தகுந்ததாக இல்லை.

திரு. ஆம்ஸ்ட்ரோங் ஒருபோதும் கெய்ரோவுக்குச் செல்லவில்லை. அத்துடன் அவர் இஸ்லாத்தைத் தழுவவும் இல்லை.

கடந்த பல வருடங்களாக அவர் தனிப்பட்டவர்களாலோ, குழுக்களாலோ, பத்திரிகைகளாலோ பேட்டி காண்பதை தவிர்த்து வருவதை ஒரு கொள்கையாகவே கடைப்பிடித்து வருகிறார். அதற்கேற்ப, உங்களது கோரிக்கையை நிறைவேற்ற முடியாதுள்ளார்.

நீங்கள் இத்தகவலை கேட்டறிய எடுத்த முயற்சிக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

உண்மையுள்ள,
விவியன் வைட்,
நிர்வாகச் செயலாளர்.

இச்செய்தியை பாக்கிஸ்தானிலிருந்து வெளிவரும் தினசரியான 'ஜஸாரத்' அதன் 13. 4. 83ஆம் திகதிய பத்திரிகையில் திரு. ஆம்ஸ்ட்ரோங்கின் புகைப்படத்துடனும், இக்கடிதத்தின் மூலப் பிரதியின் போட்டோ படத்துடனும் வெளியிட்டுள்ளது. இதே செய்தியை பாகிஸ்தானின் மற்றொரு தினசரியான 'நவா-ஏ-வக்த்'தும் வெளியிட்டுள்ளது.

எனினும், நீல் ஆம்ஸ்ட்ரோங்கிற்கு எழுதிய கடிதத்திற்கு அவரது செயலாளர் பதிலளித்தார் என்பதிலிருந்தும் அவர் எவருடனும் பேசவோ பேட்டியளிக்கவோ முடியாத நிலையில் உள்ளார் என்பதிலிருந்தும் பலத்த சந்தேகங்கள் ஏற்படுகின்றன, சிலவேளை அவர் இஸ்லாத்தைத் தழுவியதால் வெகுண்டெழுந்த அமெரிக்க அரசும் கிறிஸ்தவ உலகும் அவருக்கு பேசமுடியாத நிலையைத் தோற்றுவித்து இருக்கலாமே.

அதற்கு நல்ல உதாரணம் உலக அதிபார குத்துச் சண்டை வீரர் முஹம்மது அலி விடயத்தில் அமெரிக்க அரசு நடந்துகொண்ட விதமேயாகும். அவர் இஸ்லாத்தைத் தழுவியமைக்காக அவருக்கு அமெரிக்கா கொடுத்த தொல்லைகள் கொஞ்ச நஞ்சமல்லவே.

S. M. Mansoor Elahi
7/119 A-Hashim-Raza-Road
Model Colony
Karachi 27
Pakistan

NEIL A. ARMSTRONG
31 N. BROADWAY
LEBANON, OHIO 45036
TELEPHONE 513 932 6833

March 21, 1983

Dear Mr. Elahi:

Thank you for your letter regarding Mr. Armstrong. However, your source of information is unreliable.

Mr. Armstrong has never been to Cairo and has not converted to Islam.

For many years, he has maintained a policy of declining to be interviewed by individuals, groups and the press. In keeping with that policy, he is unable to grant your request.

We thank you for the courtesy of your inquiry.

Sincerely,

Vivian White
Administrative Aide

## குருதிச் . . .

(14ம் பக்கத் தொடர்)

தாளரே இப்படியானதொரு கதையை எழுதி சமுதாய சிறார்களை சீரழிக்க முனைந்தது மிகவும் வேதனைக்குரியதாகும். அவருக்கு கதையெழுதுவதற்கு 'வேறொரு' - 'கரு' கிடைக்கவில்லை போலும்! வெறும் பணத்திற்கும், பெருக்கும், புகழுக்குமாக இப்படியான அசிங்கமான பாலியலை தூண்டும் வகையில் ஆபாச சிறு கதையை எழுதலாமா? அதனால் நமது சமுதாயம் எதிர்காலத்தில் எதிர்நோக்கப்போகும் பேராபத்தை உணரவில்லையா? இவற் முஸ்லிம் மாணவ மாணவியரின் ஒழுக்கம் பாதிக்கப்படுகிறது. எமது சமுதாயம் எதிர்காலத்தில் எதிர்நோக்கப்போகும் பின் விளைவுகளை உணர்ந்து முஸ்லிம் எழுத்தாளர்கள் இனியாவது சிந்தித்து செயல்படுவார்களா?

தகவல் :

'இளம்பிறையான்' ஜாயா'
கெற்றவலை.

உருவகக் கதை :

# கோடரிக் காம்பு

ஏ. எல். எம். எஸ்.

அது வெட்ட வெட்டத் தளைத்து வளரும் அழகிய மரம். அதன் கனிகள் கானகத்துப் பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் என்றும் தெவிட்டாத தேன்விருந்து. பலநூறு மைல்களுக்கு அப்பால் இருந்துகூட அதனைப் பற்றிக் கேள்வியுற்று வண்ண வண்ணப் பறவைகளெல்லாம் வந்த வண்ணமிருந்தன. அதன் கிளைகளிலே கூடுகட்டி அவை அற்புதமான கீதங்களை இசைத்தன.

ஒரு நாள் அந்த பிராந்தியத்துக்கே அந்நியனான ஒரு மனிதன், அதன் அழகியகிளை ஒன்றைக் கொஞ்சம் கூடக் கருணையில்லாமல் வெட்டிச் சென்றான். கிளையாகிய அதன் குழந்தை, அதன் அரவணைப்பிலே இருந்து எவ்வளவு அன்பு கொஞ்சியிருக்கிறது. தன் பங்கை எப்போதும் அது கேட்டு அடம் பிடிக்கும். எவ்வளவு கருங்கோடையாயினும் பூமியின் ஆழத்திலிருந்தாவது உணவு தேடி அதற்கு ஊட்ட வேண்டும். தாயென்றால் அதற்கும் எத்துணை ஆசை. கொஞ்சம் காற்றடித்தால் போதும், கிறீச்சிட்டு அலறிக்கொண்டு, வளைந்து தாயின் மடியிலே அது அணைந்துகொள்ளும். அத்தகைய அன்புக் குழந்தையை இழந்த துயரம் அதன் நெஞ்சிலே என்றும் மாறாத வடுவாக இருந்தது.

ஆனால் தன் குழந்தையைப் பறித்துச் சென்ற அந்தக் காதகன், மீண்டும் ஒருநாள் தன்னை வெட்டிச் சாய்க்க வந்தபோதுதான், அதுவும் தன் குழந்தையே கோடரிக் காம்பாக மாறி வந்தபோதுதான் மரத்தின் துயரம் எல்லை மீறியது, சோகம் சொல்லாக மாறியது.

கோடரிக் காம்பைப் பார்த்து மரம் கேட்டது, ''மகனே! இந்த நீசச்செயலுக்கு நீயும் உடந்தையாகலாமா?

அந்நியனின் அரவணைப்புச் சுகத்தின் பரவச நிலையிலிருந்த அந்தக் கோடரிக் காம்புக்குத் தாயின் குரல் எட்டவா போகிறது? அற்ப சுகமே அதன் தற்போதைய இலட்சியம். வெட்டப்பட்டாலும் தனது தாயாகிய மரம் ஒருநாள் மீண்டும் தளிர்த்து மகாவிருட்சமாகும் என்பதையோ, தான் இறுதியில் யாருக்கும் பிரயோசனமில்லாத கரிக் கட்டையாகக் குப்பையிலே வீசியெறியப்படும் என்பதையோ அது சிந்திக்கவில்லை.

# தீமைக்குத் துணைபுரியும் முஸ்லிம்கள்?

சினிமா நாட்டையே சீரழித்து மிருகங்களை விட கேவலமாக வாழ மக்களைத் தூண்டிவருகின்றன. பல பத்திரிகைகள், மானங்கெட்ட செயல்களையும் செய்திகளையும் படாடோபமாகப் பிரசுரித்து விபசாரத் தொழிலுக்கு நியாயம் கற்பிக்க, தூண்ட முனைந்துவிட்டன; பெண்களின் அங்க அவயவங்களை பகட்டாக, பக்கம் பக்கமாக வெளியிட்டு வாலிபர்களையும், இளம்பெண்களையும் வழிதவற தூண்டிக்கொண்டிருக்கின்றன.

ஆனால், நாமோ அவைகளையே காசு கொடுத்து வாங்கிப் படிக்கிறோம்; நமது வீட்டுப் பெண்பிள்ளைகளுக்கும் வாங்கிப் படிக்கக் கொடுக்கிறோம்; அதைப் பெருமையாகவும் கருதுகிறோம்.

இவ்விதப் பத்திரிகைளுக்கே விளம்பரங்கள் மூலம் நமது பணங் காசுகளை அள்ளி அள்ளிக் கொட்டுகிறோம். இதனால் ஏற்படும் விளைவுகள், நமது பெண் பிள்ளைகளை தீய வழிகளில் சிக்க வைக்க, மானங் கெட்ட வாழ்வு வாழ, பசார்களிலும் பஸ் நிலையங்களிலும், வெட்கங் கெட்ட முறையில் நடமாட நாமே வழி திறந்துவிடுகிறோம். மற்றவர்களோ நம் பரிதாபநிலை பார்த்து சிரிக்கின்றார்கள்.

விழாக்கள் எதுவாகட்டும், அவற்றின் விளம்பரங்கள் நம்மை இழிவுபடுத்தும் பத்திரிகைகளுக்கே கொடுக்கிறோம். நாம் இஸ்லாமிய பத்திரிகைகளுக்கு எவ்வித ஊக்கமும் கொடுப்பதில்லை. என்றுதான் எம் சமூகத்தின் இந்நிலை மாறுமோ?

நன்றி : ஜமாஅத்துல் உலமா,
தமிழ்நாடு.

# ஜாஹிலிய்யத்தின் கரம் நீளுகிறது, தப்பிக்கொள்ளுங்கள் !

உலகத்தை ஆட்டிப் படைப்பவர்களில் முன்னணியில் நிற்பவர்கள் யூதர்கள். அதிலும் அமெரிக்கர்கள் என்றால் கேட்கவும் வேண்டுமா? நாகரிகத்தின் பேரால் உலகை சீரழிப்பவர்கள் அவர்கள். அவர்கள் உலகிற்கு அறிமுகப்படுத்துபவை எதுவாக இருப்பினும் அவற்றை தனியாக நோக்க வேண்டும். அப்போதுதான் அதன் பாரதூரம் புரியும்.

உடனுக்குடன் அதிர்ஷ்டத்தை பரீட்சிப்பதாக சொல்லிக்கொண்டு ஒருவகை சுரண்டிப் (பிழைக்கும்) பார்க்கும் சூதாட்டமொன்றை அவர்கள் இப்போது எம் இலங்கைத் திருநாட்டிலும் அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள். சூதாட்டத்தின் நவீன மறுபிறப்பான இதற்கு இப்போது நகரங்களில் நல்ல வரவேற்பு.

ஜாஹிலியத்தை இனங்கண்டு கொள்ளத் தெரியாத நம்மவர்களும் இதன் வலையில் சிக்கி இருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. அவர்களின் பார்வையில் ஹராம் எனப்படுபவை பன்றி இறைச்சியும், மதுபானமும்தான். மற்றவற்றிற்கு சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற்போல் தங்களுக்குத் தாங்களே பத்வா (?) வழங்கிக் கொள்கிறார்கள்.

எவ்வளவோ கஷ்டப்பட்டு உழைக்கும் ஹலாலான உழைப்பில் கூட அறியாத்தனமாக - அநியாயமாக ஹராத்தைக் கலக்கிறார்கள். பாவம் அவர்கள் மகாப்பொல என்பதனை மகாப்பிழை என உணரவில்லைபோலும். திடீர் லட்சாதிபதிகளாகப் புறப்பட்டுவிட்டனர்.

குட்டி சிக்காகோ கலை உருவாக்கத் துணிந்துவிட்ட அமெரிக்கரின் மாயவலையில் இருந்து மக்கள்தான் தங்களைக் காத்துக் கொள்ளவேண்டும்.

'அஷ் ஷஹித்'

# முஸ்லிம் உலகம்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி...)

களைத் தமது கையாட்களாக வைத்து காரியமாற்ற அமெரிக்க வல்லரசு முனைந்தது. எங்கு இஸ்லாத்தின் எதிரிகள் இருக்கின்றனரோ அவர்கள் இந்த இரு முகாம்களையுடைய வல்லரசுகளின் இனிய நண்பர்களாவர். இஸ்லாத்தில் பற்று குறைந்த ஒருவர் மேற்கத்திய முதலாளித்துவ, கம்யூனிஸ அணிகளுக்கு மிகவும் வேண்டியவராவர்.

இத்தகையவர்களை மூளைச் சலவை செய்து தமது அடிவருடிகளாக வைத்துக் கொள்கின்றனர். மேற்கத்திய முதலாளித்துவ, கம்யூனிஸ சிந்தனைப் போகுக் இவர்களது வேத வாக்குகள் ஆகிவிடுகின்றன. எனவே, அவற்றைப் பரப்பப் பாடுபடும் நிலைக்கு இவர்கள் தள்ளப்படுகின்றனர். அவர்கள் ஒரு உடையலங்காரத்தை அறிமுகப்படுத்தினால் அது வெகு சீக்கிரம் அவர்களது ஏஜண்டுகள் மூலம் முஸ்லிம் நாடுகளில் அறிமுகப்படுத்தப்படும்; அவர்களது சிகை அலங்காரங்கள்கூட மிகவும் நாசூக்காக இந்த ஏஜண்டுகள் மூலம் இறக்குமதி செய்யப்படுகின்றது.

இந்த நிலையின் படிமுறையான வளர்ச்சி இறுதியில் நாட்டின் அரசியல் விவகாரங்களிலும் தலையிடுகின்றது. அதன் மூலம் நாட்டின் நிர்வாக இயந்திரமே மேற்கத்திய, கம்யூனிஸ அமைப்பில் அமைந்துவிடும். இதைத்தான் நாம் எமது முஸ்லிம் நாடுகளில் இன்று கண்டு வருகிறோம்.

(அடுத்த இதழில் முடியும்)

## அனைவரையும் ஈர்க்கும்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தெல்லாம் அரணாக நின்று அவர்களைப் பாதுகாத்திருக்கின்றனர்.! அவர்களைப் பின்பற்றிய ஒரே காரணத்திற்காக எதிரிகளின் எண்ணற்ற சித்திரவதைகளுக்குள்ளாகி, சிறுகச் சிறுகக் கொல்லப்பட்டு, சாவின் விளிம்பிலே ஊசலாடியபோதும் — ஏன் ரையே துறந்த போதும் இறைதூதர் மீதுகொண்ட பற்றுறுதியை அவர்கள் சற்றேனும் தளரவிடவில்லை. தங்களது தலைவரிடத்தில் ஏதாவது தவறைக் காண நேர்ந்திருந்தால் இந்தளவு திடவுறுதி அவர்களிடம் இருந்திருக்க முடியுமா?

பிரித்தானிய கலைக்களஞ்சியம் (Encyclopaedia Brittannica), முஹம்மது (ஸல்) அவர்களே இறைதூதர்களிலும், மத போதகர்களிலும் மாபெரும் வெற்றியாளராகத் திகழ்வதாக புகழாரம் சூட்டியிருக்கிறது. ஆனால் இந்த வெற்றி காற்றடித்த திசையில் தற்செயலாக அள்ளுண்டு வந்ததொன்றல்ல. இஃது இறைதூதரிடம் காணப்பட்ட சிறப்புக்களை அவர்களது காலத்தில் வாழ்ந்தோர் கண்ணெதிரே கண்டு, மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டதால் கிடைத்த வெற்றியேயாகும். அவர்களது அரிய, அருமையான, அனைவரையும் ஈர்க்கின்ற ஆளுமை என்ற தன்னிகரற்ற தனித்தன்மைக்குக் கிடைத்த வெகுமதியே இந்த வெற்றி.

## சகாத்தின் மூலம் வாழ்வுபெறும்

# 16 குடும்பங்கள்

அக்கரைப்பற்று ஜமாஅத்தே இஸ்லாமி பயிற்சி மன்றம் நான்காவது தடவையாக இம்முறையும் சகாத் சேகரித்து விநியோகித்துள்ளது. 1981ம் வருட இடைப்போகத்தில் சுமார் 125மூடை நெல்லும் 8500 ரூபா பணமும் சேகரிக்கப்பட்டன.

சென்ற முறை சேகரிக்கப்பட்ட சகாத் மூலம் அக்கரைப்பற்று ஆலிம் நகரில் காணி வாங்கி 26 குடும்பங்கள் குடியேற்றப்பட்டது யாவரும் அறிந்த விடயம்.

இம்முறை சேகரித்த சகாத்தைக் கொண்டு மேலும் 16 குடும்பங்கள் அதே இடத்தில் குடியமர்த்தப்பட்டன. இந்த குடும்பத்தவர்கள் அப்பகுதியில் வாழ்ந்த மிகவும் வறியவர்களே. இவர்கள் இந்த இடத்தில் காணி பெற்று குடியிருப்பதால் தமது தொழில்களையும் சீராக்கிக்கொள்ளும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

மேலும், இந்த சகாத் மூலம் கிடைத்த பணத்தைக் கொண்டு ஒரு குடும்பத்துக்கு முற்பணம் செலுத்தி ஒரு தையல் மெஷின் வாங்கிக் கொடுக்கப்பட்டது; மூன்று குடும்பங்களுக்கு விவசாயம் செய்யும் பொருட்டு விதை நெல் வழங்கப்பட்டது; ஐந்து குடும்பங்கள் இருப்பிட வசதி செய்து கொள்ளவும், இரண்டு குடும்பங்கள் கிணறு வெட்டிக்கொள்ளவும் உதவி செய்யப்பட்டது.

மேலும், உணவு, உடை, வைத்தியத் தேவை, திருமணம், கடன் தீர்த்து வைத்தல் போன்ற பல தேவைகளுக்கும் இம்முறை உபகாரம் செய்யப்பட்டது. இவை அனைத்தும் மார்க்கம் அனுமதிக்கும் வகையில் சகாத் பெறத் தகுதியுடையோருக்கே வழங்கப்பட்டது என்பது கவனிக்கத்தக்கது.

அக்கரைப்பற்று ஜமாஅதே இஸ்லாமியினரதும், அவ்வூர் மக்களதும் இந்த இபாதத் ஏனைய எல்லா முஸ்லிம்களதும் சிந்தனைக்குரியது. குறிப்பாக ஊர் நிர்வாக சபைகள் இது பற்றி கவனம் செலுத்த வேண்டும்.

ஒவ்வோர் ஊரிலும் இவ்வாறான சகாத் சேகரிப்பின் மூலம் பொருளாதார சீரமைப்பு உருவாகுமானால் எமது சமூகம் எவருக்கும் அடிபணிந்து வாழாது இஸ்லாத்தை கடைப்பிடிக்கவும், அதன் மூலம் எண்ணற்ற பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளவும் வழி பிறக்கும்.

இஸ்லாம் முழுமையானதொரு வாழ்க்கை முறை. அதன் அடிப்படையில் வாழ்வு அமைந்தாலே அமைதி பிறக்கும்; துன்பம் தொலையும்; பரந்த இஸ்லாமிய சமூக அமைப்பு உருவாகும்.

## எழுத்தாளர் கவனத்துக்கு

அல்ஹஸனாத்தில் பிரசுரிக்கவென்று ஏராளமான சகோதர சகோதரிகள் தமது ஆக்கங்களை அனுப்பித் தந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் அனைவருக்கும் எமது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவர்கள் அல்ஹஸனாத்தின் மீது கொண்டுள்ள அபிமானமும் ஆர்வமும் எமக்கும் மேலும் சிறப்பாக இதனை வெளிக்கொணர ஆர்வமூட்டுகிறது, அல்ஹம்துலில்லாஹ்.

ஆனால், அதிகமானவர்கள் தமது ஆக்கங்களில் எடுத்தாளும் மேற்கோள்களுக்குரிய ஆதாரங்களை குறிப்பிடத் தவறிவிடுகிறார்கள், அதனால் அவற்றை பிரசுரிப்பதில் கால தாமதம் ஏற்பட்டுவிடுகின்றது.

எனவே, தயவுசெய்து இனியேனும் எழுதும்போது ஆதாரபூர்வமான முறையில் எழுதும்படி அன்புடன் வேண்டுறோம். அத்துடன் ஆதாரம் இல்லாது வருபவை பிரசுரிக்கப்படமாட்டாது என்பதையும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

—ஆசிரியர்—

# நிமிடச் செய்திகள்

★ மௌலானா அபுல் லேஸ் இஸ்லாஹி நத்வி, இவர்கள் இந்திய ஜமாஅதே இஸ்லாமியின் அமீராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

★ மௌலானா அபுல் ஹஸன் அலி நத்வி; காஷ்மீர் பல்கலைக்கழகம், இலக்கியத் துறையில் இவர் ஆற்றிய சேவைக்கான கௌரவப்பட்டமொன்றை வழங்கவிருக்கிறது.

★ சாதிக் அல் பய்ராக்; இவர் ஒரு துருக்கி பத்திரிகையாளர். அண்மையில் இவர் எழுதிய 'Caliphate And Muslims Without Caliphate' என்ற நூலுக்கு இவருக்குக் கிடைத்த பரிசு 21 வருடகால சிறை தண்டனை, இந்நூல் இஸ்லாத்துக்கு சார்பான ஒன்று.

★ முஹம்மத் ரபாத்; இந்திய முஸ்லிம் மாணவர் இயக்கத் தலைவராக இவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். பொதுச் செயலாளராக ஜனாப் எம். அப்துஸ் ஸலாமும், நிதிச் செயலாளராக ஜனாப் இப்னு சஊதும் தெரிவு செய்யப்பட்டனர்.

★ காலித் லத்தீப் கவுபா: இந்திய சட்டத்தரணியும் சிறந்த எழுத்தாளருமான இவர் தனது 82 வது வயதில் இம்மாதம் மரணமானார், இந்துவாக பிறந்து இஸ்லாத்தை ஏற்று முஸ்லிமாக வாழ்ந்த இவர், பல இஸ்லாமிய நூல்கள் எழுதியுள்ளார்.

★ கலாநிதி அப்துல் லத்தீப் திபாவி; தனது 71வது வயதில் லண்டனில் பாதை விபத்தொன்றில் மரணமான இவர், சிறந்த கல்விமானும் வரலாற்றாசிரியருமாவர்.

★ மீர் ஹுஸைன் முஸாவி. ஈரான் வெளிநாட்டமைச்சராக இருந்த இவர், தற்போது ஈரான் மஜ்லிஸின் அங்கீகாரத்துடன் பிரதமராக பதவி ஏற்றுள்ளார்.

★ அஸ் ஷஹீத் முஹம்மத் கமாலுத்தின் அஸ் ஸனாநிரி அல் இஃவானுல் முஸ்லிமூன் இயக்கத்தைச் சேர்ந்த இச் சகோதரர் அண்மையில் எகிப்திய ஆட்சியாளரால் கொடுமைகள் பல புரிந்து ஷஹீதாக்கப்பட்டார்.

# வாசகர் கருத்து

ஜமாஅதே இஸ்லாமி இயக்கத்தைப் பற்றியும் அதனைத் தாபித்த அல்லாமா செய்யித் அபுல் அஃலா மௌதூதி (ரஹ்) அவர்களைப் பற்றியும் சிலர் எழுப்பும் குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக அல்ஹஸனாத்தில் ஒரு கட்டுரைத் தொடர் எழுதப்பட்டு வருகிறது. என்னைப் பொறுத்த மட்டில் இது அவசியமற்றதொரு முயற்சியென்றே சொல்வேன்.

ஏனெனில், அல்லாமா அவர்களைக் குற்றங்காணும் முறையில் வெகுசிலர் சில கட்டுரைகளை, நூல்களை எழுதியுள்ளனர். ஆனால் அவர்களின் சன்மார்க்கப் பணி சம்பந்தமாக ஏராளமான கட்டுரைகள், கவிதைகள், நூல்கள் என்பன பல்வேறு உலக மொழிகளில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவற்றைப் படித்தாலே குற்றச்சாட்டுகள் எல்லாம் வெறும் அபத்தம் என தெளிவாகும்.

எனவே, இவற்றுக்கு பதில் எழுதி காலத்தை வீண் விரயம் செய்வது பயனற்றது.

ஒன்று செய்யுங்கள். முடிந்த அளவு அல்லாமா அவர்களின் நூல்களை பல மொழிகளிலும் பிரசுரித்து பலரும் படிக்க வழிவகை காணுங்கள்.

அப்பொழுது அல்லாமாவின் ஆழ்ந்த மார்க்க ஞானத்தையும், தூய இறைப்பணியையும் எல்லோரும் புரிந்து கொள்வர்.

அதன் பின்னரும் யாரேனும் அர்த்தமற்ற முறையில் வாதாட்டம் புரிய வருவார்களேயானால் அவர்கள் ஏதோ மனப் புழுக்கத்தினால் உந்தப்பட்டு அப்படிச் செய்கிறார்களே தவிர அவை உண்மையான உள்ளத்தின் வெளிப்பாடு எனக்கூறவே முடியாது.

ஜே. எம். நிவாஸ்

கெக்கிராவை.

இன்றைய நாகரிக உலகிலேபடித்து பயன்பெறுவதற்கென எத்தனையோ பத்திரிகைகள் வெளியிடப்படுகின்றன. அவற்றில் அல்ஹஸனாத் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. அல்ஹஸனாத் தந்த 'கருத்தடை முயற்சியில் ஒரு முஸ்லிம் இயக்கம்' எனும் செய்தி மிகவும் முக்கியமானது. நமது சமூகத்திலே நடைபெறும் இத்தகைய அநியாயங்களை எடுத்துக் கூறி நம்மை விழிப்புறச் செய்யும் அல்-ஹஸனாத் என்றும் மலரட்டும்!

எஸ். ஏ. சீ. புஹாரி

புவக்பிடிய,
கலேவெல

அன்புத்தம்பிக்கு அண்ணா எழுதிவரும் கடிதம் எங்களில் பலருக்கு பயனுள்ளதாக அமைந்திருக்கிறது. இத்தகைய பல சிறந்த அம்சங்களை வெளியிடும் ''அல்-ஹஸனாத்'' துக்கு எனது வாழ்த்துக்கள்.

ஏ. எம். எம். ஹுஸைன்

வாடியத்தன்னை
ஹெம்மாதகம

# நம்பிக்கையை விலைபேசும்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

இஸ்லாத்தின் இந்தப்புனித அறிவிப்பின்படி அவரவர்களுக்குரிய மதக் கோட்பாடுகளுக்குக் குந்தகம் ஏற்படாமல் மனித நேசத்தோடு ஒருவருக்கொருவர் ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதே உண்மையான விசுவாசிகளின் உள்ளக் கிடக்கையாகும்.

'முஸ்லிம்' என்ற சொல்லுக்கே இறைவனிடம் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ளும் அடியான்' என்றுதான் பொருள்.

அந்த அடிப்படையில், ஆண்டவனிடத்தில் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட விசுவாசிகளாக அன்பு வாழ்க்கை வாழ ஹரிஜனங்களையும் அனுமதிக்கவேண்டும்.

உலகத்தில் 'அமைதி வாழ்க்கை' எங்கே சிதைந்தாலும் அதை சீர்திருத்தம் செய்ய மதபேதமற்று மனித உள்ளங்கள் ஒன்றுபடவேண்டும் என்ற உறுதிமொழி எடுத்துக் கொள்வோம்!

நாமும் வாழ்வோம்! நம்மோடு பிறரையும் வாழ வைப்போமாக!

நன்றி: பிறை.

## ஜமாஅதே இஸ்லாமி

முஸ்லிம் இளைஞர்கள் இஸ்லாத்துக்கு மாற்றமான மேல்நாட்டுக் கொள்கைகளைப் பின்பற்றி வருவதைக் கண்டு மனம் வெதும்பிய மௌலானா அபுல் அஃலா மௌதூதி தம்முடைய 'தர்ஜுமானுல் குர்ஆனில்' இஸ்லாமிய வாழ்க்கை முறைகளை எழுதி வந்தார். அவற்றில் ஈடுபாடு கொண்ட 75 பேர்கள் 1941 ஆகஸ்ட் 26 இல் லாகூரில் கூடி ஜமாஅதே இஸ்லாமியை நிறுவினர். இதன் அடிப்படைக் கொள்கை முஸ்லிம்கள் அனைவரும் வாழ்வின் எல்லா அம்சங்களிலும் குர்ஆனையும் ஹதீஸையும் பின்பற்றவேண்டும் என்பதாகும்....

இந்தியாவில் இதன் தலைமையகம் டில்லியில் உள்ளது. பாகிஸ்தானில் இதன் தலைமையகம் லாகூரில் உள்ளது. அங்கு இது ஒரு வலிமைமிக்க இஸ்லாமிய இயக்கமாக விளங்கி வருகிறது.

'இஸ்லாமியக் கலைக்களஞ்சியம்'
பாகம் 3: பக்கம் 856

## அறிவுச் சுரங்கம் - 12

1) ''கிறிஸ்துவுக்குப் பின் எந்த ஆண்டில் ரசூல் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனவுக்கு 'ஹிஜ்ரத்' சென்ருர்கள்?
2) 'ஷஹ்ருல் ஹராம்' என்பதன் பொருள் என்ன? இதன் மூலம் எதனைக் குறித்துக் காட்டப்படுகிறது?
3) அல்குர் ஆனின் சிறிய அத்தியாயம் எது? பெரிய அத்தியாயம் எது? முறையே எத்தனை வசனங்கள் இருக்கின்றன?
4) இலங்கைச் சோனகர் இன வரலாறு என்ற கட்டுரைக்கு திறனுய்வொன்றை எழுதியவர் யார்?
5) அண்மைக் காலத்தில் இஸ்லாத்தைத் தழுவிய இங்லாந்து பொப்பிசை பாடகரின் முன்னைய பெயரும் தற்போதைய பெயரும் என்ன?

விதிகள்; இக்கேள்விகளுக்கான விடைகளை மட்டும் தபால் அட்டையில் எழுதியனுப்ப வேண்டும். கேள்விகளை எழுதத் தேவையில்லை.

அனுப்புபவரின் பெயர் முகவரி என்பன தெளிவாக எழுதப்பட வேண்டும்.

கீழே காணப்படும் முகவரியை வெட்டி ஒட்டப்பட்டு வரும் தபால அட்டைகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

சரியான விடைகளை எழுதியோரில் தேர்ந்தெடுக்கப்படும் மூவருக்குப் பரிசு வழங்கப்படும்.

முதல் பரிசு: ரூபா 17.50 பெறுமதியான புத்தகம்.
இரண்டாம் பரிசு; ரூபா 10.00 பெறுமதியான புத்தகம்.
மூன்ரும் பரிசு: ரூபா 5.00 பெறுமதியான புத்தகங்கள்.

இப்போட்டியில் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

இன்ஷா அல்லாஹ், சரியான விடைகளுடன் வெற்றி பெற்ருேரின் பெயர். முகவரி என்பனவும் அல் ஹஸனுத் இதழில் பிரசுரிக்கப்படும்.

முடிவு திகதி 28 2- 83

### அறிவுச் சுரங்கம் — 11ன் முடிவுகள்

அறிவுச் சுரங்கம் 11 க்கான சரியான விடைகள் ஒன்றும் கிடைக்க வில்லை. மிகக் கிட்டிய விடையை ஒருவரே தந்துள்ளார். அவருக்கு ஓர் ஆறுதல் பரிசு வழங்கப்படுகிறது.

செல்வன்: ஏ. எம். ரஹ்மத்துல்லாஹ்
ஜாமிஆ நளீமிய்யா
தபால் பெட்டி 1
பேருவளை.

**சரியான விடைகள்**

1) 21 : 107
2) கலீபா மாமூன்
3) எதியோப்பியா
4) நாற்பது
5) காதியானி பிரச்சினை.

"ARIVUCH CHURANGAM-12"
"AL HASANAATH"
204/1, Dematagoda Road,
COLOMBO-9.

## வாசகர் கருத்து

சென்ற இதழில் வெளிவந்த 'என்னை அடிக்காதீர்கள்; வேதனை தாங்கமாட்டேன்' என்ற உள்ளத்தை உருக்கும் சோகக் கதை, டீ. வீ. எனும் சாக்கடையில் வீழ்ந்து தன்னையும் தன் பிள்ளைகளையும் மறந்து வாழும் பெற்ருேர்க்கு நல்லதொரு பாடம்.

எம். ஏ. எஸ். முனவ்வரா
முஸ்லிம் மகா வித்தியாலயம், பெரியமடு

ஸீரத் மலர் சிறப்பாக இருந்தது. ரசூல் (ஸல்) அவர்களின் வாழ்வு பல கோணங்களில் எடுத்துக் காட்டியிருப்பது தனித்தன்மையுடன் விளங்குகிறது. வாழ்க இதன் பணி.

கே. எம். அப்துஸ் ஸமது,
நிககொள்ளை, யடவத்தை

'என்னை அடிக்காதீர்கள். வேதனை தாங்கமாட்டேன்' என்ற விடயம் என் உள்ளத்தை வேதனையில் ஆழ்த்தி விட்டது. நமது சிருர்கள் எத்தகைய பயங்கர படுகுழியில் இருக்கின்ருர்கள் என்பது இதன் மூலம் தெளிவாகின்றது. சம்பந்தப்பட்டவர்கள் கவனிக்க வேண்டும்.

எம். ஏ. ஸீ. வாஜித்
ஹீரஸ்ஸகல, கண்டி

'என்னை அடிக்காதீர்கள்- வேதனை தாங்கமாட்டேன்' என்னும் சோகக் கதை தூங்கிக் கிடக்கும் எம் சமுதாயத்தைத் தட்டி எழுப்பட்டும். நமது சிருர்கள் கெடுவதற்கு பெரியோரே காரணம் என்பதை இனியாவது உணர்ந்து செயல்படட்டும்.

எம். எஸ். எம். அமீனுத்தீன்
தங்கல்ல.

அல் ஹஸனுத் இலங்கையிலேயே வெளிவரும் பத்திரிகைகளில் தனித் தன்மையுடன் விளங்குகிறது. வாழ்க அதன் பணி.

எம். எஸ். ஐனுல் ஸகிய்யா
தங்கல்ல.

'மாநபி தந்த மறுமலர்ச்சிக் கொள்கை' என்ற கட்டுரை பயன் மிக்கது. இதனைத் தந்த ஜமாஅதே இஸ்லாமி பயிற்சி மன்றம் என் நன்றிக்குரியது.

எம். எம். அப்துல் ஹக்கீம்
மோருகம்மன, அரநாயக்க

'கம்யூனிஸம் ஒரு குஃப்ரியத்' நல்லதொரு ஆராய்ச்சி முஸ்லிம்கள் முஸ்லிம்களாக சிறப்படைய வேண்டுமானுல் அது இஸ்லாம் ஒன்றிக்காக உழைப்பதிலேயே தங்கியிருக்கிறது. இக்கருத்துக்கு வலுவூட்டி, தூய இஸ்லாமிய அமைப்பைக் கட்டி யெழுப்ப துணை புரியும் அல் ஹஸனுத்தின் பணி மகத்தானது.

எம். அப்துஸ் ஸலாம்
கொழும்பு வீதி, கண்டி.

சென்ற மாத அல் ஹஸனுத் என் கைக்குக் கிட்டியது. எல்லா அம்சங்களும் தரமாக இருந்தன, ஆனுல் ஒரு குறை. பெண்களுக்கென எதுவுமே இல்லை. இக்குறையை நீக்க முடியுமானுல் விரும்பத் தக்கது.

சித்திமர்லியா ஆப்தீன்,
கட்டுகஸ் தொட்ட.

(அடுத்து வரும் இதழ்களில் இது கவனிக்கப்படும் )

—ஆசிரியர்

ஸ்ரீலங்காவில் சிறப்புற பணிசெய்து மக்களின் உணர்வுகளைத் தட்டியெழுப்பும் அல் ஹஸனுத்தில் இடம் பெற்று வந்த மிகப் பெரிய தவருன எழுத்துப் பிழைகள் டிசம்பர் - ஜனவரி இதழில் முழுமையாக நீங்கியிருந்ததை கண்டு மகிழ்ச்சி. இம்முறை கவிதைகள் பல இடம் பெற்றன – அத்தனையும் இளம் உள்ளங்களை மேலும் ஒரு படி தூண்டி விட்டிருப்பதாகவே உணர்கிறேன் - இவ்வாருன கவிதைகள் தொடர்ந்து இடம் பெறட்டும் வாழ்த்துக்கள்.

அப்துல் மஜீது, அக்கரைப்பற்று

# ஜமாஅதே இஸ்லாமி தன் பணியில்

சென்ற மாத முற்பகுதியில் இலங்கையில் நடைபெற்ற தொரு இஸ்லாமிய ஒற்றுமை மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றில் ஹனபி, மாலிகி, ஷாபிஈ, ஹன்பலி என்ற நான்கு மத்ஹபுகளுடன் ஷீஆ மத்ஹபுகளான இமாமி, ஸைதி ஆகியவற்றையும் அங்கீகரிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த இரு மத்ஹபுகளும் ஷரீஅத் சட்டத்தின் பல அம்சங்களில் மட்டுமன்றி இஸ்லாமிய அகீதாவிலும் சுன்னத்வல் ஜமாஅத் கொள்கைகளுக்கு முரண்பட்டவையாகும்.

இந்த மகா நாட்டுக்கும் இலங்கை ஜமாஅதே இஸ்லாமிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. குறிப்பிட்ட மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட சுன்னத்வல் ஜமாஅத் கொள்கைகளுக்கு முரணான எத்தீர்மானத்தையும் ஜமாஅத் ஆதரிக்கமாட்டாது. அத்துடன் சுன்னத்வல் ஜமாஅத் கொள்கைக்கு முரணான கருத்துக்கள் எங்கிருந்து வந்தாலும், இலங்கை ஜமாஅதே இஸ்லாமி அவற்றிற்கு ஆதரவு வழங்க மாட்டாது என்பதை முஸ்லிம் பொது மக்களுக்கு அறிவித்துக் கொள்கிறேன்.

**எம். ஐ. ஷரிப்**
**பொதுச் செயலாளர்,**
**இலங்கை ஜமாஅதே இஸ்லாமி**

## தூய்மையைக் கடைப்பிடிக்கும்!

இலங்கை ஜமாஅதே இஸ்லாமி பொதுச் செயலாளர் அவர்கள் மேற்காணும் அறிக்கையை பத்திரிகைகளுக்கு விடுத்தார். இவ்வறிக்கை பத்திரிகைகளில் வெளிவந்த போது சிலர் ஜமாஅத்தைக் கண்டித்தனர்; 'திசைமாறிச் செல்கிறது' என பத்திரிகையில் எழுதினர்.

''மௌலானா செய்யித் அபுல் அஃலா மௌதூதி (ரஹ்) அவர்கள் ஈரானிய இஸ்லாமிய புரட்சியை ஆதரித்தார்கள்! பாகிஸ்தான் இந்தியா ஜமாஅத்துகளும் ஆதரித்தன! அல்ஹஸனாத்தும் ஆதரித்து எழுதியது'' என தமது கூற்றுக்கு ஆதாரம் காண்பித்துள்ளனர்.

பாகிஸ்தான், இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் இயங்கி வரும் ஜமாஅதே இஸ்லாமி அல் குர்ஆனையும் அஸ்ஸுன்னாவையும் அடிப்படையாகக் கொண்டு, அந்தந்த நாட்டு சூழல்' மக்களின் தேவைகள், என்பவற்றை அனுசரித்து பணியாற்றி வருகின்றது. ஜமாஅத்தின் அடிப்படை நோக்கம் அது இயங்கி வரும் நாடுகளில் தம்மாலான முயற்சிகளை மேற்கொண்டு தீனுடைய அசல் விழிப்புணர்ச்சியைத் தோற்றுவித்து, இஸ்லாத்தை மையமாகக் கொண்ட சமூக அமைப்பைக் கட்டியெழுப்புவதே.

அதே வேளையில் அதன தன் நாட்டு எல்லைகளுக்கு அப்பால் நடைபெற்று வரும் விடயங்கள் சம்பந்தமாக மார்க்க வரம்பிற்கு உட்பட்ட விதத்தில் தம் கருத்தைச் செலுத்தி உரியன செய்து வருவது அதன் மற்றொரு செயலாகும்.

அல்லாஹ்வின் அருளால் ஜமாஅதே இஸ்லாமி அதன் இந்த உயரிய நோக்கத்திலிருந்து என்றுமே மாறிச் சென்றிடவோ, நிதானத்தையிழந்து செயற்படவோ இல்லை என்பதை அதன் வரலாற்றுண்மைகளை திரிபு படுத்தாது பார்ப்போர் உணர்ந்து கொள்ள முடியும். அதுபோல், அல்ஹஸனாத் பத்திரிகையும் என்றுமே உண்மை, உறுதி, நிதானம் என்பவற்றில் தவறிடாது தன் கருத்துக்களைக் கூறி வந்துள்ளது என்பதை மறுக்க முடியாது.

கொடுங்கோலன் ஷாவைத் தொலைத்து விட்டு இஸ்லாமிய அமைப்பை உருவாக்க ஈரானின் தற்போதைய ஆட்சியாளர்கள் கடும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த வேளையிலும், அதன் பின்னரும், ஜமாஅத் தனது ஆதரவை வழங்கத் தவறவுமில்லை; தயங்கவுமில்லை. ஜமாஅத்தின் ஆதரவின் அளவையே தனது அளவாகவும் கொண்டு அல்ஹஸனாத் ஆக்கங்களை பிரசுரித்தது.

இதன் கருத்து ஈரானிய ஆட்சியாளரின் எல்லாக் கருத்துக்களையும் நம்பிக்கைக் குரிய அம்சங்களையும் ஜமாஅத் ஏற்றுக் கொண்டு விட்டது என்பதல்ல. ஜமாஅத் ஈரானிய இஸ்லாமிய புரட்சிக்குக் கொடுத்த ஆதரவு 1981 மார்சு மாதம் நடைபெற்ற ஜமாஅத் உறுப்பினர் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் படியேயன்றி வேறில்லை. அன்றைய கூட்டத்தில் ''சுன்னத்வல் ஜமாஅத் அமைப்புக்கு மாறில்லாத வகையில் ஜமாஅத் தனது ஆதரவை ஈரானுக்கு வழங்கும்'' என்று முடிவெடுத்தது என்பதுகுறிப்பிடத்தக்கது.

ஈரானிய இஸ்லாமிய புரட்சிக்கு மட்டுமன்றி, உலகின் எத்திக்கில், எத்தகைய நல்லம்சத்துக்காக எவர்கள் போராடுகின்றார்களோ அவர்கள் அனைவருக்கும் சன்மார்க்க வரம்பிற்கு உட்பட்ட விதத்திலும், தனது இலட்சியத்திற்குப் பாதகம் ஏற்படாத வகையிலும் ஜமாஅத் தனது ஆதரவை வழங்க என்றுமே பின் நிற்காது. அது போலவே அல்ஹஸனாத்தும் நடந்து கொள்ளும், இன்ஷா அல்லாஹ்

ஜமாஅத்தின் கட்டுப்பாட்டுக்கு இணக்கமின்றி நடந்து கொண்ட சகோதரர்கள் எஸ். ரீ. உஸ்மான் சாஹிப், அல்ஹாஜ் பீ. எம் முஹம்மத் யூசுஃப், கே. அபூபக்கர் ஆகியோர் ஜமாஅத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இதன் பின்னர் ஜமாஅத்திற்கு எதிரான துண்டுப் பிரசுரங்கள் வெளிவந்தன என்பதை அல்ஹஸனாத் வாசகர்கள் அறிந்திருக்கக்கூடும்.

இன்ஷாஅல்லாஹ், அல்லாஹ்வும் ரசூல் (ஸல்) அவர்களும் வழிகாட்டிய முறையில் ஜமாஅத் தனது பணியைத் தொடரும் அதே வேளையில், சுன்னத்வல் ஜமாஅத் அமைப்புக்கு முரணான எதற்கும் ஆதரவு வழங்கவும் மாட்டாது.

Printed at I. P. C. Printing Press, 320, N. M. M. Ishak Mawatha, Colombo-9.
for Islamic Publication Centre, 204/1, Dematagoda Road, Colombo-9.
Registered as a Newspaper at the G. P. O. Sri Lanka under No. QB 8907/78